# ஜாதகமும்
# திருமணப் பொருத்தங்களும்



பிரேமா™ பிரசுரம்

# முன்னுரை

விண்வெளி விஞ்ஞானத்தை ஆதாரமாகக் கொண்டும் கணித சாஸ்திரத்தைக் கையாண்டும் உருவாக்கப்பட்டது ஜோதிடம். கோள்களின் சஞ்சாரங்களை முன்கூட்டியே துல்லியமாக கணக்கிட நம்மால் முடிகிறது. இதற்கு ஓர் எளிய உதாரணம் நிகழ இருக்கும் சந்திர சூரிய கிரணங்களை முன் கூட்டியே கணிப்பது. கிரகங்களின் அ சைவுகளை கணக்கிட்டு அறிய இயலும் நம்மால் அக்கிரகங்களின் கதிரியக்கத்தினால் மனிதர்களுக்கு தோன்றக்கூடிய நிகழ்வுகளையும், கணக்கிட்டு அறிய முடியும். கணிதம் பொய்ப்பதில்லை. விடை ஒன்றே யானாலும் கையாளும் விதம் மனிதருக்கு மனிதர் மாறுபடுவதினால் விடையும் வேறுவேறாகத் தோன்ற லாம்.

ஜோதிட சூட்சமம் அறியாதவர்களும் திருமணப் பொருத்தம் பார்த்து எளிதில் தேர்வு செய்திடும் வகையில் பல அட்டவணைகள் தசவிதப் பொருத்தங்களில் உட்புகுத்தப்பட்டுள்ளது. திருமணப் பொருத்தத்தை மேலும் துல்லியமாக கணித்திட ஆண், பெண் ஜாதக பலன்கள் உள்அடங்கிய இரண்டாம் பகுதி உதவிடும். அனுகூலமில்லாத ஜாதக அமைப்புகளைக் கொண்டவர்கள், திருமணத் தடை நீக்கிடும் இறைவனின் அருளை பெறுவதற்கான ஸ்தோத்திரங்கள் இந்நூலின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.

வாசக அன்பர்கள் நம்பிக்கையுடன் இந்நூலைப் பயன்படுத்தி மணமக்களின் திருமண வாழ்க்கையில் வளம் சேர்த்திட எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ரவி ராமநாதன்

# பொருளடக்கம்

1. திருமணப் பொருத்தங்களை ஏன் பார்க்க வேண்டும்!

## முதல் பகுதி

1. பருவ வயதில் திருமணம் நடைபெறும் பாக்கியமிருக்கிறதா?
2. பெயர் ராசிப் பொருத்தங்கள்
3. தசவிதப் பொருத்தங்கள் என்றால் என்ன?
4. தினப் பொருத்தம்
5. கணப் பொருத்தம்
6. மாஹேந்திரப் பொருத்தம்
7. ஸ்திரீ தீர்க்கப் பொருத்தம்
8. யோனிப் பொருத்தம்
9. ராசிப் பொருத்தம்
10. ராசியதிபதிப் பொருத்தம்
11. வசியப் பொருத்தம்
12. ரஜ்ஜூப் பொருத்தம்
13. வேதைப் பொருத்தம்
14. பொருத்தங்களும் விதி விலக்குகளும்
15. நாடிப் பொருத்தம்

## இரண்டாம் பகுதி

1. ஜாதகப் பொருத்தங்கள்
2. உங்களுக்கு எந்த வயதில் திருமணம் நடக்கும்
3. தாமதித்து திருமணமாகும் ஜாதக அமைப்புகள்
4. புருஷ ஜாதகப் பலன்கள்
5. உங்களுக்கு மனைவி என்று ஒருத்தி அமைவாளா?
6. ஆண் ஜாதகத்தைக் கொண்டு அவரது மனைவியைப் பற்றியறிதல்
7. ஸ்திரீ ஜாதகப் பலன்
8. ஒரு ஸ்திரீயின் ஜாதகத்தைக் கொண்டு அவளது கணவனைப் பற்றியறிதல்

## மூன்றாம் பகுதி

1. செவ்வாய் தோஷம் மற்றும் பரிகாரம்
2. விவாக சுப முகூர்த்தங்கள்
3. திருமணம் விரைவில் நிகழ



# 1. திருமணப் பொருத்தங்களை ஏன் பார்க்க வேண்டும்

இன்றைய அவசரம் நிறைந்த உலகத்தில், பல ஜனங்கள் ஜாதக ரீதியாக, திருமணம் செய்வதற்குரிய தசவிதப் பொருத்தங்களையும் பார்த்து பரிசீலித்த பிறகே திருமணங்களை நடத்துவதுமில்லை, திருமணங்கள் செய்து கொள்வதுமில்லை. மேலை நாடுகளில் மத சம்பிரதாயங்களே பின்பற்றப்பட்டு வருகிறது. கீழ்த்திசை நாடுகளில் மட்டுமே, கலாச்சாரத்திலும் பண்பாட்டிலும் பாரம்பரிய மரபுகளிலும் சிறப்புடைய தேசங்களில்தான் திருமணப் பொருத்தங்களைப் பார்த்து பரிசீலித்த பிறகே, பெரும்பாலான திருமணங்கள் நடத்தப்பெறுகின்றன. இத்தகைய நம்பிக்கை, மக்களிடையே பரவியதற்கும் பழகியதற்கும் முக்கிய காரணம், ஜோதிட ரீதியாக தசவிதப் பொருத்தங்களையும் ஒழுங்காகப் பரிசீலித்துப் பார்த்து, நிச்சயித்துத் திருமணம் செய்து கொண்டவர்களின் இல்லற வாழ்க்கைதான் இன்பமும், அன்பும், அறநெறியும் கற்பு ஒழுக்கமும் கொண்டவையாகவும் சர்வ மங்கள சந்தான சௌபாக்கியங்கள் நிறைந்ததாகவும் இருப்பதே. இதை மனிதவர்க்கம் அனுபவ ரீதியாக பல நூற்றாண்டுகளாக அறிந்து கொண்ட பிறகே, இத்தகைய திருமணப் பொருத்தங்களைப் பார்க்கும் பழக்கம், மிகவும் அவசியமாகி, அனுபவமாகிவிட்டது.

உலகம் எங்கிலுமுள்ள எல்லா நாடுகளிலுமே, பெற்றோர்களும் உறவினர்களும் அவரவர் சமூகத்தினரும் ஒருங்கே ஒப்புக் கொள்ளும் வகையில்தான் திருமணப் பருவ வயதினையடைந்த ஆண்களுக்கும், பெண்களுக்கும் திருமணங்கள் நடைமுறையில் நிகழ்ந்து வருகின்றன. எந்த மதத்தினராயினும், எந்தத் தேசத்தவராயினும், எந்த

குலத்தினராயினும் இந்த விதிமுறையே, உலகம் எங்கும் நிகழ்ந்து வரும் நடைமுறை நியதியாகும்.

உலகத்திலேயே, மிகப் பழைமையான கலாச்சாரப் பண்பாட்டுப் பெருமையுடையது நமது பாரத தேசம். இந்தத் தேசத்தில் இமயம் முதல் குமரி வரையிலுள்ள எந்த மொழி பேசும் மாநிலங்களாயினும் அங்கெல்லாம் ஜோதிட ரீதியாக தசவிதப் பொருத்தங்களையும் பார்த்துப் பரிசீலித்த பிறகே திருமணங்கள் நிச்சயிக்கப் பெறுகின்றன. இந்த விஷயத்தில் கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் கூட ஜோதிட ரீதியாகத் திருமணங்களை நிச்சயிப்பதற்கும் பேசுவதற்கும் பழகி விட்டனர்.

"பருவத்தே பயிர் செய்" என்ற பழமொழி, பயிர்த் தொழிலுக்கு மட்டும் உரியதல்ல. பருவ வயதில் திருமணஞ் செய்து, சந்ததி விருத்தியை அடிப்படையாகக் கொண்ட திருமணத்திற்கும் ஏற்றதே!

நமது முன்னோர்கள், ஜோதிட ரீதியாகத்தான், தத்தமது பூர்வ புண்ணியப் பலாபலன்களைச் சரிவரத் தெரிந்து கொண்டு, அதற்கேற்பவே தத்தமது கடமைகளையும் விவாகம் உட்பட சகல விஷயங்களையும் வேத முறைப்படி செய்து வாழ்ந்து வந்தனர்.

மனிதரின் எதிர்கால வாழ்க்கையைப் பற்றிச் சரிவரத் தெரிந்து கொள்வதற்கு இன்றைய நவீன விஞ்ஞானம் எந்த வழி முறையையும் அளிக்கவில்லை. எதிர்காலத்தைப் பற்றிய சகல விஷயங்களையும் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கு ஜோதிட சாஸ்திரத்தைத் தவிர வேறு எந்த சாஸ்திரமும் உலகத்திலேயே கிடையாது. ஜோதிட சாஸ்திரமே முழுக்க முழுக்க விஞ்ஞான சாராம்சமுடையதாகும். மனித வாழ்வுக்கு மிகவும் பயனளிப்பதாக விளங்குவதாலேயே பாமரர்களும் பண்டிதர்களும் ஆஸ்திகர்களும் நாஸ்திகர்களுங்கூட ஜோதிடத்தையே நம்புகிறார்கள்.

திருமணஞ் செய்வதற்கு, ஜாதக பலன்களும் ஜாதகப் பொருத்தங்களும் மணமகனுக்கும் மணமகளுக்கும் பொருந்தியிருப்பதுதான் முக்கியமா? நட்சத்திரங்களைக் கொண்டு பார்த்துப் பரிசீலிக்கும் தசவிதத் திருமணப் பொருத்தங்கள்தான் முக்கியமா? இவை இரண்டுமே தான் அனுகூலமாகவும், யோகமாகவும் இருக்க வேண்டுமா? அவ்வாறில்லாமல் ஒரு முறைப்படி வதூவரர்களின் ஜாதக ரீதியாகச் சகல பலன்களும் திசாபுத்திகளின் யோகமும் அனுகூலமாக இருந்து மற்ற முறைப்படி நட்சத்திரங்களைக் கொண்டு பார்க்கும் முறைப்படி, தசவிதப் பொருத்தங்களில் சிலவோ, அல்லது பலவோ அனுகூலமாக இல்லாவிட்டால் திருமணம் செய்யலாமா, செய்யகூடாதா? நட்சத்திர தசவிதப் பொருத்தங்களும் அனுகூலமாகத்தான் இருக்க வேண்டுமா? ஆண் பெண்களின் ஜாதகங்களைப் பரிசீலித்துப் பார்க்கும் போது, யோகங்கள் கெட்ட பலன்களை அளிக்கக் கூடிய அவயோகமாக இருந்துவிடும் போது, தசவிதப் பொருத்தங்கள் யாவுமே அனுகூலமாக இருந்தால் திருமணம் செய்து வைக்கலாமா? கூடாதா? ஜாதகப் பொருத்தத்துக்கும் தசவிதப் பொருத்தங்களின் பலன்களுக்கும் இடையேயுள்ள சம்பந்தா சம்பந்தம், யோகம், தராதம்மியம் என்ன? இவற்றால் ஏற்படக்கூடிய பலன்கள் நல்லவையா? தீயவையா? இதுபோன்ற கேள்விகள் எழக்கூடும்.

விவாகப் பொருத்தங்களைப் பார்த்துப் பரிசீலித்த பிறகே தமது பெண்ணுக்கோ அல்லது பிள்ளைக்கோ திருமணம் செய்விக்கவேண்டும் என்ற எண்ணமுடைய பெற்றோர்களும், பெரியோர்களும், உறவினர்களும் இத்தகைய ஜோதிட ரீதியான விஷயங்களை மிக நன்றாக அறிந்தவர்களைக் கொண்டுதான் ஜாதக ரீதியாகவோ, தசவிதப் பொருத்தங்களையே பார்த்துப் பலன்களைத் தெரிந்து கொண்டு அதற்குப் பிறகு தான் திருமணங்களை நிச்சயித்து நடத்த வேண்டும். இதுவே சாஸ்திர சம்பிரதாயமானது. சாஸ்திர சம்மதமும் சமூக சம்மதமும் சட்டரீதியான ஒப்புதலும் கொண்ட ஒழுங்கான

திருமணமே, சிறப்புக்குரிய திருமணமாக, நமது மக்கள் சமுதாயத்தினரால் கருதப் பெறுகிறது. இத்தகைய திருமணஞ் செய்து கொள்ள விழையும் வதூவரர்கள்தான் இல்வாழ்க்கையில் சகலவித சுபமான பலன்களையும் அடைய முடியும்.

எனவே இதுபோன்ற சாஸ்திர சம்பிரதாயமான விவாகப் பொருத்தங்களைச் சரியாக ஆராய்ந்தறியாமல் தத்தமது மனப் போக்குப்படி, பையனுக்கும் பெண்ணுக்கும் மனப் பொருத்தம் இருக்கிறது, இதுவொன்றே போதாதா? என்று நினைத்து திருமணத்தை நடத்தி வைத்துவிட்டால், மணமக்களின் எதிர்கால வாழ்க்கை அமைதியும், அன்பும், இன்பமும் நிறைந்ததாக அமைந்துவிடும் என்று உறுதிபடுத்த முடியாது. அதற்காக ஜோதிடரீதியாக சரிவர ஆராய்ந்து பார்க்காமல் திருமணத்தை நடத்திவிட்டு, ஜோதிட சாஸ்திரத்தையே குறை கூறுவதனால் எந்தவிதப் பயனுமிராது.

திருமணஞ் செய்ய வேண்டிய வதூவரர்களின் மாங்கல்ய பாவம், ஆயுள்பாவம், ஸ்திரீ புருஷ ஜாதக அமைப்பின்படி பலமாகவும் யோகமாகவும் இருந்து விட்டால் அதை மாற்றுவதற்கு எந்தத் திசாபுத்திகளாலும் நட்சத்திர தசவிதப் பொருத்தங்களாலும் முடியாது.

உதாரணமாக தீர்க்காயுளுடைய ஜாதகருக்கு வாலிபத்திலேயே மாரகதிசை வருமானால், அந்தத் திசை மாரகத்தைச் செய்யச் சக்தியற்றதாகிவிடும்! ஆனால் மாரகம் இல்லை என்றாலும் அந்தத் திசையில் ஜாதகருக்கு மாரகத்துக்குச் சமமானப் பலவித இன்னல்களும் இடையூறுகளும் ஏற்படக்கூடும். இப்படித்தான் அனுபவத்தில் நிகழ்கின்றன.

இதுபோலவே, ஒரு பருவ மங்கையின் ஜாதகத்தில் ஜாதகரீதியாக மாங்கல்ய பாவம் பலமாக இராதபோது வதூவரர்களின் தசவிதத் திருமணப் பொருத்தங்களில் மிக முக்கியமான ரஜ்ஜுப் பொருத்தப்படி "ரஜ்ஜுர் மாங்கல்ய விர்த்திஸ்யாத்" என்ற சுலோகப்படி ரஜ்ஜுப் பொருத்தம் சரியாக இருந்துவிட்டால் மாங்கல்யம் விருத்தியடையும்

என்றிருக்கிறது. அதையே ஆதாரமாகக் கொண்டு, ஜாதகத்தில் குறிப்பாக செவ்வாயோ, சனியோ, அஷ்டமத்தில் இருப்பதைப் பொருட்படுத்தாமல் கவனிக்காமல் திருமணம் செய்விக்கக் கூடாது. அப்படிச் செய்தால், நிச்சயம் ஏதாவது ஒரு தோஷம் ஏற்படத்தான் கூடும். சுமங்கலியாக அவள் வாழ அனுகூலமில்லை. இது அனுபவம் உலகினருக்குக் கற்றுத் தந்த பாடம். இத்தகைய அனுபவங்களால்தான், நமது தேசத்து மக்கள் ஜோதிட சாஸ்திரத்தை நம்புகிறார்கள்.

இப்படியிருக்கும்போது, திருமணஞ் செய்வதற்கு தசவிதப் பொருத்தங்களைப் பார்க்க வேண்டியது அவசியமில்லையா? இப்படியானால் நமது பெரியோர்கள் எதற்காக இத்தகையத் தசவிதப் பொருத்தங்களையும் கண்டறிந்து அவற்றின் பலன்களையும் எழுதி வைக்க வேண்டும்? என்ற கேள்வி எழலாம்.

ஜாதகம் ஒரு மங்கையின் கூந்தல் என்றால், அவள் அந்தக் கூந்தலை அலங்கரித்துக் கொள்ளும் மலர்களைப் போன்றதுதான் தசவிதப் பொருத்தங்கள். ஜாதகத்தோடு, திருமணப் பொருத்தங்களும் பொருந்தியிருந்தால், பலன்கள் சிறப்பாக அமைய முடியும். எனவே, ஜாதக பலனும் தசாபுத்தி யோகமும், சுமங்கலியான, சௌபாக்கியவதியின் சிரசையும் கூந்தலையும் போன்றவை அந்தச் சிரசையும் கூந்தலையும் அலங்கரிக்கும் புஷ்பங்களைப் போன்றவைதான் தசவிதப் பொருத்தங்கள்.

ஆனால் ஜாதகமே இல்லாதவர்களுக்கும் எழுதி வைத்துக் கொண்டு இராதவர்களுக்கும் இந்தத் தசவிதப் பொருத்தங்கள் தான், பெரிதும் பயன்படக் கூடியவை. நட்சத்திரத்தை உட்பிரிவாகக் கொண்டதே ராசி. அந்த ராசியே சந்திரனின் இடமாகும். சந்திரனே உடலுக்கும், வாழ்வுக்கும் முக்கியம். உயிரோடு வாழ்வது இயற்கை வழி! சேர்ந்து வாழ்வதைத்தான், நட்சத்திர பொருத்தங்கள் அறிவிக்கின்றன. நடைமுறை வாழ்வை அறிவிப்பது ராசிபலன். கோட்சார பலன்களுக்கும் அதுவேதான்

ஆதாரமே தவிர, லக்கின ரீதியான பலன்கள் ஆதாரமாவதில்லை.

இந்தத் தசவிதப் பொருத்தங்களையும், ஒருவருடைய பெயர் ராசியைக் கொண்டும் கண்டறியலாம். கன்னிகையின் பெயரையும் கூடத் திருமணஞ் செய்யவிருக்கும் காலத்தில் மாற்றி வைத்துக் கன்யாதானம் செய்யலாம் என்று சிலர் சொல்கிறார்கள். இது முறையற்ற செயல் சாஸ்திர சம்மதமற்ற செயல்! சட்ட ரீதியாகவும் குற்றமான செயலாகும்.

லௌகீக ரீதியாக, திருமணம் செய்து கொள்ளவிருக்கும் வாலிபனின் சொந்தத் தாய், நேர் தங்கை தமக்கையரின் பெயராகவே அவனுக்கு வாழ்க்கைப் படவிருக்கும் கன்னிகையின் பெயரும் இருந்தால் பெரியோர்கள் சிலர் லௌகீக ரீதியில், அந்தக் கன்னிகையின் பெயரை, திருமண வைபவத்தின் போது, கன்னிகையின் கோத்திரமும் சூத்திரமும் மாறும் கல்யாண சமயத்தில் மாற்றி வைத்துக் கொண்டு சங்கல்பித்துக் கொண்டு, அந்தக் கன்னிகையை அந்தப் புருஷன் தனது தர்மபத்தினியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கருதுகிறார்கள். சிலர் அப்படியே செய்தும் வருகிறார்கள். ஒரு குடும்பத்தில் பிறந்த நான்கு சகோதரிகள் நான்கு கோத்திரமாக மாறி வாழ்க்கைப்பட வேண்டியிருக்கிறார்கள். ஆனால் நான்கு சகோதரர்கள் ஒரே கோத்திரமாகத்தான் என்றுமே இருக்க முடிகிறது. இதனால் கன்னியரின் பெயரை மாற்றலாம் என்று கருதுகிறார்கள்.

இப்படிச் செய்வதை, வரதட்சணையை மறைமுகமாக வாங்கும் இந்தக் காலத்தில் சிலர் ஏற்றுக் கொள்கிறார்கள்.

பெயர் ராசியைக் கொண்டே திருமணப் பொருத்தங்களைப் பார்க்கலாம். ஜனன காலத்திய விவரங்களான நாள், நட்சத்திரம், பிறந்த நேரம், ஜாதகம், ஜன்ம நட்சத்திரம் ஆகிய எதையுமே அறியாதவர்களும், தமது பிள்ளைக்கோ, பெண்ணுக்கோ திருமணம் செய்விக்க வேண்டிவரும்போது, ஸ்திரீ புருஷர்களின்

பெயர் ராசிப்படிக்கு, திருமணப் பொருத்தம் பார்த்துச் சொல்லும்படி ஜோதிடர்களை கேட்பதுண்டு. பெயர் ராசிப்படி பொருத்தங்கள் சரியாக வரவில்லை என்றால், பொருத்தங்கள் பொருந்தும்படியான பொருத்தமுள்ள வேறு ஒரு பெயரை தேர்ந்தெடுத்துச் சொல்லுங்கள் என்று கூட சில பெற்றோர்கள் கேட்கிறார்கள். ஜோதிடர்கள் சிலரும் எல்லாப் பொருத்தங்களும் சரியாகப் பொருந்தும் வகையில் புதிய பெயரை வைத்துவிடுகிறார்கள். அந்தப் புதிய பெயரின்படி தசவிதப் பொருத்தங்கள் சிறப்பாக அமைவதாகக் காட்டப் பெற்று திருமணங்கள் நடைபெறலாம்? ஆனால் அந்த தம்பதிகள் சிறப்பாக வாழ்வார்களா? வாழ்கிறார்களா? என்பது ஆராய்ச்சிக் குரிய விஷயம்தான். ஆனால் இப்படிச் செய்வது ஜோதிடருக்கும் முறையல்ல! பெற்றோருக்கும் சரியல்ல!

வதூவரர்களுக்கு ஒரே நட்சத்திரமாக இல்லாமல் வெவ்வேறு நட்சத்திரமாக இருக்கும்போது தான், அதைக் கொண்டு தசவிதப் பொருத்தங்களையும் பார்க்க வேண்டி வருகிறது. ஜாதகமே இல்லாத போதிலும் பெயர் ராசிப்படி தசவிதப் பொருத்தங்கள் பார்க்கப்படுகின்றன.

எனவே, தசவிதப் பொருத்தங்கள் என்றால் என்ன? அவற்றின் பலன்கள் என்ன? அவற்றை எப்படி கணிப்பது? என்பவைகளைக் கவனிப்போம். அதற்கும் முன்னதாக உங்களுக்குத் திருமணஞ் செய்து கொண்டு, இல்லற வாழ்க்கை நடத்துவதற்குரிய பாக்கியமிருக்கிறதா விரைவில் திருமணம் நடக்குமா? தாமதமாகுமா? உங்களுக்கென்று மனைவி ஒருத்தியமைவாளா? என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா? அதை உங்கள் ஜாதகத்தில் அமைந்துள்ள கிரகங்களை அனுசரித்தே அறிந்து கொள்ளலாம்.

# முதல் பகுதி

## 1. பருவ வயதில் திருமணம் நடைபெறும் பாக்கியமிருக்கிறதா?

உங்களுக்கு திருமணம் செய்து கொண்டு, இல்லற வாழ்க்கையை நடத்துவதற்குரிய பாக்கியம் இருக்கிறதா? இல்லையா? என்பதை உங்களுடைய ஜாதகத்தைப் பார்த்துப் பரிசீலித்துத் தெரிந்து கொண்ட பிறகுதான், திருமணத்திற்குரிய தசவிதப் பொருத்தங்களையும் நிமித்தத்தையும் பார்த்து திருமணத்திற்கு நிச்சயம் செய்ய வேண்டுமே தவிர திருமணப் பொருத்தங்களையெல்லாம் அலசி ஆராய்ந்து பரிசீலித்துப் பார்த்துக் கொண்டு இருப்பது, காலத்தை வீணாகக் கழிப்பதாகும். ஒருவருக்கு விவாகமே நடைபெறாது என்று அவரது ஜாதகத்திலமைந்துள்ள கிரகங்களின் நிலைகளிலிருந்து அறிந்து கொண்டால், வீணாக மனக்கோட்டைகள் கட்டிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமிராது. ஒவ்வொன்றாக எதிர்பார்த்து, எதிர்பார்த்து, நெருங்கி வருவதுபோல எண்ணுவதும் பிறகு ஏமாற்றமடைந்து மனமுறிந்து வருத்தமும், வேதனையும் அடைவதையும் தவிர்க்கலாம். தனக்குத் திருமணமாவதற்கான கிரகங்களின் அனுகூல அமைப்பு இல்லை என்று தெரிந்துவிட்டால், தன் மனதைத் தானாகவே சமாதானப்படுத்திக் கொண்டு, இதற்கான பரிகாரமான தெய்வ வழிப்பாட்டை தீவிரப் படுத்திக் கொள்ளலாம். இறைவன் அருளால் கிரக சாந்தியடைந்து தடைகள் நீங்கி திருமணம் கைகூடும்.

உங்களுக்கு சில வருஷங்களுக்குப் பிறகுதான் திருமணமே நடைபெறும் என்றால், வீணாக இளமையில் இருந்தே திருமணத்தை எதிர்பாராமலும், ஏமாறாமலும் திருமணம் செய்து கொள்வதற்குரிய நல்ல காலமும் நல்ல நாளும் நல்ல நேரமும் வரும் வரையில் வேதனையில்லாமலும் யோசனைகள் செய்யாமலும் நீங்கள் உங்கள் வாழ்க்கையின் இதர விவகாரங்களில் கவனத்தை செலுத்தலாமல்லவா!

திருமணம் விரைவிலேயே நடைபெறும் என்று உங்கள் ஜாதகரீதியாக நன்றாகப் புலப்பட்டால், உடனடியாக ஆண் பெண் ஆகிய இருபாலரின் ஜாதகங்களையும் பொருத்தங்களுக்காகவும், பிராப்தத் திற்காகவும் சோதிக்கலாம்.

ஆகவே திருமணம் செய்து கொள்வதற்குக் காலமும் நேரமும், கிரகங்களின் நிலைமையும் உதவுகின்றனவா என்பதை முதலில் ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும் என்பது மிகவும் அவசியமாகும்.

வாலிபப் பருவத்திலேயே திருமணம் நடப்பதுதான் இல்லறவாழ்க்கையை இன்பகரமாக நடத்துவதற்கு மிகவும் இன்றியமையாததாகும்.

எனவே, பருவ வயதிலேயே திருமணம் நிகழ்வதற்கும், இளமையிலே இல்லற இன்பத்தை அனுபவிப்பதற்கும் யோகமிருக்கிறதா என்பதை உங்கள் ஜாதகத்தை பார்த்தே தெரிந்து கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| **மீனம்**<br>குரு–ஆட்சி<br>சுக்–உச்சம்<br>புதன்–நீச்சம் | **மேஷம்**<br>செவ்–ஆட்சி<br>சூரி–உச்சம்<br>சனி–நீச்சம் | **ரிஷபம்**<br>சுக்–ஆட்சி<br>சந்–உச்சம்<br>ராகுகே–நீச்சம் | **மிதுனம்**<br>புதன்–ஆட்சி |
| **கும்பம்**<br>சனி–ஆட்சி | **சக்கரம் 1**<br>**கிரகங்களின் ஆட்சி**<br>**உச்சம் நீச்சங்களை**<br>**காட்டும் சக்கரம்** | | **கடகம்**<br>சந்–ஆட்சி<br>குரு–உச்சம்<br>செவ்–நீச்சம் |
| **மகரம்**<br>சனி–ஆட்சி<br>செவ்–உச்சம்<br>குரு–நீச்சம் | | | **சிம்மம்**<br>சூரி–ஆட்சி |
| **தனுசு**<br>குரு–ஆட்சி | **விருச்சிகம்**<br>செவ்–ஆட்சி<br>ராகு,கே–உச்சம்<br>சந்–நீச்சம் | **துலாம்**<br>சுக்–ஆட்சி<br>சனி–உச்சம்<br>சூரியன்–நீச்சம் | **கன்னி**<br>புதன்–உச்சம்<br>ஆட்சி<br>சுக்–நீச்சம் |

1. சந்திரன் அல்லது சுக்கிரன் அல்லது இரு கிரகங்களுமே நற்பயன்களை அளிக்கக்கூடிய ராசிகள் எனக் கூறப்படும் ரிஷபம், கடகம், விருச்சிகம், மீனம், தனுர் ராசியிலிருந்தாலும்.

2. அல்லது உங்கள் ஜன்மலக்கினத்திற்கு ஏழாவது ஸ்தானம் மேற்கூறிய ராசிகளில் ஏதாவது ஒன்றாயிருந்தாலும்.

3. குரு அல்லது சுக்கிரன் உங்கள் லக்கினத்துக்கு ஏழாம் பாவத்திலிருந்தாலும்,

4. சந்திரனுடன் சேர்ந்தோ லக்கினத்திலோ அல்லது ஐந்து, பத்து, பதினொன்றாவது வீடுகளில் குரு வீற்றிருந்தாலும்,

5. சந்திர ராசிக்கோ, லக்கினத்துக்கோ ஒன்று, ஐந்து, பத்து, பதினொன்றில் சுக்கிரனாகிய களத்திரகாரகன் வீற்றிருந்தாலும்,

6. சந்திரனும் சுக்கிரனும் சனியின் அசுப பார்வை பெறாமல் சனியைவிட வலிமை பெற்றிருந்தாலும்.

7. லக்கினாதிபதியும் ஸப்தம் ஸ்தானாதிபதியும் கூடி சுபவர்க்கம் ஏறியிருந்தாலும்.

8. லக்கினாதிபதியும் ஏழுக்குடையவரும் மூன்று, பதினொன்று, ஐந்து, ஒன்பது, ஏழு ஆகிய ஸ்தானத்தில் இருந்தாலும்,


9. ஆணின் ஜாதகத்தில் சந்திரனும், சுக்கிரனும் சுபபலனைப் பெற்றிருந்தாலும்,

| | | | |
|---|---|---|---|
| **12-மிடம்** விரய ஸ்தானம் | **1-மிடம்** லக்கினம் ஜென்மஸ்தானம் | **2-மிடம்** தனம், வாக்கு, குடும்பஸ்தானம் | **3-மிடம்** சகோதர ஸ்தானம் |
| **11-மிடம்** லாப ஸ்தானம் | **சக்கரம் 2** | **ஸ்தான பாவம்** | **4-மிடம்** மாத்ரு ஸ்தானம் |
| **10-மிடம்** கர்ம ஸ்தானம் | | | **5-மிடம்** புத்ர ஸ்தானம் |
| **9-மிடம்** பாக்கிய ஸ்தானம் | **8-மிடம்** ஆயுள் ஸ்தானம் | **7-மிடம்** களஸ்திர ஸ்தானம் | **6-மிடம்** ரோக ஸ்தானம் |

10. பெண்ணின் ஜாதகத்தில் சூரியனும் செவ்வாயும் சுபபலனைப் பெற்றிருந்தாலும்.

11. லக்கினத்திற்கோ, சந்திராலக்கினத்துக்கோ, இரண்டு, ஏழு, பதினொன்றில் சுபக்கிரகம் அமைந்திருந்தாலும்,


# குரு பார்வை சக்கரம்




12. அல்லது மேற்படி வீடுகளுக்குச் சுபகிரக சம்மந்தம் ஏற்பட்டாலும்,

13. லக்னாதிபதி வலுவடைந்திருந்தாலும் ஏழில் சுபர் இருந்தாலும் ஏழாவது வீட்டிற்கு உடையவர் உச்சம் பெற்றாலும்,


## சனி பார்வை சக்கரம்




14. ஏழாவது வீட்டிற்கு உடையவர், சுபர் வீடேறி சுக்கிரன் உச்சமான மீனத்திலோ 1 ஆட்சி வீடான ரிஷபம் அல்லது துலா ராசி ஸ்தானத்தில் இருந்தாலும்,

15. ஏழில் புதனும், ஏழாவது வீட்டுக்கு அதிபதி சுக்கிரனுடன் கூடினாலும்,


# செவ்வாய் பார்வை சக்கரம்




16. இரண்டாம் வீட்டில் சுக்கிரனும், ஏழாம் வீட்டின் அதிபதி 11வது வீட்டில் (லாபஸ்தானத்தில்) வீற்றிருந்தாலும்,

17. சுக்கிரன் லக்னமேற, லக்னாதிபதி ஏழில் இருப்பினும்,

# ராகு/கேது பார்வை சக்கரம்




18. லக்னாதிபதி ஏழிலும் ஏழாம் வீட்டோன், லக்னத்திலுமாக பரிவர்த்தனை பெற்று மதன கோபால யோக பலனைப் பெற்றிருந்தாலும்,

19. ஏழில் குரு உச்சம் பெற சுபருடன் கூடியிருந்தாலும், பார்த்தாலும்,

20. ஏழில் சுக்கிரன், தனது வீட்டிலேயே இருந்தாலும்,

21. சுக்கிரன் ஏழாம் வீட்டிற்கு அதிபதியாகி, இரண்டாவது பாவத்தில் இருந்தாலும்,

22. யாதேனும் ஒரு சுபகிரகம், லக்னத்துக்கோ ஏழாம் பாவத்திற்கோ மிகவும் அருகில் ஜனன காலத்தில் சஞ்சரித்து இருந்தாலும்,

23. ஏழுக்குடையவர் யாரானாலும் வலிமைபெற்று 2வது ஸ்தானமாகிய குடும்ப வீட்டிலிருந்தாலும்.

24. லக்னாதிபதி தசமகேத்திரம் என்னும் பத்தாம் வீடேறி இரண்டுக்குடையவர் பதினொன்றில் இருந்தாலும்,

25. சுபர்கள் ஒன்று, இரண்டு, ஏழாம் வீடுகளில் அமர, அந்த வீட்டினதிபதிகளுக்குச் சுபரின் சம்பந்தம் ஏற்பட்டாலும்,


26. இரண்டு, பதினொன்றாம் வீட்டதிபதிகள் ஒருவர் வீட்டில் மற்றொருவர் பரிவர்த்தனையாகி இருந்தாலும், கிரமமான, பருவ வயதில் எந்தவித சிரமமுமில்லாமல் விவாகம் நடைபெறும்.

## 2. பெயர் ராசிப் பொருத்தங்கள்

### *<u>பெயர் ராசி நாம நட்சத்திரங்கள்</u>*

இருவருக்குமே ஜாதகம் இல்லாவிட்டால், ஜன்ம நட்சத்திரமாவது தெரிந்திருந்தால் அதைக் கொண்டு நட்சத்திரங்களைப் பார்த்துத் திருமணத்தை நிச்சயித்துச் செய்விக்கலாம். அந்த ஜன்ம நட்சத்திரமுங்கூட தெரியாமற்போனால், வதூவரர்களின் பெயர்களைக் கேட்டு, அந்தப் பெயர்களின் முதல் எழுத்துக்களைக்

கொண்டு, பெயர் ராசிப்படி நாம நட்சத்திர ரீதியாக பொருத்தங்களைப் பார்த்து திருமணஞ் செய்விக்கலாம்.




பொருத்தம் பார்க்கும் போது, வதூவரர்களில் ஒருவருடைய ஜன்ம நட்சத்திரத்தையும் மற்றொருவரின் நாம நட்சத்திரத்தையும் ஒப்பிட்டுப் பொருத்தம் பார்க்கக் கூடாது. இருவருக்குமே பெயர் ராசிப்படியே பொருத்தங்களைப் பார்த்து திருமணஞ் செய்விக்கவேண்டும்.

## பெயர் ராசி பலன்களைப் பார்த்தறிய உபயோகப்படும் நாம நட்சத்திர (அட்சரங்கள்) அட்டவணை

| நட்சத்திர நாம எழுத்துகள் | நட்சத்திரம் | கணம் | மிருகம் | பட்சி | மரம் |
|---|---|---|---|---|---|
| 1. சு,சே,சோ,ல | அசு | தே | ஆண்குதிரை | இராசாளி | *எட்டிமரம் |
| 2. லி,லு,லே,லோ | பர | மா | ஆண்யானை | காக்கை | *நெல்லிமரம் |
| 3. அ,இ,உ,எ | கிரு | ரா | பெண் ஆடு | மயில் | அத்திமரம் |
| 4. ஒ,வ,வி,வு | ரோ | மா | ஆண்நாகம் | ஆந்தை | நாவல் மரம் |
| 5. வே,வோ,க,கி | மிரு | தே | பெண் சாரை | கோழி | *கருங்காலி |
| 6. கு,க,ஞ,ச | திரு | மா | ஆண்நாய் | அன்றில் | *செங்கா |
| 7. கே,கோ,ஹ,ஹீ | புனர் | தே | பெண்பூனை | அன்னம் | *மூங்கில் |
| 8. ஹு,ஹே,ஹோ,ட | பூசம் | தே | ஆண் ஆடு | நீர்காகம் | அரச மரம் |
| 9. டி,டு,டெ,டொ | ஆயி | ரா | ஆண்பூனை | கிச்சிலி | புன்னை மரம் |
| 10. ம,மி,மு,மே | மகம் | ரா | ஆண்எலி | ஆண்கழு | ஆலமரம் |
| 11. மோ,ட,டி,டு | பூரம் | மா | பெண்எலி | பெண்கழு | பலாமரம் |
| 12. டே,டோ,ப,பி | உத் | மா | ஆண் எருது | கிளுவை | அலரி |
| 13. பூ,ஷ,ந,ட | அஸ் | தே | பெண் எருமை | பருந்து | ஆத்தி மரம் |

| நட்சத்திர நாம எழுத்துகள் | நட்சத்திரம் | கணம் | மிருகம் | பட்சி | மரம் |
|---|---|---|---|---|---|
| 14. பே,பொ,ர,ரி | சித் | ரா | ஆண் புலி | மரங்கு | *வில்வம் |
| 15. ரு,ரே,ரோ,த | சுவா | தே | ஆண் எருமை | தேனீ | *மருத மரம் |
| 16. தி,து,தே,தோ | விசா | ரா | பெண் புலி | செங்குருவி | *விளாமரம் |
| 17. ந,நி,நு,நெ | அனு | தே | பெண் மான் | வானம் பாடி | மகிழமரம் |
| 18. நோ,ய,யி,யு | கே | ரா | ஆண் மான் | சக்ரவாகம் | பாரய் மரம் |
| 19. யே,யோ,ப,பி | மூலம் | ரா | பெண்நாய் | செம்பருந்து | மராமரம் |
| 20. பூ,த,ப,ட | பூரா | மா | ஆண் குரங்கு | பகண்டு | வஞ்சிமரம் |
| 21. பே,போ,ஜ,ஜி | உத் | மா | கீரி | வலியன் | பலாமரம் |
| 22. ஜு,ஜே,ஜோ,கா | திரு | தே | பெண்குரங்கு | நாரை | எருக்குமரம் |
| 23. க,கீ,கு,கெ | அவி | ரா | பெண்சிங்கம் | பொன்வண்டு | *வன்னிமரம் |
| 24. கோ,ஸ,ஸி,ஸு | சத | ரா | பெண்குதிரை | அண்டங்காக்கை | *கடம்புமரம் |
| 25. ஸே,ஸோ,த,தீ | பூரட் | மா | ஆண்சிங்கம் | உள்ளான் | தேமா |
| 26. து,ஸ்ரீ,ச,ஞ | உத்தி | மா | பெண்பசு | கோட்டான் | *வேம்பு |
| 27. தே,தோ,ச,சி | ரேவதி | தே | பெண்யானை | வல்லூறு | இலுப்பை மரம் |

* பால் இல்லாத மரங்கள்

முன் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ள நாமாட்சர அட்டவணையைப் பெயர் ராசி பார்ப்பதற்குரிய அட்டவணையாகப் பின்வருமாறு உபயோகிக்க வேண்டும்.

ஆண், பெண்களின் பெயர்களைக் குறித்துக் கொண்டு அந்தந்தப் பெயரின் முதல் எழுத்துக்களையும் தனித்தனியாகக் குறித்துக் கொண்டுவிட்டால், அந்தந்த அட்சரத்துக்கு என்ன நட்சத்திர பாதம் வருகிறது என்பதைத் தெரிந்து கொண்டு விடலாம். இந்தக் கிரமம் ஒரேவிதமாக ஒவ்வொரு தமிழ் வருடப் பஞ்சாங்கத்திலும் இருக்கும்.

உதாரணமாக, கேலிகோலிஹலிஹி இவைகளின் நாம நட்சத்திரம் புனர்ப்பூசம் என்றுள்ளது. இதில் கேதாரி, கேசவமூர்த்தி, இதுபோன்ற எந்தப் பெயராயினும் அந்தப் பெயரின் முதலெழுத்து "கே" என்றிருப்பின் அதுவே, அந்தப் பெயரின் நாம நட்சத்திரமாகிய

புனர்பூசத்தின் முதற்பாதமாகும். கோமளவல்லி கோவிந்தசாமி போன்ற பெயராயின் புனர்பூசத்தின் 2வது பாதமாகும் ஹம்சவல்லி, ஹரிநாதன் என்பது போன்ற பெயராயின் புனர்பூசத்தின் 3வது பாதமாகும், ஹிருதயநாதன், ஹிருதயலக்ஷ்மி, ஹிருதயநாதன் போன்ற பெயர்களாயின் புனர்பூசம் 4ஆம் பாதம் என்றும் பார்க்க வேண்டும். இவ்வாறே ஸ்திரீ புருஷரின் பெயரின் முதல் எழுத்தை ஆதாரமாகக் கொண்டு பார்ப்பதற்கே பெயர் ராசி (நாம நட்சத்திர)ப் பொருத்தம் பார்க்கும் முறை என்று பெயர்.

பொதுவாக, நமது நாட்டில் ஒரு குழந்தை பிறந்தவுடனேயே அந்தக் குழந்தை பிறந்த தினத்திலும் நேரத்திலும் அமைந்துள்ள நட்சத்திரம் எதுவோ, அதன் எந்தப் பாதமோ அதற்கு என்ன எழுத்து எதுவோ அந்த எழுத்தையே முதல் எழுத்தாகக் கொண்ட பெயரை

வைப்பது, நமது பெரியோர்களின் வழக்கம். இப்படி பெயர் வைப்பதால் அந்தப் பெயர் உலகில் புகழ்பெற்று விளங்கும் என்பதோடு, அவ்வப்போது பெயரைக் கொண்டே கோட்சார நட்சத்திர ரீதியான பலன்களைக் கொண்டு அவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்திச் செல்ல முடியும் என்று கருதி தமது குழந்தைகளுக்குப் பெயர் சூட்டி வந்தார்கள்.

இதைப் போலவே ஒவ்வொரு நட்சத்திரத்துக்கும் மிருகம், பட்சி, மரம், கணம் போன்றவைகளைக் குறித்துள்ளனர். இதன் உபயோகம் என்னவென்றால், நாம நட்சத்திரப்படி பசு, எருமை, ஆடு, குதிரைபோன்ற உபயோகமான மிருகங்கள் வருமாயின், அவர்களுக்கு அந்த நாற்கால் பிராணிகளாலும் அவற்றை உபயோகிக்கும் வாகனங்களாலும் நல்ல பலன்கள் உண்டாகும் என்று கருதினர். பாலுள்ள மிருகமாக வந்தால் கறவை மாடுகள், ஆடுகள் முதலியவற்றால் பால்பாக்கிய விருத்தியுண்டாகும் என்று நிச்சயித்தனர்.

மரங்கள் பாலுள்ளதாயும் பழமுள்ளதாயும் வந்தால், அவர்களுக்கு பழமரத் தோப்புகள், செழிப்பான பயிர்கள் மூலம் ஆதாயமுண்டாகும் என்றும் புத்திர பாக்கியம் உண்டாகும் என்றும் கருதினர். மரங்களில் பலா, புன்னை, நாவல், மகிழமரம், பலா, மா, இலுப்பை, சண்பகம், எருக்கு, வஞ்சி, அரசு, ஆல், அத்தி, மாதுளை, பாரய் என்ற பதினான்கு மரங்களும் பாலுள்ள மரங்களாகும், மற்றவை வைரமுள்ள மரங்களாகும். புருஷன் வயிரமுள்ள மரமாகவும் பெண் பால் மரமுமாயின் புத்திரனுண்டு. பெண் வைரமரமும் ஆண் பால்மரமாயின் மலடு. இருவரும் வைரமரமானால் புத்திரச் சேதம். இருவருமே பால்மரமானால் அதிக நலம்.

பட்சிகள் உபயோகமான பறவைகளாக வந்தால் அவற்றால் அனுகூலம் உண்டாகும் என்றும், புறா, கிளி, மயில் முதலியவற்றால் அவர்களுக்கு அனுகூலம் உண்டாகும் என்றும் கோழிப் பண்ணை வைக்க ஆதாயமுண்டாகும் என்று கருதினர். மயிலுக்கு கோழியும் வல்லூறும் பகை, வலியனுக்கு ஆந்தை பகை. ஆந்தைக்கு வலியன் பகை, வல்லூறுக்கு ஆந்தையைத் தவிர,

எல்லாமே பகை. இவ்வாறே புருஷனுக்கும் பெண்ணுக்கும் உள்ள பட்சி பகையில்லாதிருக்க வேண்டும்.

கணமும் இப்படியேதான். ஆணுக்கும், பெண்ணுக்கும் ஒரே கணமாயின் இருவருக்கும் உடலுறவுப் பொருத்தம், குணப் பொருத்தம் முதலியவை சமமாக இருக்கும். பெண்ணுடைய நட்சத்திரமும், புருஷனுடைய நட்சத்திரமும் ஒரே கணமானால் உத்தமம் இராட்சத இனமும் தேவகணமுமாயின் குடும்பத்தில் சிக்கல், சச்சரவுண்டாகும். பெண் இராட்சச கணமும் ஆண் மனுஷ கணமானால் மரணம் சம்பவிக்கும். பெண் மனுஷ கணமும் அதன் தேவ கணமுமாகில் மத்திமமான பலனாகும்.

ஜன்ம நட்சத்திர ரீதியாகவும், இந்த கணம், பட்சி, மரம் முதலியவற்றின் பலன்களையும் பார்ப்பது நாடெங்கும் உள்ள பழக்கமாக இருந்து வருகிறது.

இத்தகைய உபயோகத்திற்காகவே, இந்தப் பெயர் ராசி நாம நட்சத்திர அட்டவணை பயன்பட்டு வருகிறது.

## 3. தசவிதப் பொருத்தங்கள் என்றால் என்ன?

திருமணஞ் செய்ய வேண்டிய வதூவரர்களின், ஜாதக ரீதியான பலன்கள் வதூவரர்களுக்கு அனுகூலமாக இருக்கும்போதுதான், இந்தத் தசவிதப் பொருத்தங்களும் சுபமான பலன்களைத் தரும். ஸ்திரீ புருஷ ஜாதகங்கள் தோஷமுடையனவாக இருந்தால், இந்த நட்சத்திரப் பொருத்த பலன்கள் அனைத்துமே, அவை எவ்வளவுதான் அனுகூலமான ராஜயோகமான பலன்களை அளிக்கக் கூடியவையாக இருந்தாலும், அதனால் அனுகூலம் எதுவுமிராது. ஆகவே, ஜாதக ரீதியான பொருத்தங்களை மூலாதாரமாகவும் தசவிதத் திருமணப் பொருத்த பலன்களைத் துணையாகவுமே கருதி விவாகப் பொருத்தங்களைப் பரிசீலித்து நிச்சயித்துப் பயன்களைச் சொல்ல வேண்டும்.

ஜாதக பலன்கள், தசாபுத்தி பலன்கள், தசவிதப் பொருத்தங்கள் ஆகிய அனைத்துமே திருமணப் பொருத்தம் பார்ப்பதற்கு அவசியமானவைகள்தான். ஜாதக பலன்கள் ஒரு வீட்டின் அஸ்திவாரத்தைப் போன்றது. தசவிதத் திருமணப் பொருத்தங்கள் அந்த அஸ்திவாரத்தின் மீது அமைக்கும் வீட்டினையும் அந்த வீட்டின் அமைப்புகளையும் போன்றவையாகும்.

எனவே, திருமண விஷயத்தில் மூலாதாரமாகவுள்ள வதூவரர்களின் ஜாதகம், திசாபுத்தி, அந்தரம், சூக்ஷ்மம், பிராண திசை, கிரக பலன் வீக்ஷண்யம், சம்பந்தம், கோசார கால சக்கரம் போன்ற பத்துவித மிக முக்கியமான பலன்களுக்குப் பொருத்தமாக வதூவரர்களின் ஜன்ம நட்சத்திரங்களைக் கொண்டோ, அவர்களுடைய பெயர்களின் நாம நட்சத்திர ரீதியாகவோ, தசவிதத் திருமணப் பொருத்தங்களையும் அவற்றின் பலன்களையும் பார்த்துப் பரிசீலித்து பார்க்க, அவைகளும் நல்லவிதமாக அமைந்திருந்தால்தான் திருமணங்களைச் செய்விக்கலாம். இதுதான் ஜோதிட சாஸ்திரத்தை நம்புவோரும் ஜோதிடர்களும் செய்யவேண்டிய கடமைகள்.

ஜோதிட சாஸ்திரம், முழுக்க முழுக்க வேதமார்க்கத்தை தழுவியது. எனவே வர்ணாசிரம ரீதியாக, நான்கு வகை ஜாதியாருக்கும் இந்தத் தசவிதப் பொருத்தங்களை வகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன. ஆனால், இதுவோ கலிகாலம். ஆண் பெண் என்ற இரண்டு ஜாதிகளைத் தவிர மற்ற ஜாதிகளை ஏற்றுக் கொள்ளாத பகுத்தறிவுக்காலம் என்றாலும் பழைய சாஸ்திர முறைகள் சமூகவியலில் (ளர்஗஼ீண்ர்ப்ர்ஞ்ஹ்) எப்படிப் பயன்பட்டு வந்துள்ளன என்பதையும் கவனிப்போம். ஆகவே, தசவிதப் பொருத்தங்கள் எவை? என்றும் கவனிப்போம். அவைகளில், எவைஎவை எந்தெந்த ஜாதியருக்கு உகந்தவை என்றுக் கூட பழைய ஜோதிட நூல்கள் கூறுகின்றன. தற்பொழுது ஜாதிகளே இல்லை என்று சொல்லுகின்ற காலமே தவிரத் திருமணக்

காலங்களில் எந்தச் சீர்திருத்தவாதியுங்கூட இந்தப் பொருத்தங்களைப் பார்க்கத்தான் வேண்டியுள்ளது!

## அ. தினப் பொருத்தம் :

இதுவே நட்சத்திரப் பொருத்தமுமாகும்.

"தினத் ஆயுஷ்யம் ஆரோக்கியம்" என்றபடி, தினப் பொருத்தம் மிகச் சரியாக இருந்தால், வதூவரர்களுடைய ஆயுளும் ஆரோக்கியமும் சிறப்பாக இருக்கும். விருத்தியும் ஆகும்.

"பிராஹ்மணானம் தினம் ச்ரேஷ்டம்" என்றவாறு பிராம்மணர்களுக்கு தினப் பொருத்தமாகிய நட்சத்திரப் பொருத்தம்தான் மிகவும் உயர்வானது என்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது. மற்ற பொருத்தங்கள் எல்லாவற்றையும்விட இந்தத் தினப் பொருத்தம் மட்டுமே பொருந்தியிருந்தால் அதாவது நட்சத்திரப் பொருத்தமே பொருந்தியிருந்தால் பிராம்மணர்கள் திருமணத்தை தமது பிள்ளைக்கோ, பெண்ணுக்கோ நடத்தி வைக்கலாம். பொதுவாக, இந்தக் காலத்திலுங்கூட வர்ணாசிரம முறைப்படி, நால்வகை ஜாதியரில் பிராம்மண, க்ஷத்திரிய, வைசியர்கள் தான் மிக அதிகமாக ஜோதிடத்தை நம்பியே திருமணங்கள் நடத்துகிறார்கள்.

## ஆ. கணப் பொருத்தம் :

"சோபனம் கணமேவச" என்றபடி கணப் பொருத்தம் சரியாகப் பொருந்தினால்தான், தம்பதிகளின் மணவாழ்க்கை சுபமும் சோபனமுமாக இருக்கும். இது பெரும்பாலும் குண இயல்பையும் மன இயல்பையும் அடிப்படையாகக் கொண்டது. "க்ஷத்ரியாணம் கணம்ததா" என்ற வாக்கியப்படி அரசர்களுக்கு கணப்பொருத்தம் பொருத்தமாக அமைந்திருந்தாலே போதுமானது.

## இ. மாஹேந்திரப் பொருத்தம் :

மாஹேந்திரப் பொருத்தம் இருந்தால் புத்திர விருத்தியுண்டாகும்.

ஈ. ஸ்திரீ தீர்க்கப் பொருத்தம் :

இந்தப் பொருத்தமிருந்தால் தான் சகல சம்பத்தும் விருத்தியாகும். இதனையே "ஸ்திரீ தீர்காத் சர்வ சம்பத" என்ற ஜோதிட வாக்கியம் கூறுகிறது.

உ. யோனிப் பொருத்தம் :

இந்தப் பொருத்தமிருந்தால் தம்பதிகள் ஒருவருக்கு ஒருவர் உடலுறவு இன்பத்திலும் நட்புரிமையுடனும் சயன சௌக்கியத்துடனும் சுகமாகச் சுகித்திருப்பார்கள். "சூத்ராணம் யோகி ரேவச" என்ற வாக்கியம், இதனை 4வது ஜாதியினருக்கு உரியதாக, மிகவும் அவசியமானதாகக் கூறுகிறது.

ஊ. ராசிப் பொருத்தம் :

இந்தப் பொருத்தம் பொருந்தியிருந்தால் தம்பதிகளின் வம்சம் விருத்தியாகும் என்று கருதப் பெறுகிறது. இதனையே, "ராசீனம் வம்ச விருத்தி கிருத்" என்றும் "ராசி மைத்ரந்து வைஸ்யானம்" என்று ஜோதிட வாக்கியம் கூறுவதால், இந்த ராசிப் பொருத்தம் வைசியர்களுக்கு மிகவும் முக்கியமாக கூறப்படுகிறது.

எ. ராசியதிபதிப் பொருத்தம் :

சந்தானம் ராசியாதிபதி என்ற வாக்கியப்படி ராசியதிபதிப் பொருத்தம் பொருந்தியிருந்தால், தம்பதிகளுக்குப் பிறக்கின்ற புத்திரர்கள் யோகம் உடையவர்களாக இருப்பார்கள்.

ஏ. வசியப் பொருத்தம் :

இந்தப் பொருத்தம், பொருந்தியிருந்தால், தம்பதிகள் ஒருவருக்கொருவர் பிரியமாகவும் அன்யோன்னியமாகவும் வசீகரத்துடன் இன்பமாக வாழ்வார்கள். இதனையே "வச்யாத் அயோன்ய வச்யகம்" என்று ஜோதிட வாக்கியம் கூறுகிறது.

## ஐ. ரஜ்ஜுப் பொருத்தம் :

இந்தப் பொருத்தம் பொருந்தியிருந்தால்தான் சௌமாங்கல்யம் விருத்தியாகும் என்று கூறுப்படுகிறது. * ரஜ்ஜுர் மாங்கல்ய விர்த்திஸ்யாத் என்பது ஜோதிட வாக்கியமாகும்.

## ஒ. வேதைப் பொருத்தம் :

"வேதயா சோக நாசனம்" என்றபடி வேதைப் பொருத்தம் அனுகூலமாக இருந்தால் துன்பங்களும் சோகங்களும் இல்லாமல் இருக்கும் என்றும் கூறப்படுகின்றன.

இவ்வாறாக தசவிதப் பொருத்தங்களுக்குரிய பலன்கள், பழைய ஜோதிட நூல்களில் கூறப்பட்டுள்ளன.

# 4. தினப் பொருத்தம்

### தினப் பொருத்தத்தைப் பார்க்கும் முறை

திருமணமாக வேண்டிய வதூ (கன்னிகையினுடைய) ஜனன ஜாதகத்தில், அவள் பிறந்த தினத்தில், சந்திரன் எந்த நட்சத்திரத்தில் இருந்திருக்கிறானோ, அந்த நட்சத்திர தினமே அவளுடைய ஜனன தினமாக இருக்கும்.

தசவிதப் பொருத்தங்களைப் பார்ப்பதற்கு பெண்ணின் ஜென்ம நட்சத்திரமே முக்கியமானது. அந்த நட்சத்திரத்தைக் கொண்டு தான், திருமண விஷயங்கள் நிச்சயிக்க பெற வேண்டும். பெண் பூமியைப் போன்றவள்.

அதில் விதைத்துப் பயிர் செய்யப் பயன்படும் வமிச விருத்தி விதைப்புக்கு தான் ஆண் பயன்படுகிறான். பெண்ணை அடிப்படையாகக் கொண்டுதான் குடும்ப வாழ்க்கையும் குலமும் குடியும் விருத்தியடைகின்றன. பெண்ணைக் கொண்டுதான் வமிச விருத்தி ஏற்படுகின்றது. ஆணுக்குத் திருமணம் செய்து கொண்டுதான் வாழவேண்டும் என்ற அவசியம் நிர்பந்தமல்ல! பெண்ணுக்குப் பெருமை தருவது திருமணம் தான். பெண்ணுக்குத் தாய்மைப் பெருமையை அடையும்படிச் செய்வதும் இந்தத் திருமணம் தான். பெண்ணின் மாங்கல்ய பாக்கியம் தான் அவளது கணவனுக்குச் சகல சௌபாக்கியங்களையும் சர்வ மங்களங்களையும் வழங்க கூடியது. எனவே தான் பெண்ணின் ஜன்ம நட்சத்திரம் தான் திருமணப் பொருத்தங்கள் பத்தையும் பார்க்க, மிகவும் முக்கியமாகப் பயன்படுத்தப் பெறுகிறது.

எனவே, அவளுடைய ஜனன நட்சத்திரத்தைக் கொண்டுதான், இந்தத் தினப் பொருத்தத்தைக் கண்டறிய வேண்டும்.

அதாவது வதூவின் (கன்னிகையினுடைய) ஜனன ஜாதகத்தில் அவள் பிறந்த தினத்தில் அமைந்த ஜன்ம நட்சத்திரத்தையே முதலாவதாகக் கொண்டு, அவளுக்குத் திருமணம் செய்வதற்காக எடுத்துக் கொள்ளும் வரனுடைய (பிள்ளையினுடைய) நட்சத்திரம் வரையில், விரல் விட்டு எண்ண வேண்டும். அவ்வாறு எண்ணும் போது, 2,4,6,8,9,11,13,15,18,20,24,26 ஆம் நட்சத்திரங்கள் வரனுடையதாக அமைந்திருந்தால், அதுவே மிகவும் உத்தமமான பொருத்தமுடையதாகும். இவை இரட்டைப்பட்ட நட்சத்திரமானால் விசேஷமான சிறப்புக்குரிய பயன்களை அளிக்கும். அந்த நட்சத்திரத்திற்குரியவனாக இருக்கும் அந்த வரனே, அந்தக் கன்னிகைக்கு கணவனாக அமைவதற்கு ஜோதிட ரீதியில் தகுதியுடையவனாவான். இதுவே உத்தமம். இதுவே மிகவும் சிறப்புடையதாகும்.

கன்னிகையின் நட்சத்திரத்தை முதற்கொண்டு ஒன்பது வரையில் எண்ணி, அதை முதற்பிரிவாகவும் மீண்டும் பத்தாவது நட்சத்திரத்தை முதலாவதாகக் கொண்டு கணக்கிட்டு அதை இரண்டாவது பிரிவாகவும் மீண்டும் பத்தொன்பதாவது நட்சத்திரத்தை ஒன்றாவதாகக் கொண்டு, எண்ணுவதை மூன்றாவது பிரிவாகவும் சொல்வது ஜோதிட சம்பிரதாய முறையாகும். முதல் நட்சத்திரத்திற்கு ஜன்மம் என்றும் பத்தாவது நட்சத்திரத்திற்கு அனு ஜன்மம் என்றும் பத்தொன்பதாவது நட்சத்திரத்திற்கு (மூன்றாவது பிரிவில் முதலாவதாக வருவதற்கு) திரி ஜன்மம் என்றும் பெயர்.

| ஜன்மம் | | அனுஜன்மம் | | திரிஜன்மம் | |
|---|---|---|---|---|---|
| (1) | அசுவினி | (10) | மகம் | (19) | மூலம் |
| (2) | பரணி | (11) | பூரம் | (20) | பூராடம் |
| (3) | கிருத்திகை | (12) | உத்திரம் | (21) | உத்திராடம் |
| (4) | ரோகிணி | (13) | அஸ்தம் | (22) | திருவோணம் |
| (5) | மிருகசீரிஷம் | (14) | சித்திரை | (23) | அவிட்டம் |
| (6) | திருவாதிரை | (15) | சுவாதி | (24) | சதயம் |
| (7) | புனர்பூசம் | (16) | விசாகம் | (25) | பூரட்டாதி |
| (8) | பூசம் | (17) | அனுஷம் | (26) | உத்திரட்டாதி |
| (9) | ஆயில்யம் | (18) | கேட்டை | (27) | ரேவதி |

**ஸ்திரீ நட்சத்திரத்தைத்தான் முதலாவதாகக் கொண்டு எண்ணவேண்டும் என்பது மிகவும் முக்கியம்.**

"வதூநட்சத்ர மாரப்ய வரநட்சாந்தம் சகண்யதே" என்று ஜாதகச் சந்திரிகை என்ற ஜோதிட நூலும் "ஸ்திரீ ஜன்மதாரமாரப்ய கணயேத் வரஜன்மபாக்" என்று காலப்பிரகாசிகை என்ற ஜோதிட நூலும் கூறுவதால்,

ஸ்திரீ நட்சத்திரத்திலிருந்து ஆரம்பித்துத்தான் எண்ணவேண்டும் என்பது ஜோதிட மரபு.

மேலும் விவாகம், சீமந்தம், பும்சவனம், யக்ஞும், யாகம், வதூப்பிரவேசம், கிரகப் பிரவேசம் ஆகிய அனைத்துமே மங்கையரைப் பிரதானமாக வைத்து நடத்தப்பெறும் சுபகாரியங்களாகையால், ஸ்திரீ நட்சத்திரமே மிகவும் முக்கியமானதாகும். எனவே, ஸ்திரீ நட்சத்திரத்தையே முதலாக வைத்து எண்ண வேண்டும்.

இதற்கு சாஸ்திரப் பிரமாணமாகிய "காலவிதானம்" என்ற நூல், "கிரகப்பிரவேசஸ் சீமந்த யக்ஞாப்பும் சவநம்ததா கர்பாதானம், விவாஹம்ச லி ஸ்திரீ முக்யானி பவந்து வுட்" என்று கூறுவதால், விவாக சம்பந்தமான விஷயங்களுக்கு ஸ்திரீ நட்சத்திரத்தையே முக்கியமானதாகவும் முதலாவதாகவும் கொண்டு எண்ண வேண்டும்.

இருபத்து ஏழு நட்சத்திரங்களையும் மூன்று பிரிவுகளாக ஜன்மம், அனு ஜன்மம், திரி ஜன்மம் என்று மூவகையாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவிலும் ஒன்பது நட்சத்திரங்கள் அமைவதால், நாம் திருமணப் பொருத்தத்துக்காக எடுத்துக் கொள்ளும் கன்னிகையின் ஜன்ம நட்சத்திரத்தின் இயற்கையான வலிமையை நிச்சயிப்பதுதான் தாரா பலம் என்பதாகும்.

## தாராபலம்

ஜன்ம, ஸம்பத், விபத், க்ஷேம, ப்ரத்யாஸ், ஸாதகோவத:
மைத்ரம் பரம மைத்ரம் ச ஜன்மாதீனாம் புன:புன:!

என்ற ஜோதிட சாஸ்திர வாக்கியப்படி, (1) ஜன்மதாரை (2) சம்பத்துத் தாரை (3) விபத்துத்தாரை (4) க்ஷேமதாரை (5) ப்ரத்யம தாரை (6) சாதக தாரை (7) வதை தாரை (8) மைத்ரதாரை (9) பரம மைத்ரதாரை என்று ஜன்ம நட்சத்திரத்தை முதலாவதாகக் கொண்டும்

அனுஜன்மத்திலிருந்தும், திரிஜன்மத்திலிருந்தும் எண்ணி ஸ்திரீயின் ஜன்ம நட்சத்திரத்திற்குரிய பலன்களை நிச்சயிக்க வேண்டும். இதுதான் சாஸ்திரச் சம்மதமான சம்பிரதாயம்.

## உத்தம, மத்திம, அதம நட்சத்திரங்கள்

மேற்கூறியவாறு மூன்று பிரிவுகளில், ஒவ்வொரு பிரிவிலுமுள்ள 9 நட்சத்திரங்களில் 3,5,7வது நட்சத்திரங்களை தோஷ நட்சத்திரங்கள் என்றும் 2,1,8வது நட்சத்திரங்களை மத்திம நட்சத்திரங்கள் என்றும் 6,4,9 ஆவது நட்சத்திரங்களையே மிகச் சிறப்பான பொருத்தமான நட்சத்திரங்களாகக் கூறப் பெறுகின்றன.

மேலே சொன்ன 3,5,7 நட்சத்திரங்களாகிய தோஷ நட்சத்திரங்கள் புருஷ நட்சத்திரமாக இருந்து மூன்றாவது பிரிவில் வருமானால், அதாவது பெண்ணின் ஜன்ம நட்சத்திரத்திலிருந்து 21, 23, 25வது நட்சத்திரமாக வந்தால் தினப் பொருத்தம் உண்டு என்றும் அவை இரண்டாவது பிரிவில் வரும்போது 12வது நட்சத்திரத்தில் முதற் பாதமும் பதினாலாவது நட்சத்திரத்தில் நாலாவது பாதமும் 16வது நட்சத்திரத்தில் மூன்றாவது பாதமும் கூடாது என்றும் மற்ற நட்சத்திர பாதங்கள் மத்யமம் என்றும் முதற் பிரிவில் புருஷ நட்சத்திரம் 3,5,7 ஆவதாக வந்தால் தினப் பொருத்தம் இல்லை என்றும் கருதவேண்டும்.

27வது நட்சத்திரம்

புருஷ நட்சத்திரம் பெண்ணின் ஜன்ம நட்சத்திரத்தில் இருந்து கணக்கெடுக்கும்போது இருபத்தேழாவது நட்சத்திரமாக வரும்போது, பெண்ணின் நட்சத்திரமும் புருஷனின் நட்சத்திரமும் ஒரே ராசியில் இருந்தால் அதாவது ராசிக்குரிய 2¼ நட்சத்திரங்களுக்குள்ளாக வருமானால் தினப் பொருத்தம் உண்டு, இத்தகைய நிலையிலிருந்தால் திருமணம் செய்விக்கலாம். அவ்வாறு புருஷ நட்சத்திரமும் பெண் நட்சத்திரமும் ஒரே ராசியில்

வராமல் அடுத்தடுத்து வேறு ராசியில் வருமானால் தினப் பொருத்தம் இல்லை. எனவே அவர்களுக்குத் திருமணம் செய்யலாகாது.

## ஏக நட்சத்திரம்

பெண்ணின் நட்சத்திரமும், பிள்ளையின் நட்சத்திரமும் ஒரே நட்சத்திரமாக இருந்தாலே நட்சத்திரப் பொருத்தம் உண்டு. எனவே, அவர்களுக்குத் திருமணம் செய்விக்கலாம்.

1) இவற்றில் ரோகிணி, திருவாதிரை, மகம், அஸ்தம், விசாகம், திருவோணம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் ஸ்திரீ புருஷர்களுக்கு ஒரே நட்சத்திரமாக அமைந்திருந்தால் மிகவும் சிலாக்கியம். எந்தவித யோசனையுமின்றித் திருமணத்தை செய்விக்கலாம்.

2) அஸ்வினி, கிருத்திகை, மிருகசீரிஷம், புனர்பூசம், பூசம், பூரம், உத்திரம், சித்திரை, அனுஷம், பூராடம், உத்திராடம் ஆகிய நட்சத்திரங்கள் ஏக நட்சத்திரங்களாக, அதாவது ஸ்திரீ புருஷர்களின் ஒரே ஜன்ம நட்சத்திரமாக வருமானால் மத்திமம். இதனால் பாதகமில்லை. திருமணம் செய்விக்கலாம்.

3) பரணி, ஆயில்யம், ஸ்வாதி, கேட்டை, மூலம், அவிட்டம், சதயம், பூரட்டாதி ஆகிய நட்சத்திரங்கள் ஸ்திரீ புருஷர்களின் ஜன்ம நட்சத்திரமாக இருந்தால் பொருத்தமில்லை, விவாகம் பொருத்தமில்லாததாகவே கருத வேண்டும் என்று காலாம்ருதம் காலப்பிரகாசிகை என்ற ஜோதிட நூல்கள் கூறுகின்றன.

இது போலவே ஸ்திரீ புருஷ நட்சத்திரமானது அதன் பாத பேதங்களால் இரண்டு வெவ்வேறு ராசியில் இருக்கக்கூடிய ஒரே நட்சத்திரமாக இருந்தால் புருஷ நட்சத்திரம் முந்திய ராசியிலிருந்தால் மிகவும் சிறப்புடையதாகும். அப்படியில்லையென்றால்

பொருத்தமிராது. ஸ்திரீ புருஷ நட்சத்திரங்கள் வெவ்வேறாக இருந்தாலும் அவை ஒரே ராசியில் இருக்குமானால் ராசிப் பொருத்தம் உண்டு என்பார்கள். புருஷ நட்சத்திரம் முந்தியதாகவும் பெண் நட்சத்திரம் பிந்தியதாகவும் இருந்தால்தான் மிகவும் சிறப்பாகும். அப்படியில்லாவிட்டால் பொருந்தாது.

இவற்றிலும் சில விதி விலக்குகள் உண்டு

அதாவது பரணியும் கிருத்திகையும்

அவிட்டமும் சதயமும்

பூசமும் ஆயில்யமும்

ஒரே ராசியில் இருந்தால் மேற்கூறிய விதிகளின்படி தோஷம் கிடையாது விவாகத்தை செய்விக்கலாம்.

**புருஷ நட்சத்திரம்,** அஸ்வினி, கிருத்திகை, மிருகசீரிஷம், மகம், அஸ்தம், சுவாதி, பூராடம், சதயம் ஆகிய நட்சத்திரங்களில் ஏதேனும் ஒன்றாக இருந்தால் அது ஸ்திரீ நட்சத்திரத்திற்குப் பிந்தியதாக இருந்தாலும் அதனால் பாதகமில்லை. திருமணம் செய்விக்கலாம்.

ஸ்திரீ புருஷர்களுடைய ஜன்ம நட்சத்திரம் ஒரே நட்சத்திரமாக இருந்து, இரண்டு வெவ்வேறு ராசியில் இருக்குமானால், முந்திய ராசியில் புருஷ நட்சத்திரத்தின் பாதமும், பிந்தின ராசியில் ஸ்திரீ நட்சத்திரத்தின் பாதமும் இருந்தாலும் கூட உத்தமம் தான். அவர்களுக்கு திருமணம் செய்விக்கலாம்.

ஸ்திரீ புருஷரின் ஜன்ம நட்சத்திரம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, அஸ்தம், சுவாதி, மிருகசீரிஷம், மகம், அனுஷம் ஆகிய நட்சத்திரங்களில் எந்த நட்சத்திரமாக வந்தாலும், அவற்றுக்கு விபத்து, பிரத்யர, வத தோஷங்கள் இல்லை. இத்தகைய தோஷங்கள், அந்த ஜாதகங்களைப் பாதிக்காது. விவாகங்களை நடத்தலாம்.

## நட்சத்திரங்களில் நல்லவை தீயவை எதுவுமில்லை!

பொதுவாக, நமது நாட்டில் நட்சத்திரங்கள் சிலவற்றைப் பற்றிய பழமொழிகள் சொல்லப்பட்டு வருகின்றன.

(1) பரணி நட்சத்திரத்தில் பிறந்தவன் தரணியை ஆள்வான்.

(2) ஆண் மூலம் அரசாளும்; பெண் மூலம் நிர்மூலம்.

(3) உத்திராடத்தில் ஒரு பிள்ளையும் ஊர் ஓரத்தில் ஒரு காணியும்.

(4) அவிட்ட நட்சத்திரப் பெண் தவிட்டுப் பானைத் தொட்டாலும் தனம்!

போன்ற பழமொழிகளும்,

பூராடம் நூலாடாது, திருவாதிரையாள் ஒரு வாய் களிக்கும் கஷ்டப்படுவாள். பெண்மூலம் நிர்மூலம். குடும்பமே அழியும். மாமனார் மடிவார். ஆயில்யம் மாமிக்கு ஆகாது. விசாகம் வீட்டைத் துடைத்துவிடும், கேட்டை நட்சத்திரம் கேட்டைச் செய்யும் என்று இதுபோன்ற பலவிதப் பழமொழிகள் சொல்லப்படுவதால், அத்தகைய ஜன்ம நட்சத்திரங்களைக் கொண்டவர்கள் ஆணாயினும் பெண்ணாயினும் போற்றவும் பெறுகிறார்கள், தூற்றவும் பெறுகிறார்கள். இதுபோன்ற பழமொழிகளைச் சொல்லியே சிலர் நல்ல ஜாதகப் பொருத்தமுடைய வதூவரர்களின் திருமணத்தையே நடத்த முடியாமல் செய்து விடுவது நாட்டில் நடைமுறைப் பழக்கமாக இருந்து வருகிறது. இவற்றுக்கு சாஸ்திர ஆதாரம் எதுவுமில்லை என்று சொல்வதற்குமில்லை.

ஆகாத நட்சத்திரங்கள்

அ) மூலம் முதற்பாதமானால் மாமனாருக்கு ஆகாது.

ஆ) ஆயில்யம் முதற்பாதமானால் மாமியாருக்கு ஆகாது.

இ) கேட்டை முதற்பாதமானால் பெரிய மைத்துனருக்கு ஆகாது.

ஈ) விசாகம் நாலாம் பாதமானால் இளைய

மைத்துனருக்கு ஆகாது.

என்று பெண்ணின் நட்சத்திரம் மேற்கூறிய நட்சத்திரங்களாக இருந்தால், பலரும் திருமணம் செய்வதற்கு மறுக்கிறார்கள். இந்தத் தோஷம், இதே, மூலம், விசாகம், ஆயில்யம், கேட்டை ஆகிய நட்சத்திரங்கள் புருஷ நட்சத்திரங்களாக இருந்தால் விவாகம் செய்யத் தோஷமில்லை.

ஸ்திரீ நட்சத்திரமாக இருந்தால்தான் தோஷங்கள் உண்டு என்று சாஸ்திரங்கள் சிலவும் கூறுகின்றன. நடைமுறை அனுபவத்தில் இவ்வாறு நிகழ்வதாலேயே, இத்தகைய பழமொழிகள் மக்களிடையே வழங்கப் பெறுகின்றன. மாமனார், மைத்துனர், மாமியார் ஆகியோரின் ஆயுட் பலத்தையே, வீட்டுக்கு வரும் கிரக லக்ஷ்மியின் நட்சத்திரம் பாதித்து விடுமா? என்பன அந்தப் பெண்ணின் ஜாதகத்தையும் அதனால் பாதிக்கப் படக்கூடிய சம்பந்தி வீட்டாரின் ஜாதகத்தையுமே பரிசீலித்து முடிவு செய்தால்தான் இந்த நம்பிக்கை சரியானதாகும். இல்லையேல் இதனை தவறான நம்பிக்கையாகவே கருத வேண்டும்.

தினப் பொருத்தமாகிய நட்சத்திரப் பொருத்தத்தினை ஜாதக ரீதியாக ஜன்ம நட்சத்திரம் தெளிவாகத் தெரியும். கன்னிகையின் ஜன்ம நட்சத்திரத்தைக் கொண்டுதான் நிச்சயிக்க வேண்டும்.

இந்தக் காலத்தில் திருமண வயதையடைந்த எத்தனையோ பெண்களுக்குத் திருமணஞ் செய்வதற்காக

அந்தப் பெண்ணின் பெற்றோர்கள், பெண்ணின் ஜாதகத்தையே நூற்றுக்கணக்கான நகல்களை எடுத்துக் கொண்டு, பெண்ணுக்கு தக்க வரனாக அமையக் கூடிய பிள்ளையின் ஜாதகத்தைத் தேடுகிறார்கள். அதைப்போல பிள்ளையின் ஜாதகத்தின் நகல்களை நூற்றுக்கணக்கில் தயாரித்து பெண் வீட்டாருக்கு, பிள்ளை வீட்டார்கள் அனுப்பியும் கொடுத்தும் பொருத்தம் பார்க்கச் செய்கிறார்கள். இப்படி எல்லாம் பெற்றோர்கள் செய்வதற்கு முக்கிய காரணம் வரதட்சணை, சீர்வரிசை போன்ற விஷயங்களேயாகும். வதூவரர்களின் கோத்திரம் படிப்பு, உத்தியோகம், குடும்ப அந்தஸ்து குலப்பெருமை, ஆகியவைகளை பொருத்தே பெரும்பாலும் திருமணங்கள் நிச்சயிக்கப் பெறுகின்றன. லௌகீகமான விஷயங்கள் இருதரத்தாருக்கும் ஒத்து வரவேண்டி இருப்பது மிகவும் முக்கியமானதாகவே நடைமுறையில் இருந்து வருகிறது. பணம் இருந்தால் பத்தும் பறந்துவிடும் என்பது இந்தத் தசவித திருமணப் பொருத்தங்களைத்தான் குறிப்பதாகும். பணமுள்ள மாப்பிள்ளை பணமுள்ள மணமகள் ஆகியவருக்கு, பத்துவிதப் பொருத்தங்கள் எந்த அளவுக்குப் பொருந்துகின்றன என்பதை விட பெண்ணுக்கு என்ன நகை போடுகிறார்கள்? எவ்வளவு சீர்வரிசை செய்கிறார்கள்? திருமணச் செலவுகளை யார் ஏற்பது? போன்ற இதர லௌகீக விஷயங்களில் கவனஞ் செலுத்துகிறார்கள்.

## லௌகீகமும் திருமணப் பொருத்தங்களும்

சிலர் தங்கள் கன்னியரை விலைக்கு விற்கிறார்கள். சிலர் தங்கள் பிள்ளைகளை விற்கிறார்கள். இந்த விற்பனைகள் வரதட்சணை போன்ற பெயர்களில் கௌரவமாக வழங்கப் பெறுகின்றன. வேதகாலத்தில், மணமகனுக்கு ஒரு பசுமாட்டையும் உழவுக்கு இரண்டு எருதுகளையும் வழங்குவது வழக்கமாக இருந்தது. குருகுலத்தில் படித்து முடித்த பிரம்மசாரி பிள்ளைக்கு பிழைப்புக்கு வழி செய்யத்தான் இந்த முறை நிகழ்ந்து

வந்துள்ளது. ஆனால் இந்தக் காலத்தில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளையும் பெண்களையும் தங்கள் வசதிகளுக்கு ஏற்ற வகையில், தங்கள் பொருளாதார வசதிக்கு மீறியும் தங்கள் குடும்ப நலன்களும் மற்ற பிள்ளைகள், பெண்களின் நலன்களைப் பாதிக்கச் செய்தும் படிக்க வைத்து விடுகிறார்கள். வைத்தியத் துறை, தொழில் நுணுக்கத்துறை, வர்த்தகத் துறை, பொறியியல் துறை போன்ற துறைகளில் உயர்தரப் படிப்புக்கு, படிக்க வைத்துவிடுகிறார்கள். அவ்வாறு படிக்க வைப்பதற்கு, படிப்பதால் கிடைக்கும் உத்தியோக வாய்ப்புகளும் அதனால் கிடைக்கும் ஊதிய வாய்ப்புகளுமே காரணமாக உள்ளன. இத்தகைய பிள்ளைகளுக்கு திருமணஞ் செய்துவிட்டால் அந்தப் பிள்ளைகள் தனிக்குடித்தனம் நடத்தச் சென்று விடுவதால், அத்தகைய பிள்ளைகளைப் படிக்கவைத்து, உத்தியோகம் தேடிக் கொடுத்தது போன்ற செலவுகளை எல்லாவற்றையுமே சேர்த்து பெண் வீட்டாரிடம் வாங்கிக் கொள்ள இந்தத் திருமண விஷயத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

எனவே, திருமணஞ் செய்வதற்கு தசவிதப் பொருத்தங்களைப் பார்ப்பதைவிட இந்த லௌகீகப் பொருத்தங்களே இந்தக் காலத்தில் மிக முக்கிய ஸ்தானத்தை வகிக்கின்றன. எனவே, இத்தகையவர்கள், தங்கள் பிள்ளைகளின் ஜாதக பலன், பொருத்த பலன்களுக்குத் தக்கபடி தங்கள் விலைகளைக் குறைத்துக் கொள்ளவோ, அதிகரித்துக் கொள்ளவோ செய்கிறார்கள். தங்களுக்குத் தக்க லௌகீக விஷயங்களில் கவனஞ் செலுத்துவோருக்கு ஜோதிட சாஸ்திரமும், திருமணப் பொருத்தங்களும் அவசியமில்லாமற் போவதோடு, பணமே முக்கியமாகி விடுகிறது.

எனவே, இதுபோன்ற வியாபார ரீதியான திருமணங்களில், வதூவரர்களுக்கு சகலவிதப் பொருத்தங்களும் ஜாதக யோகங்களும் அனுகூலமாகவே இருந்தாலுங்கூட பணம் கொடுக்கல் வாங்கல், சீர்வரிசைகள், துணிமணி நகைகள் கொடுக்கல் வாங்கல்

ஆகியவற்றில் ஏதேனும் சிறிதளவு ஏற்றத் தாழ்வுகள் குறைகள் இருந்துவிட்டால், உடனே விவாகம் நடைபெறாமல் நின்று விடுவதுண்டு. அப்படி நின்றுவிடச் செய்வதற்கு இத்தகைய பெற்றோர்களே காரணமாகி விடுகிறார்கள்.

"அந்தப் பெண்ணின் ஜாதகம் மகா தோஷமுடையது: அதைப் போய் யாராவது திருமணஞ் செய்து கொள்வார்களோ?"

"அந்தப் பிள்ளையின் ஜாதகத்தில் ஆயுள்பலமே போதாதாம். பொருத்தம் வேறு நன்றாக இல்லையாம். அதனால் நாங்கள் அதைத் தள்ளிவிட்டோம். பணமா பெரிசு! கல்யாணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிராயிற்றே, அதை யோசித்துச் செய்ய வேண்டாமா!" என்று எதையெதையோ சொல்லித் தாங்கள் நல்லபெயர் எடுத்துக் கொள்ள முயல்வார்கள். மற்றவர்களைத் தூற்றவுஞ் செய்வார்கள்.

எனவே லௌகீக விஷயங்களில், பொருத்தங்களைப் பார்த்து முடிவு செய்த பிறகே ஜோதிட ரீதியான திருமணப் பொருத்தங்களைப் பார்ப்பது நல்லது.

இந்த விஷயத்தை நன்றாக அறிந்துள்ளவர்கள்தான், தங்கள் பிள்ளைகளின் ஜாதகங்களையும் பெண்களின் ஜாதகங்களையும் நகல்கள் எடுத்து கொண்டு தினசரிப் பத்திரிகைகளின் மணமகன், மணமகள் தேவைப் பகுதிகளைப் படிப்பதிலும் மாப்பிள்ளைகளைத் தேடுவதிலும் ஜாதக நகல்களை அனுப்புவதிலும் அதிக அக்கறை செலுத்துகிறார்கள். விவாக விஷயங்களுக்கு வேண்டிய தகவல்களை அளிக்க சில கம்பெனிகளும், தரகர்களும் இருக்கிறார்கள். பொருத்தமில்லாத தோஷம் உடைய ஜாதகங்களையும் விட நல்லதாக மாற்றி எழுதி தரக்கூடிய ஜோதிட புண்ணியாத்மாக்களும் பலர் இருக்கிறார்கள். ஜாதக விஷயத்தில், குறிப்பாக விவாக விஷயத்தில் ஜாதகத்தை மாற்றிக் கணித்துக் கொடுப்பதைப் போன்ற செயல்கள் மிகவும் பாதகமான பாவச் செயல்களாகும். ஆகையால் யாருமே அத்தகைய

பாவச் செயலை செய்யக் கூடாது. அந்த மகா பாவத்திற்கு ஒருபோதும் விமோசனமேயில்லை.

எனவே, இந்த நாகரீக காலத்தில், பெண்களைப் பெற்றவர்களுக்கும் பிள்ளைகளைப் பெற்றவர்களுக்கும் தகுந்த மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுப்பதற்கும் மணமகளைத் தேர்ந்தெடுப்பதற்கும் ஜாதகப் பரிவர்த்தனை மிகவும் அவசியமாகிறது. இதற்காக அச்சிடப்பட்ட ஜாதக ராசிச் சக்கரங்களை இருதரத்தாரும் சேகரித்து வைத்துக் கொண்டு, தங்களது லௌகீக விஷயங்களுக்கு ஏற்றவாறும் அதே சமயத்தில் ஜாதக ரீதியில் தசவிதப் பொருத்தங்களைப் பார்த்து வைத்துக் கொண்டு தேர்ந்தெடுப்பதற்கும் ஜாதகங்களை சேகரித்து வைத்துக் கொள்கிறார்கள். அத்தகையோருக்கு எல்லாம் மிகவும் எளிதான வகையில், எடுத்த எடுப்பிலேயே தமக்கு வரும் ஜாதகங்களின் நட்சத்திரப் பொருத்தங்களைத் தேர்ந்தெடுத்து வகைப்படுத்திக் கொள்வதற்கு, திருமண நட்சத்திரப் பொருத்த அட்டவணை ஒன்று வழங்கப் பெற்றுள்ளது.

## நட்சத்திரப் பொருத்தம் அட்டவணை

திருமணஞ் செய்து கொள்வதற்குரிய பருவ வயதையடைந்துள்ள ஆண்களுக்கும், பெண்களுக்கும் திருமண ஏற்பாடுகள் செய்வதற்கு முன்பு, மிகவும் முக்கியமாக அவர்களுடைய திருமண வாழ்க்கைக்கு இருபாலாரின் நட்சத்திரங்களும் பொருந்துகின்றனவா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஆனால் நட்சத்திரப் பொருத்தம் மட்டுமே திருமணப் பொருத்தமாகி விடாது. பத்துவிதப் பொருத்தங்கள் என்று கூறப்படும் தசவிதப் பொருத்தங்களும் பொருந்தியிருக்கின்றனவா என்பதோடு, ஜாதகப் பொருத்தம், செவ்வாய் முதலிய கிரக தோஷங்கள் இல்லாமலிருக்கிறதா என்பதையும் மிக முக்கிய ஆயுள் பாவத்தையும் பார்த்துப் பரிசீலித்து ஜோதிட ரீதியாக முடிவு செய்த பிறகே திருமணஞ் செய்வதற்கு நிச்சயம் செய்ய வேண்டும்.

எடுத்த எடுப்பிலேயே ஆண் பெண் ஆகிய இருபாலாரின் நட்சத்திரங்களும், துவாதசப் பொருத்தங்களும் பொருத்தவரை பொருந்துகின்றனவா, என்பதை ஜோதிடரின் உதவியில்லாமலேயே தெரிந்து கொள்வதற்கு இந்த அட்டவணை உங்களுக்கு மிகவும் பயன்படக் கூடியதாக இருக்கும். திருமணத்துக்காக வருகின்ற ஆண்கள் அல்லது பெண்களின் ஜாதகங்களைப் பெற்றுக் கொண்டதும் முதலாவதாக இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மணப் பெண்ணுக்குப் பொருந்தும் மணமகனின் நட்சத்திரம் எது?

பெண்ணின் ஜன்ம நட்சத்திரத்திற்கு எந்தெந்த ஜன்ம நட்சத்திரம் உடைய ஆணின் ஜன்ம நட்சத்திரம் எந்த வகையில் பொருந்துகிறது. அப்படிப் பொருந்துமானால் அந்த ஜன்ம நட்சத்திர ஜாதகரின் தாம்பத்திய பொருத்தத்தின் ஆறுவகையான தராதரங்களை ஒரு அட்டவணையின் மூலம் எளிதாக அறிந்து கொள்ளலாம்.

திருமணப் பொருத்தத்துக்கு 10 விதப் பொருத்தங்கள் அவசியம் என்பதை முந்திய அத்தியாயங்களில் குறிப்பிட்டிருக்கிறேன். தினம், கணம், மாஹேந்திரம், ஸ்திரீ தீர்க்கம், யோனி, ராசி, ராசியதிபதி, வசியம், ரஜ்ஜு, வேதை, ஆகிய பத்து வித பொருத்தங்களுக்கும் பொருத்தமான வகையில், யாவருக்கும் எளிதான வகையில் இந்த அட்டவணை பயன்படும்.

தம்பதிகளின் ஒற்றுமைக்கு, அவர்களின் வாழ்க்கையில் சந்தான சௌபாக்கிய சுபீட்சத்துக்கும் இந்தப் பத்துவிதத் திருமணப் பொருத்தங்களும் முக்கியமானவைதான். இதுதவிர நாடிப் பொருத்தமும் முக்கியத்துவம் பெறுகிறது. ஆனால் இத்தகைய நாடிப் பொருத்தத்தை சில தேசத்தவர்கள்தான் பார்க்கின்றார்கள்.

அடுத்து வரும் பக்கங்களில் ஒவ்வொரு பக்கத்திலும் இடது கைப் பக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நட்சத்திரங்கள் பெண்ணின் ஜன்ம நட்சத்திரமாகும். அந்த

நட்சத்திரத்திற்கு நேர் வலது கைப்பக்கத்தில் குறிப்பிட்டு உள்ள நட்சத்திரங்களும் அவற்றின் பாதங்களும் ஆண்களுடைய நட்சத்திரங்களாகும். அத்தகைய ஆண்களின் நட்சத்திரங்கள், அவரவர் தராதரங்களை அனுசரித்து பெண்ணின் ஜன்ம நட்சத்திரத்திற்கு ஏற்ற வகையில் மத்திமப் பொருத்தம், சிறந்தப் பொருத்தம், உன்னதப் பொருத்தம் என்று மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

உதாரணமாக பெண்ணின் ஜன்ம நட்சத்திரத்தில் முதலாவதாக உள்ள அஸ்வினியை எடுத்துக் கொண்டால், அதற்கு நேர் வலது புறத்தில் முதற் கட்டத்திலுள்ள ஆணுடைய நட்சத்திரங்களாகிய ரோகிணி, மிருகசீரிஷம் 1,2, புனர்பூசம் 4, மகம், பூரம், விசாகம், பூராடம், உத்திராடம் 1, அவிட்டம், உத்திரட்டாதி, ஆகியவைகள் மத்திமப் பொருத்தமாகும். 2வது கட்டத்திலுள்ள அஸ்வினி, கார்த்திகை 1, மிருகசீரிஷம் 3,4, பூசம், ஆயில்யம், சுவாதி, உத்திராடம் 2,3,4, திருவோணம், ரேவதி ஆகியவைகள் சிறந்த பொருத்தமாகும். 3வது கட்டத்திலுள்ள பரணி உன்னதப் பொருத்தமாகும். இதுபோலவே, இந்த அட்டவணையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த அட்டவணையில் உள்ள மத்திமப் பொருத்தம், சிறந்த பொருத்தம், உன்னதப் பொருத்தம் முதலிய மூன்று வகைப் பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவுக்கும் உரிய விஷயங்கள் பின்வருமாறு.

### முதற்கட்ட மத்திமப் பொருத்தம் :

இந்த நட்சத்திரமுடைய ஜாதகரை மணந்து கொள்ளும் பெண்ணின் வாழ்வில், சுகதுக்கங்களும் ஏற்றதாழ்வுகளும் கலந்து நிலவும். சாதாரணமான முறையில் கணவன் மனைவியாக வாழ்வார்கள். தாம்பத்திய உறவில் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு நடப்பார்கள். குடும்பப் பிரச்சினைகளைச் சமாளிப்பதில் சற்று தயக்கமிருக்கும்.

## 2வது கட்டம் சிறந்த பொருத்தம் :

இந்தத் தம்பதிகளின் மணவாழ்க்கையில் வசதிகள் நாளுக்கு நாள் உயர்வடைய மார்க்கமுண்டாகும். வாழ்க்கைக்குரிய வசதிகள் குறையாமல் இருக்கும். இத்தகைய தம்பதிகள் அதிர்ஷ்டம் உடையவர்களாகவும் தாம்பத்திய உறவுகளில் பரஸ்பர நம்பிக்கையும் திருப்தியை உடையவர்களாகவும் இருப்பார்கள். ஒருவருக்கொருவர் பிரியமாக இருப்பார்கள். இவர்கள் தங்களுடைய புத்திர புத்திரிகளால் பெருமையடைவார்கள். நிலபுல, வாகன வசதிகள் அவரவர் ஜாதக திசாபுத்தி பலன்களுக்கு ஏற்ப அமையும்.

## 3வது கட்டம் உன்னதப் பொருத்தம் :

இந்தத் தம்பதிகள் கல்வியிலாவது அறிவிலாவது சம அந்தஸ்தையுடையவர்களாக இருப்பார்கள். கலைகளை ரசிப்பதிலும் கற்பதிலும் போதிப்பதிலும் சிறந்து விளங்குவார்கள். திருமணத்திற்குப் பிறகு இவர்களுடைய வாழ்க்கையில் பொருளாதார நிலைமை உயர்வடையும். சுகங்களும் வசதிகளும் தாமதமின்றி இவர்களை வந்தடையும். புகழைத்தரும் மக்கட் பேற்றையும் அடைவார்கள் உறவினர்களாலும் நண்பர்களாலும் பாராட்டப் பெறுவார்கள். சகலவித சௌகரியங்களையும் தாம்பத்திய ஒற்றுமையாலும் தெய்வகடாட்சத்தாலும் அடைவார்கள். தெய்வ பக்தியுடன் இவர்கள் தினசரி பூஜைகளைச் செய்து வருவதோ அல்லது பிரார்த்தனைகளையோ, தியானத்தையோ செய்துவந்தால் சகலவித சௌபாக்கியங்களும் இவர்களைத் தாமாகவே வந்தடையும். கணவனுக்குப் பதவி உயர்வு, வியாபார மேன்மை முதலியனவும், மனைவிக்கு ஆடையாபரணச் சேர்க்கைகளும், வீடு, வாகன, வசதிகளும் நிலபுலன் ஆதாயமும், புத்திர சந்தான சௌபாக்கியங்களும் உண்டாகும்.

| மணமகளின் ஜன்ம நட்சத்திரம் | மத்திமப் பொருத்தம் 1 | சிறந்த பொருத்தம் 2 | உன்னதப் பொருத்தம் 3 |
|---|---|---|---|
| 1. அஸ்வினி | ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 புனர்பூசம் 4, மகம், பூரம் விசாகம், பூராடம் உத்திராடம் 1, அவிட்டம் உத்திரட்டாதி | அஸ்வினி, கார்த்திகை 1 மிருகசீரிஷம் 3,4 பூசம் ஆயில்யம், சுவாதி, உத்திராடம் 2,3,4 திருவோணம், ரேவதி | பரணி |
| 2. பரணி | பூசம், ஆயில்யம், உத்திரம், அஸ்தம், விசாகம், கேட்டை மூலம், சதயம், பூரட்டாதி | பரணி, கார்த்திகை 1, ரோகிணி திருவாதிரை, புனர்பூசம், சுவாதி ரேவதி, உத்திராடம், திருவோணம் | அஸ்வினி |
| 3அ. கார்த்திகை 1ம் பாதம் | கார்த்திகை 2,3,4 மிருகசீரிஷம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் ஆயில்யம், பூரம், உத்திரம் 1 விசாகம் 1,2,3, அனுஷம் பூராடம், அவிட்டம் 3,4 உத்திரட்டாதி பூரட்டாதி 1,2,3 | அஸ்வினி, பரணி, கார்த்திகை 1 பூசம், சித்திரை கேட்டை, 3,4 மூலம், சதயம், அவிட்டம் 1,2 | – |

| மணமகளின் ஜன்ம நட்சத்திரம் | மத்திமப் பொருத்தம் 1 | சிறந்த பொருத்தம் 2 | உன்னதப் பொருத்தம் 3 |
|---|---|---|---|
| 3ஆ. *கார்த்திகை* 2,3,4 பாதங்கள் | அஸ்வினி, பரணி, கார்த்திகை 1 ரோகிணி, பூசம், புனர்பூசம், ஆயில்யம், மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை விசாகம், அனுஷம், அவிட்டம் 1,2, பூரட்டாதி | கார்த்திகை 2,3,4, கேட்டை அவிட்டம் 3,4, சதயம் | மிருகசீரிஷம் 1,2 பாதங்கள் |
| 4. *ரோகிணி* | அஸ்வினி, பரணி, கார்த்திகை 2,3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3, பூரம், சித்திரை 1,2 கேட்டை, திருவோணம், அவிட்டம், சதயம், ரேவதி | ரோகிணி, மிருகசீரிஷம் 3,4 புனர்பூசம் 4, பூசம், உத்திரம், அஸ்தம், அனுஷம், பூரட்டாதி உத்திரட்டாதி | மிருகசீரிஷம் 1,2 |
| 5அ. *மிருக– சீரிஷம்* 1,2 பாதங்கள் | அஸ்வினி, கார்த்திகை 1, மிருகசீரிஷம் 4, திருவாதிரை புனர்பூசம் 1,2,3, பூசம், ஆயில்யம், மகம், உத்திரம் சுவாதி, விசாகம் 4, அனுஷம் கேட்டை, உத்திராடம் 2,3,4 உத்திரட்டாதி | கார்த்திகை 2,3,4, மிருகசீரிஷம் 1,2, புனர்பூசம் 4, அஸ்தம் திருவோணம், சதயம், பூரட்டாதி, ரேவதி | ரோகிணி |

| மணமகளின் ஜன்ம நட்சத்திரம் | மத்திமப் பொருத்தம் 1 | சிறந்த பொருத்தம் 2 | உன்னதப் பொருத்தம் 3 |
|---|---|---|---|
| 5ஆ. மிருக–சீரிஷம் 3,4 பாதங்கள் | கார்த்திகை, மிருகசீரிஷம் 1,2 புனர்பூசம் 4, மகம், பூரம் சித்திரை 1,2, விசாகம் 1,2,3 அனுஷம், மூலம் உத்திராடம் 2,3,4 திருவோணம், சதயம் பூரட்டாதி | அஸ்வினி, ரோகிணி, மிருக சீரிஷம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3, உத்திரம் சுவாதி, உத்திராடம் 1, ரேவதி | அஸ்தம் |
| 6. திருவாதிரை | அஸ்வினி, கார்த்திகை ரோகிணி, பூசம், மகம் உத்திரம், அஸ்தம், சித்திரை 3,4 விசாகம் 1,2,3, அனுஷம் உத்திராடம் 2,3,4, திருவோணம் அவிட்டம் 3,4, பூரட்டாதி 4 | பரணி, மிருகசீரிஷம் 1,2 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 பூரம், சித்திரை 1,2, சுவாதி, பூராடம், உத்திராடம் 1, உத்திரட்டாதி, ரேவதி | மிருகசீரிஷம் 3,4 |
| 7அ. புனர்பூசம் 1,2,3 பாதங்கள் | அஸ்வினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 பூசம், மகம், உத்திரம் அஸ்தம், சித்திரை 3,4, அனுஷம், உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் | மிருகசீரிஷம் 3,4, பூரம், சித்திரை 1,2, சுவாதி பூராடம், உத்திராடம் 1 உத்திரட்டாதி, ரேவதி | – |

| மணமகளின் ஜன்ம நட்சத்திரம் | மத்திமப் பொருத்தம் 1 | சிறந்த பொருத்தம் 2 | உன்னதப் பொருத்தம் 3 |
|---|---|---|---|
| 7ஆ. புனர்பூசம் 4ஆம் பாதம் | கார்த்திகை, பூரம் சித்திரை, விசாகம், பூராடம், உத்திராடம் 1 அவிட்டம் 1,2, ரேவதி | பரணி, மிருகசீரிஷம் 1,2 புனர்பூசம் 4, ஆயில்யம் சுவாதி, அனுஷம், உத்திராடம் 2,3,4, திருவோணம் உத்திரட்டாதி | பூசம் |
| 8. பூசம் | பரணி, கார்த்திகை 2,3,4 மிருகசீரிஷம் 1,2, திருவாதிரை புனர்பூசம் 1,2,3, ஆயில்யம் மகம், உத்திரம் 1, விசாகம் கேட்டை, உத்திராடம் 1 உத்திரட்டாதி | அஸ்வினி, கார்த்திகை 1, ரோகிணி, பூசம், அஸ்தம் சுவாதி, உத்திராடம் 2,3,4, திருவோணம், பூரட்டாதி 4 ரேவதி | புனர்பூசம் 4 |
| 9. ஆயில்யம் | பரணி, கார்த்திகை, மிருகசீரிஷம் 1,2, உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை அனுஷம், மூலம், சதயம் உத்திராடம் | அஸ்வினி, புனர்பூசம் 4, பூசம் ஆயில்யம், கேட்டை, அவிட்டம் 1,2 | – |

| மணமகளின் ஜன்ம நட்சத்திரம் | மத்திமப் பொருத்தம் 1 | சிறந்த பொருத்தம் 2 | உன்னதப் பொருத்தம் 3 |
|---|---|---|---|
| 10. மகம் | அஸ்வினி, பரணி மிருகசீரிஷம், திருவாதிரை புனர்பூசம் 1,2,3, பூசம், மகம் சித்திரை, விசாகம் 4, அனுஷம், மூலம், அவிட்டம் 3,4 பூராடம், சதயம், உத்திரட்டாதி | பூரம், உத்திரம் 1, கேட்டை | – |
| 11. பூரம் | கார்த்திகை, ரோகிணி மிருகசீரிஷம் 3,4, புனர்பூசம் 4 உத்திரம் 2,3,4, அஸ்தம், சுவாதி விசாகம் 4, அனுஷம், கேட்டை மூலம், உத்திராடம், திருவோணம், சதயம், பூரட்டாதி, ரேவதி | அஸ்வினி, திருவாதிரை புனர்பூசம் 1,2,3 மகம், பூரம் | உத்திரம் 1 |
| 12அ. உத்திரம் 1ஆம் பாதம் | கார்த்திகை, ரோகிணி மிருகசீரிஷம் 1,2, திருவாதிரை ஆயில்யம், விசாகம் 4 உத்திராடம் 2,3,4, திருவோணம், ரேவதி | பரணி, மிருகசீரிஷம் 3,4 பூசம், மகம், உத்திரம் 1 சுவாதி, அனுஷம், பூராடம் உத்திராடம் 1 பூரட்டாதி 4 உத்திரட்டாதி | பூரம் |

| மணமகளின் ஜன்ம நட்சத்திரம் | மத்திமப் பொருத்தம் 1 | சிறந்த பொருத்தம் 2 | உன்னதப் பொருத்தம் 3 |
|---|---|---|---|
| 12ஆ. உத்திரம் 2,3,4 பாதங்கள் | பரணி, கார்த்திகை 2,3,4 மிருகசீரிஷம் 1,2, திருவாதிரை புனர்பூசம் 2,3, ஆயில்யம் பூரம், சித்திரை 1,2, விசாகம் உத்திராடம் 2,3,4, திருவோணம் | ரோகிணி, மிருகசீரிஷம் 3,4 பூசம், உத்திரம் 2,3,4 அஸ்தம், சுவாதி, அனுஷம் உத்திராடம் 1, பூராடம் ரேவதி | – |
| 13. அஸ்தம் | பரணி, கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 திருவாதிரை, புனர்பூசம் ஆயில்யம், பூரம், சித்திரை 3,4 விசாகம், உத்திராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் | மிருகசீரிஷம் 3,4, பூசம் உத்திரம் 2,3,4, அஸ்தம் சித்திரை 12, சுவாதி அனுஷம், பூராடம் உத்திராடம் 1 உத்திரட்டாதி, ரேவதி | – |
| 14அ. சித்திரை 1,2, பாதங்கள் | கார்த்திகை, ரோகிணி மிருகசீரிஷம் 3,4, திருவாதிரை புனர்பூசம், மகம், உத்திரம் 2,3,4 சித்திரை 3,4, சுவாதி, உத்திராடம் 1, சதயம், பூரட்டாதி 4, ரேவதி | ஆயில்யம், அஸ்தம் சித்திரை 1,2, விசாகம் கேட்டை, மூலம் | – |

| மணமகளின் ஜன்ம நட்சத்திரம் | மத்திமப் பொருத்தம் 1 | சிறந்த பொருத்தம் 2 | உன்னதப் பொருத்தம் 3 |
|---|---|---|---|
| 14ஆ. சித்திரை 3,4 பாதங்கள் | அஸ்வினி, கார்த்திகை 2,3,4 ரோகிணி, திருவாதிரை புனர்பூசம், மகம், அஸ்தம் சித்திரை 1,2, விசாகம், கேட்டை உத்திராடம், அவிட்டம் பூரட்டாதி 1,2,3 | கார்த்திகை 1, ஆயில்யம் உத்திரம் 2,3,4, சித்திரை 3,4 சுவாதி, மூலம், திருவோணம் சதயம் | – |
| 15. சுவாதி | அஸ்வினி 1, மிருகசீரிஷம் 1,2 பூரம், சித்திரை 1,2 விசாகம் 1,2,3, அனுஷம், மூலம் உத்திராடம், திருவோணம் அவிட்டம் 3,4, சதயம் பூரட்டாதி 4, உத்திரட்டாதி | பரணி, மிருகசீரிஷம் 3,4 திருவாதிரை, புனர்பூசம் பூசம், உத்திரம், அஸ்தம் சித்திரை 3,4, பூராடம் அவிட்டம் 1,2, பூரட்டாதி 1,2,3 | – |
| 16அ. விசாகம் 1,2,3 பாதங்கள் | அஸ்வினி, பரணி, கார்த்திகை 1, மிருகசீரிஷம் 3,4 திருவாதிரை, புனர்பூசம், பூசம் பூரம், அஸ்தம், சுவாதி கேட்டை, பூராடம், அவிட்டம் 3,4 பூரட்டாதி 1,2,3 | சித்திரை 1,2, விசாகம் 1,2,3 மூலம், அவிட்டம் 1,2 சதயம் | சித்திரை 3,4 |

| மணமகளின் ஜன்ம நட்சத்திரம் | மத்திமப் பொருத்தம் 1 | சிறந்த பொருத்தம் 2 | உன்னதப் பொருத்தம் 3 |
|---|---|---|---|
| 16ஆ. விசாகம் 4ஆம் பாதம் | கார்த்திகை 2,3,4 மிருகசீரிஷம் 1,2, புனர்பூசம் 4 பூசம், மகம், பூரம், உத்திரம் 1 அஸ்தம், சித்திரை 3,4, மூலம் அவிட்டம் 3,4, பூரட்டாதி, உத்திரட்டாதி | சித்திரை 1,2, விசாசம் 4 அனுஷம், கேட்டை, அவிட்டம் 1,2, சதயம் | – |
| 17. *அனுஷம்* | அஸ்வினி, கார்த்திகை மிருகசீரிஷம் 1,2, புனர்பூசம்–1,2,3, ஆயில்யம், மகம், பூரம் உத்திரம் 2,3,4, சுவாதி உத்திராடம் 1, சதயம் பூரட்டாதி | ரோகிணி, புனர்பூசம் 4 உத்திரம் 1, அஸ்தம் விசாகம் 4, அனுஷம் கேட்டை, உத்திராடம் 2,3,4 திருவோணம், ரேவதி | – |
| 18. கேட்டை | கார்த்திகை 1, ரோகிணி, பூசம் பூரம், சித்திரை, விசாகம் 1,2,3 உத்திராடம் 2,3,4, திருவோணம் அவிட்டம் 3,4, உத்திரட்டாதி ரேவதி | கார்த்திகை 2,3,4, மிருக–சீரிஷம் 1,2, ஆயில்யம் மகம், விசாகம் 4, அனுஷம் கேட்டை, அவிட்டம் | – |

| மணமகளின் ஜன்ம நட்சத்திரம் | மத்திமப் பொருத்தம் 1 | சிறந்த பொருத்தம் 2 | உன்னதப் பொருத்தம் 3 |
|---|---|---|---|
| 19. மூலம் | பரணி, கார்த்திகை 2,3,4 மிருகசீரிஷம் 3,4, ஆயில்யம் மகம், பூரம், சுவாதி, விசாகம்4 சதயம், உத்திரட்டாதி | கார்த்திகை 1, சித்திரை விசாகம் 1,2,3, மூலம் பூராடம், அவிட்டம் 3,4 ரேவதி | – |
| 20. பூராடம் | கார்த்திகை 1, ரோகிணி மிருகசீரிஷம் 3,4, புனர்பூசம் 4 மகம், விசாகம் 1,2,3 திருவோணம், சதயம் உத்திரட்டாதி | அஸ்வினி, திருவாதிரை புனர்பூசம் 1,2,3, உத்திரம் அஸ்தம், சுவாதி, மூலம் பூராடம், பூரட்டாதி, ரேவதி | உத்திராடம் 1 |
| 21அ, உத்திராடம் 1ஆம் பாதம் | அஸ்வினி, புனர்பூசம் 4 பூசம், பூரம், சித்திரை, சுவாதி அனுஷம், அவிட்டம் 3,4 சதயம், ரேவதி | பரணி, மிருகசீரிஷம் 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 உத்திரம், அஸ்தம், மூலம் உத்திராடம் 1, பூரட்டாதி உத்திரட்டாதி | பூராடம் |

| மணமகளின் ஜன்ம நட்சத்திரம் | மத்திமப் பொருத்தம் 1 | சிறந்த பொருத்தம் 2 | உன்னதப் பொருத்தம் 3 |
|---|---|---|---|
| 21ஆ, உத்திராடம் 2,3,4 பாதங்கள் | மிருகசீரிஷம், திருவாதிரை புனர்பூசம் 1,2,3, பூரம், உத்திரம் அஸ்தம், சித்திரை 3,4, சுவாதி கேட்டை, பூராடம், பூரட்டாதி 1,2,3, ரேவதி | அஸ்வினி, பரணி, புனர்பூசம் 4, பூசம், அனுஷம் உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 பூரட்டாதி 4, உத்திரட்டாதி | – |
| 22. திருவோணம் | மிருகசீரிஷம் 3,4, திருவாதிரை புனர்பூசம் 1,2,3, பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை 3,4 சுவாதி, கேட்டை, பூராடம் பூரட்டாதி 1,2,3, ரேவதி | அஸ்வினி, பரணி, மிருக– சீரிஷம் 1,2, புனர்பூசம் 4 பூசம், அனுஷம், உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 பூரட்டாதி, உத்திரட்டாதி | – |
| 23அ. அவிட்டம் 1,2 பாதங்கள் | அஸ்வினி, கார்த்திகை 2,3,4 ரோகிணி, புனர்பூசம் 4 மகம், சுவாதி, மூலம், சதயம் பூரட்டாதி 4, ரேவதி | கார்த்திகை 1, ஆயில்யம், சித்திரை 3,4, விசாகம் கேட்டை, உத்திராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2 | – |

| மணமகளின் ஜன்ம நட்சத்திரம் | மத்திமப் பொருத்தம் 1 | சிறந்த பொருத்தம் 2 | உன்னதப் பொருத்தம் 3 |
|---|---|---|---|
| 23ஆ, அவிட்டம் 3,4ஆம் பாதங்கள் | அஸ்வினி, திருவாதிரை ஆயில்யம், மகம், உத்திரம் 1 அஸ்தம், சித்திரை 3,4, சுவாதி விசாகம் 1,2,3, உத்திராடம் 1 திருவோணம், அவிட்டம் 1,2 | கார்த்திகை, ரோகிணி விசாகம் 4, கேட்டை, மூலம் அவிட்டம் 3,4, பூரட்டாதி 1,2,3 | சதயம் |
| 24, சதயம் | பரணி, மிருகசீரிஷம் 3,4, ஆயில்யம், பூரம், சுவாதி, அனுஷம், கேட்டை, மூலம் பூராடம், உத்திராடம் அவிட்டம் 1,2 | கார்த்திகை, ரோகிணி மிருகசீரிஷம் 1,2, மகம் சித்திரை, விசாகம், சதயம் பூரட்டாதி 1,2,3 | அவிட்டம் 3,4 |
| 25அ. பூரட்டாதி 1,2,3 பாதங்கள் | பரணி, கார்த்திகை மிருகசீரிஷம் 3,4, மகம், பூரம் சித்திரை 3,4, விசாகம் உத்திராடம் 2,3,4, திருவோணம் அவிட்டம் 1,2, உத்திரட்டாதி ரேவதி | ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 சுவாதி, அனுஷம், பூராடம் உத்திராடம், அவிட்டம் 3,4 பூரட்டாதி 1,2,3 | – |

| மணமகளின் ஜன்ம நட்சத்திரம் | மத்திமப் பொருத்தம் 1 | சிறந்த பொருத்தம் 2 | உன்னதப் பொருத்தம் 3 |
|---|---|---|---|
| 25ஆ. பூரட்டாதி 4ஆம் பாதம் | பரணி, கார்த்திகை 2,3,4 மிருகசீரிஷம் 3,4, பூரம் சித்திரை 1,2, சுவாதி விசாகம் 4, அவிட்டம் 1,2 | ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 பூசம், அனுஷம், பூராடம் உத்திராடம் திருவோணம், பூரட்டாதி 4 ரேவதி | உத்திரட்டாதி |
| 26, உத்திரட்டாதி | அஸ்வினி, கார்த்திகை மிருகசீரிஷம் 1,2, பூசம், ஆயில்யம், சுவாதி, விசாகம் 4 அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம் 1 சதயம், பூரட்டாதி 1,2,3 | ரோகிணி, திருவாதிரை புனர்பூசம், உத்திரம் அஸ்தம், உத்திராடம் 2,3,4 திருவோணம், உத்திரட்டாதி | பூரட்டாதி 4 ரேவதி |
| 27, ரேவதி | பரணி, திருவாதிரை புனர்பூசம்4, பூரம், உத்திரம் சித்திரை 1,2, கேட்டை உத்திராடம், திருவோணம் அவிட்டம் 1,2, பூரட்டாதி 4 | அஸ்வினி, மிருகசீரிஷம் புனர்பூசம் 1,2,3, பூசம் அஸ்தம், அனுஷம், மூலம் பூராடம், ரேவதி | உத்திரட்டாதி |

## 5. கணப் பொருத்தம்

கணங்கள் மூன்று வகைப்படும். 1. தேவகணம், 2. மானுஷ்ய கணம் 3. ராட்சச கணம் என்பவையே ஆகும்.

அ. தேவகணம்: அஸ்வினி, மிருகசீரிஷம், புனர்பூசம், பூசம், அஸ்தம், சுவாதி, அனுஷம், திருவோணம், ரேவதி ஆகிய இந்த நட்சத்திரங்கள் தேவகணத்தைச் சேர்ந்தவையாகும்.

ஆ. மானுஷ்ய கணம்: பரணி, ரோகிணி, திருவாதிரை, பூரம், பூராடம், பூரட்டாதி, உத்திரம், உத்திரட்டாதி ஆகிய ஒன்பது நட்சத்திரங்களும் மானுஷ்ய கணமாகும்.

இ. ராட்சச கணம்: (ராஜச கணம்) லி கிருத்திகை, ஆயில்யம், மகம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், அவிட்டம், சதயம் ஆகிய இந்த ஒன்பது நட்சத்திரங்களும் ராட்சச கணங்களாகும். ராஜச குணம்தான் நாளடைவில் ராட்சச கணம் என்று வழக்குச் சொல்லாக மருவிவிட்டது!

கணப் பொருத்தத்தைப் பார்க்கும் விதம் :

| ஸ்திரீ கணம் | புருஷ கணம் | | |
|---|---|---|---|
| | உத்தமம் | மத்திமம் | அதமம் |
| தேவ கணம் | தேவகணம் | மானுஷ்ய கணம், ராட்சச கணம் | |
| மானுஷ்ய கணம் | மானுஷ்ய கணம் தேவ கணம் | | ராட்சச கணம் |
| ராட்சச கணம் | ராட்சச கணம் | | தேவகணம் மானுஷ்ய கணம் |

ஸ்திரீ ராட்சச கணமாகவும் புருஷன் மானுஷ்ய கணமாகவும் இருந்தால் புருஷ நட்சத்திரத்திற்கு, ஸ்திரீ நட்சத்திரம் 14க்கு மேல் இருந்தால் ஸ்திரீ ராட்சச கணமானாலும் தோஷமில்லை. விவாகம் செய்விக்கலாம்.

## 6. மாஹேந்திரப் பொருத்தம்

பெண்ணின் நட்சத்திரத்தை முதலாக வைத்து, எண்ணும்போது புருஷ நட்சத்திரம், 4, 7, 10, 13, 16, 19, 22, 25 ஆவதாக வந்தால் உத்தமம். மாஹேந்திரப் பொருத்தம் உண்டு. இது சந்தான (புத்திர) விருத்தியை குறிக்கும். ஆரோக்கியமும் விருத்தியடையும்.

## 7. ஸ்திரீ தீர்க்கப் பொருத்தம்

பெண்ணின் நட்சத்திரத்தை முதலாவதாகக் கொண்டு எண்ணி வரும்போது புருஷ நட்சத்திரம் 13க்கும் மேல் இருந்தால் ஸ்திரீ தீர்க்கமுண்டு. சிலர் 7க்கும் மேற்பட்டாலும் ஸ்திரீ தீர்க்கம் உண்டென்று கூறுவர். இது சகல சம்பத்தையும் தரும். இந்தப் பொருத்தம்

இல்லையென்றால் ஸ்திரீக்கு தீர்க்காயுள் இராது. கண்டம் உண்டாகும்.

## 8. யோனிப் பொருத்தம்

### யோனிப் பொருத்தம் பார்க்கும் முறை

ஸ்திரீ புருஷர்களின் நட்சத்திரங்கள் ஒரே யோனியாக இருந்தால் உத்தமம். இதனால் ஆண் பெண் உடலுறவும் தாம்பத்தியமும் சிறப்பாக இருக்கும். சகல சம்பத்தும் விருத்தியடையும். இருவர்களின் நட்சத்திர யோனிகள் விரோதமுடையவைகளாக இருந்தால் பொருந்தாது விரோதமில்லாமல் வெவ்வேறு யோனிகளைச் சேர்ந்திருந்தால் மத்திமம்.

(1) பசுவும் புலியும் (2) யானையும் சிங்கமும் (3) குதிரையும் எருமையும் (4) நாயும் மானும் (5) கீரியும் பாம்பும் (6) குரங்கும் ஆடும் (7) பூனையும் எலியும் ஆக ஆண் பெண், பெண் ஆண் நட்சத்திரங்களிருந்தால் அந்த மிருகங்களுக்குள் அதிக விரோதமிருப்பதுபோல் தாம்பத்திய ஒற்றுமையிராது. ஆகவே இதை ஆராய்ந்து அறிந்து செய்ய வேண்டும். இந்த யோனிப் பொருத்தம் அனுகூலமாக இருந்தால், தம்பதிகள் பரஸ்பர மன ஒற்றுமையுடனும் உடலுறவிலும் ஒற்றுமையுடன் இசைந்து இணைபவர்களாகவும் இருப்பார்கள். சயன சௌக்யாதிகளுடன் சுகமாகவும் இன்பமாகவும் வாழ்வார்கள்.

# நட்சத்திரங்களும் யோனிகளும்

| ஆண் யோனி நட்சத்திரம் | பெண் யோனி நட்சத்திரம் | | யோனி | பகை மிருகம் | | பகை யோனி நட்சத்திரம் |
|---|---|---|---|---|---|---|
| அஸ்வினி, | சதயம் | → | குதிரை | எருமை | - | சுவாதி, அஸ்தம் |
| பரணி, | ரேவதி | → | யானை | சிங்கம் | - | பூரட்டாதி, அவிட்டம் |
| பூசம், | கிருத்திகை | → | ஆடு | குரங்கு | - | பூராடம்- திருவோணம் |
| ரோகிணி, | மிருகசீரிஷம் | → | பாம்பு | கீரி | - | உத்திராடம் |
| மூலம், | திருவாதிரை | → | நாய் | மான் | - | கேட்டை, அனுஷம் |
| ஆயில்யம், | புனர்பூசம் | → | பூனை | எலி | - | மகம், பூரம் |
| மகம், | பூரம் | → | எலி | பூனை | - | ஆயில்யம், புனர்பூசம் |
| உத்திரம், | உத்திரட்டாதி | → | பசு | புலி | - | விசாகம், சித்திரை |
| சுவாதி, | அஸ்தம் | → | எருமை | குதிரை | - | அஸ்வினி, சதயம் |
| விசாகம், | சித்திரை | → | புலி | பசு | - | உத்திரம், உத்திரட்டாதி |
| கேட்டை, | அனுஷம் | → | மான் | நாய் | - | மூலம், திருவாதிரை |
| பூராடம், | திருவோணம் | → | குரங்கு | ஆடு | - | பூசம், கிருத்திகை |
| பூரட்டாதி, | அவிட்டம் | → | சிங்கம் | யானை | - | பரணி, ரேவதி |
| உத்திராடம், | | → | கீரி | பாம்பு | - | ரோகிணி, மிருகசீரிஷம் |

## வேறு முறை

யானைக்குச் சிங்கமும், குதிரைக்குப் பசுவும் எருமையும், பசு, எருமை, மான், நாய் இவைகளுக்குப் புலியும், குரங்குக்கு ஆடும், எலிக்குப் பூனையும் பாம்பும், பாம்புக்குக் கீரியும் ஆடும், பூனைக்கு நாயும் புலியும் பகையாகும். மானுக்குப் பசுவும், ஆட்டுக்குக் குதிரையும் நாய்க்கு மனுஷனும் நட்பாகும். இவை அல்லாதவை சமமாகும். ஸ்திரீ புருஷ யோனிகளுக்குள் பகையில்லாமலிருந்து, புருஷனுக்கு ஆண் யோனியும் பெண்ணுக்கு பெண் யோனியுமாகில் உத்தமம். இருவருக்கும் ஆண் யோனியாகில் மத்திமமாகும். புருஷனுக்குப் பெண் யோனியும் பெண்ணுக்கு ஆண் யோனியுமானாலும், இருவருக்கும் சத்துரு யோனியாகிலும் யோனிப் பொருத்தம் பொருந்தாது. இதன் பலன் அன்யோன்ய விஷயமாகும்.

## 9. ராசிப் பொருத்தம்

"ராசி" என்பது ஆண் அல்லது பெண்ணின் ஜனன காலத்தில் சந்திரன் இருக்குமிடமாகும். ஸ்திரீ புருஷர்கள் ஒரே ராசியானால் உத்தமம். ஸ்திரீ ராசிக்குப் புருஷ ராசி 6க்கு மேற்பட்டிருந்தாலும் உத்தமம். ஸம ஸப்தம (ஏழுக்கு ஏழாவது) ராசியாக இருந்தால் மகா உத்தமம்.

ஸ்திரீ ராசிக்கு 2 ஆமிடம் புருஷ ராசியானால் ஆயுளுக்குத் தோஷம் உண்டாகும். ஆகவே திருமணம் செய்யலாகாது. ஸ்திரீ ராசிக்கு 3வது ராசியாக புருஷ ராசி வந்தால் வியாதியும் பீடையும் மனக் கஷ்டமும் சம்பவிக்கும். ஸ்திரீ ராசிக்கு 4வது ராசியாகப் புருஷ ராசி வருமானால் தாரித்திரியம். 5 வதானால் மாங்கல்ய விருத்தியிராது. 6வதானால் புத்திர நஷ்டம். புருஷன் அல்லது மனைவி நோய்வாய்ப்படுவார்கள். புத்திர நஷ்டம். ஸ்திரீ ராசிக்குப் புருஷராசி 7வதானால் தீர்க்கமான ஆயுளையும் சிறப்பான சௌக்கியத்தையும் கொடுக்கும். ஸ்திரீ ராசிக்குப் புருஷ ராசி 8வதாக வந்தால், புத்திர லாபம், 9வதானால் தீர்க்காயுளுடன் சௌமாங்கல்ய

விருத்தியுமுண்டாகும். 10வதானால் திரவிய லாபம். 11வதானால் சந்தோஷமும் சுகமும் உண்டு. 12வதானால் தீர்க்காயுள். ஆரோக்ய விருத்தியும் உண்டாகும். இவ்வாறு ராசிப் பொருத்தத்துக்குப் பலன்கள் கூறப்பட்டுள்ளன.

ராசிப் பொருத்தம் பார்ப்பதில் சில சிறப்பு விதிகளும் உண்டு.

(அ) மேஷத்திற்கும் சிம்மத்துக்கும் (ஆ) கடகத்திற்கும் விருச்சிகத்துக்கும் 5, ஆமிட தோஷமில்லை விவாகம் செய்யலாம். (அ) கும்பத்துக்கும் சிம்மத்துக்கும் (ஆ) கடகத்துக்கும் மகரத்துக்கும் சம சப்தமமானாலும் தோஷமுண்டு. திருமணம் செய்யலாகாது.

(அ) மேஷத்தோடு கன்னிக்கும், (ஆ) தனுசோடு ரிஷபத்துக்கும், (இ) துலாத்தோடு மீனத்துக்கும், (ஈ) கும்பத்தோடு கடகத்துக்கும், (உ) சிம்மத்தோடு மகரத்திற்கும், (ஊ) மிதுனத்தோடு விருச்சிகத்திற்கும் ஷஷ்டாஷ்டம தோஷம் கிடையாது. இவர்களுக்கும் திருமணம் செய்யலாம்.

புருஷ ராசி இரட்டைப்படையாக வந்தாலும் ஸ்திரீ ராசிக்கு 2வது ராசியானாலுங்கூட தோஷமில்லை. புருஷ ராசி ஒற்றை ராசியானால் திருமணம் செய்யக் கூடாது. ராசிப் பொருத்தம் பெண்ணுக்கும், ஆணுக்கும் பொருந்தியிருந்தால், வம்ச விருத்தியுண்டாகும்.

## 10. ராசியதிபதிப் பொருத்தம்

மேஷ ராசிக்கு அதிபதி அங்காரகன்: ரிஷப ராசிக்கு அதிபதி லி சுக்கிரன். மிதுனத்துக்கு அதிபதி புதன். கடகத்திற்கு அதிபதி சந்திரன்: சிம்மத்துக்கு அதிபதி சூரியன்: கன்னிக்கு அதிபதி புதன்: துலாத்துக்குச் சுக்கிரன்:

விருச்சிகத்துக்குச் செவ்வாய்: தனுசுக்குக் குரு: மகரத்திற்கும் கும்பத்திற்கும் சனி: மீனத்துக்கு குரு.

சூரியனுக்கும் சந்திரனுக்கும் தனித்தனியே ஒவ்வொரு ராசி. சிம்மமும் கடகமும் அவர்களது ராசிகள். மற்ற ஐந்து கிரகங்களுக்கும் இரண்டிரண்டு ராசிகள் சொந்தம் இவைகளே ஸ்வக்ஷேத்திரம் எனப்படும். இவை ஆட்சி வீடுகளாக வழங்கப் பெறுகின்றன.

கிரகங்களுக்குள் பரஸ்பரப் பகைவரும், நட்பும், சமமும் உண்டு.

ராசி அதிபதி பொருத்தத்தைப் பார்க்கும் முறை

ஸ்திரீ புருஷ ராசியதிபதிகள் மித்திரர்களானாலும் சமர்களானாலும் உத்தமம். சத்துரு மித்திரரானால் மத்திமம். சம சத்துருக்களானால் பொருந்தாது. இதனால் தோஷமுண்டு. நாசம் விளைவிக்கும். இந்த ராசியதிபதிப் பொருத்தம், பொருந்தியிருந்தால், புத்திரர்கள் யோகசாலிகளாகவும் தீர்க்காயுளுடனும் நற்புகழுடனும் விளங்குவார்கள்.

| ஸ்திரீ புருஷ ராசியதிபதி | நட்பு | சமம் | பகை |
|---|---|---|---|
| சூரியனுக்கு<br>(சிம்மம்) | சந்திரன்<br>அங்காரகன்<br>குரு<br>(கடகம்,<br>மேஷம்<br>விருச்சிகம்) | புதன்<br>(மிதுனம்<br>கன்னி) | சுக்கிரன்<br>சனி<br>(ரிஷபம்,<br>துலாம்,<br>மகரம்<br>(கும்பம்) |
| சந்திரனுக்கு<br>(கடகம்) | சூரியன்<br>புதன்<br>(சிம்மம்,<br>மிதுனம்<br>கன்னி) | அங்காரகன்<br>குரு<br>சுக்கிரன்<br>சனி<br>(மேஷம்,<br>விருச்சிகம்<br>தனுர்,<br>மீனம்<br>ரிஷபம்,<br>துலாம்,<br>மகரம்,<br>கும்பம்) | |
| அங்காரகனுக்கு<br>(மேஷம்,<br>விருச்சிகம்) | சூரியன்<br>சந்திரன்<br>குரு<br>(கடகம்,<br>சிம்மம்,<br>தனுர்,<br>மீனம்) | சுக்கிரன்<br>சனி<br>(ரிஷபம்,<br>துலாம்,<br>மகரம்,<br>(கும்பம்) | புதன்<br>(மிதுனம்,<br>கன்னி) |
| புதனுக்கு<br>(மிதுனம்,<br>கன்னி) | சூரியன்<br>சுக்கிரன்<br>(சிம்மம்,<br>ரிஷபம்,<br>துலாம்) | அங்காரகன்<br>குரு, சனி<br>(மேஷம்,<br>விருச்சிகம்,<br>மகரம்,<br>கும்பம்,<br>தனுர்,<br>மீனம் | சந்திரன்<br>(கடகம்) |

| ஸ்திரீ புருஷ ராசியதிபதி | நட்பு | சமம் | பகை |
|---|---|---|---|
| குருவுக்கு (தனுர், மீனம்) | சூரியன் சந்திரன் அங்காரகன் (கடகம், சிம்மம், மேஷம், விருச்சிகம்) | சனி (மகரம் கும்பம்) | புதன் சுக்கிரன் (மிதுனம், கன்னி, ரிஷபம், துலாம்) |
| சுக்கிரனுக்கு (ரிஷபம், துலாம்) | புதன், சனி (மிதுனம், கன்னி, மகரம், கும்பம்) | அங்காரகன் குரு (தனுர், மீனம், மகரம், கும்பம்) | சூரியன் சந்திரன் (சிம்மம், கடகம்) |
| சனிக்கு (மகரம், கும்பம்) | புதன் சுக்கிரன் (மிதுனம், கன்னி, ரிஷபம், துலாம்) | குரு (தனுர், மீனம்) | சூரியன் சந்திரன் அங்காரகன் (சிம்மம், கடகம், மேஷம் விருச்சிகம்) |

ராசி அதிபதிகளின் பொருத்தத்தை எளிதாக நிச்சயிப்பதற்கு மேலே உள்ள அட்டவணை பெரிதும் பயன்படும்.

## 11. வசியப் பொருத்தம்

மேஷம் முதலிய ராசிகளும் அவற்றின் வசியப் பொருத்த ராசிகளும்

ஸ்திரீ ராசி, மேஷ ராசியாக இருந்து, புருஷ ராசி, சிம்மம் அல்லது விருச்சிக ராசியானால் பொருத்தமுண்டு.

ஸ்திரீ ராசி, ரிஷபமாகயிருந்து, புருஷ ராசி கடகமாகவோ அல்லது துலா ராசியாகவோ இருந்தால் வசியம் உண்டு.

மிதுன ராசிக்குக் கன்னியா ராசி வசியம்.

கடக ராசிக்கு, தனுசும் விருச்சிகமும் வசியம்.

சிம்ம ராசிக்கு, மகரராசி வசியம்

கன்யா ராசிக்கு, ரிஷப ராசியும் மீனராசியும் வசியம்.

துலா ராசிக்கு, மகர ராசி வசியம்.

விருச்சிக ராசிக்கு, கடக ராசியும் கன்னி ராசியும் வசியம்

தனுசு ராசிக்கு, மீனம் வசியம்

மகரத்துக்குக் கும்ப ராசியும் மேஷ ராசியும் வசியம்

கும்ப ராசிக்கு, மீனம் வசியம்.

மீன ராசிக்கு, மகர ராசி வசியம்.

வசியப் பொருத்தத்தைப் பார்க்கும் முறை

மேலே கூறியுள்ளபடி, ஸ்திரீ ராசிக்கு (சந்திர லக்கினத்துக்கு) புருஷராசி வசியமாக இருந்தால் உத்தமம்.

ஸ்திரீ ராசிக்குப் பார்ப்பதைப் போலவே, புருஷ ராசிக்கும் வசியப் பொருத்தம் பார்ப்பதுண்டு.

அவ்வாறு பார்க்கும் போது, புருஷ ராசிக்கு, ஸ்திரீ ராசி வசியமாக இருந்தால் மத்திமம். இரண்டு ராசிகளுமே வசியமாக வராவிட்டால் அதமம். இந்தப் பொருத்தம், அனுகூலமாக இருந்தால் தம்பதிகள் இருவரும் பரஸ்பரம் உள்ளன்புடனும் நேசமாகவும் வசீகரத்துடன் எப்போதும்

இனிமையாகவும் பிரியமாகவும் வாழ்வார்கள். இந்த வசியப் பொருத்தம், வதூவரர்களுக்குப் பொருத்தமாக இருந்தால், திருமணம் செய்விக்கலாம்.

## 12. ரஜ்ஜுப் பொருத்தம்

மனிதனின் உடலைப் போல பாதம் முதல் சிரசு வரை அஸ்வினி, பரணி, கிருத்திகை என்று ஏறு முகமாக அமைந்திருப்பது ஆரோஹணம் ரஜ்ஜு. சிரசு முதல் பாதம் வரையில் திருவாதிரை புனர்பூசம் என்று இறங்கி வருவது அவரோஹண ரஜ்ஜு. இப்படியே மற்ற நட்சத்திரங்களுக்கும் பார்க்க வேண்டியது.


இரண்டும் ஆரோஹணமாக இருந்தால் மிகவும் நல்லது. ஒன்று ஆரோஹணமும் மற்றொன்று அவரோஹணமுமானால் மத்திமம் என்றும் சொல்லப் பட்டுள்ளது. ஒன்று ஆரோஹணத்திலிருந்தாலும் மற்றொன்று அவரோஹணத்திலும் இருந்தாலும் ஒரே ரஜ்ஜுவானாலும் பொருத்தம் உண்டு. இரண்டுமே பாதரஜ்ஜுவாக வந்தால் தம்பதிகள் வெளி தேசங்களில் வாசம் செய்ய நேரும். இரண்டுமே ஊரு (தொடை) ரஜ்ஜுவானால் தனதான்ய நாசம் உண்டாகும். நாபி ரஜ்ஜுவானால் புத்திர தோஷம் சம்பவிக்கும். கண்ட ரஜ்ஜுவானால் ஸ்திரீக்கு ஆகாது. சிரசு ரஜ்ஜுவானால் விவாகம் செய்யக் கூடாது. வெவ்வேறு ரஜ்ஜுவானால் மிகவும் மங்களம் என்றும் சிலர் சொல்கிறார்கள். இந்த

## 9வது ரஜ்ஜுப் பொருத்தம் பார்க்க... ஓவியம் 1

| சிரசு | மிருகசீரிஷம் | | சித்திரை | | அவிட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | ரோஹிணி | திருவா | அஸ்தம் | சுவாதி | திருவோணம் | சதயம் |
| | கிருத்திகை | புனர் | உத்திரம் | விசாகம் | உத்திரம் | பூரட்டாதி |
| | பரணி | பூசம் | பூரம் | அனுஷம் | பூராடம் | உத்திரட்டாதி |
| பாதம் | அஸ்வினி | ஆயில்யம் | மகம் | கேட்டை | மூலம் | ரேவதி |

ஆரோஹணம் — அவரோஹணம் (ஒவ்வொரு கட்டத்தின் இருபுறமும்)

## 10வது ரஜ்ஜுப் பொருத்தம் பார்க்க... ஓவியம் 2



ரஜ்ஜுப் பொருத்தம் அனுகூலமாக இருந்தால் மாங்கல்ய விருத்தியாகச் செய்யும்.

இதர ஒன்பது பொருத்தங்களும் சரியாக இருந்தாலும் இந்த ரஜ்ஜுப் பொருத்தம் இல்லாவிட்டால் திருமணமே செய்யக் கூடாது என்பது பெரியோர்களின் பெரும்பாலோரது கருத்து ஆகும். இந்த ரஜ்ஜுப் பொருத்தத்தைப் பற்றி வடமொழி ஜோதிட நூல்கள்தான் மேற்கூறியவாறு கூறியுள்ளது. இதனை எளிதாக விளக்குவதற்கும் கீழ்க்காணும் ரஜ்ஜுப் பொருத்தம் பார்க்கும் ஓவியங்கள் வரையப் பெற்றுள்ளன.

மிகவும் முக்கியமான இந்த ரஜ்ஜுப் பொருத்தத்தை எளிதாக அறிந்து கொள்வதற்கு, ஒரு ஓவிய முறை பின்பற்றப் பெறுகிறது.

நேராக மூன்று முக்கோணங்களை வரைந்து, குறுக்காக நான்கு நேர்க்கோடுகளைக் கீறினால் 27 சந்திப்புகள் (ஓன்ய்ப்ஸ்ரீற்ண்ர்ய்) உண்டாகும். இந்த 27ம் இருபத்தேழு நட்சத்திரங்களைக் குறிக்கும்.

ரஜ்ஜுப் பொருத்தம் பார்க்கும் ஓவியம் (2)

குறுக்காகக் கீறிய அடிவரைக்குக் கால் என்றும்

அதற்கு மேலுள்ள வரைக்குத் தொடை என்றும்

அதற்கும் மேலுள்ள வரைக்கு வயிறு என்றும்

அதற்கு மேலுள்ள வரைக்குக் கழுத்து என்றும்

முக்கோணங்கள் மூன்றின் உச்சிகள் மூன்றுக்கும் தலை என்றும் பெயராகும்.

பெண்ணின் நட்சத்திரத்தை முதலாக வைத்து மேல் கீழாக வலமாக முறையே எண்ணிவரும் போது புருஷனுடைய நட்சத்திரமும் பெண்ணினுடைய

நட்சத்திரமும் குறுக்காகக் கீறிய வரைகளில் (கோடுகளில்) ஒரே கோட்டில் இருக்கலாகாது.

ஸ்திரீ புருஷர்களின் ஜன்ம நட்சத்திரங்கள் இரண்டும் ஒரே ரஜ்ஜுவில் இல்லாமலிருந்தால் உத்தமம்.

கால் வரையில் வந்தால் ...... பொருளழிவு

தொடை வரையில் வந்தால் ...... மலடி

வயிற்று வரையில் வந்தால் ...... புத்திரஹானி

கழுத்து வரையில் வந்தால் ...... புருஷன் இறப்பு (கண்ட ரஜ்ஜு)

சிரசு வரையில் வந்தால் ...... பெண் இறப்பு

என்ற பலன்களை அறிந்து, ரஜ்ஜுப் பொருத்தத்தைப் பார்த்து பரிசீலித்துக் கொள்ளலாம். இதனைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முன் பக்கத்திலுள்ள ஓவியம் லி2ஜ பயன்படுத்திக் கொள்ளலாம்.

## 13. வேதைப் பொருத்தம்

| | |
|---|---|
| அஸ்வினிக்குக் - | கேட்டை |
| பரணிக்கு - | அனுஷம் |
| கிருத்திகைக்கு - | விசாகம் |
| ரோகிணிக்கு - | சுவாதி |
| திருவாதிரைக்கு- | திருவோணம் |
| புனர் பூசத்திற்கு- | உத்திராடம் |
| பூசத்துக்கு- | பூராடம் |
| ஆயில்யத்துக்கு- | மூலம் |
| மகத்துக்கு- | ரேவதி |

பூரத்திற்கு- உத்திரட்டாதி

உத்திரத்துக்கு- பூரட்டாதி

அஸ்தத்துக்கு- சதயம்

மேலே எழுதியுள்ள இரண்டிரண்டு நட்சத்திரங்களும் ஒன்றுக்கொன்று வேதையாகும். மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம் ஆகிய மூன்று நட்சத்திரங்களும் ஒன்றுக்கொன்று வேதையாகும்.

ஆண் பெண்களின் நட்சத்திரங்கள் பரஸ்பரம் வேதையில்லாமல் இருந்தால் உத்தமம். வேதைப் பொருத்தம் வேதனைகள் இல்லாத வாழ்வைத் தரும் என்பதாலேயே வேதைப் பொருத்தம் பார்க்கப் பெறுகிறது. இந்த வேதைப் பொருத்தம், திருமணத் தம்பதிகளுக்கு சாதகமாகவும் அனுகூலமாகவும் இருந்தால் சகலவிதமான தோஷங்களும் நிவர்த்தியாகித் தம்பதிகள் எப்போதும் இன்பமாகவும் மனத் திருப்தியுடனும் இருப்பார்கள்.

## 14. பொருத்தங்களும் விதி விலக்குகளும்

இதுவரை விவரித்துள்ள பத்துவிதப் பொருத்தங்களில், தினம், கணம், யோனி, ரஜ்ஜு, ராசி ஆகிய இவ்வைந்து பொருத்தங்களும் திருமணஞ் செய்து கொள்ளவிருக்கும் ஆண் பெண்களுக்குப் பொருத்தமாக இருக்க வேண்டியது மிகவும் முக்கியமாகும். அவற்றிலும் தினப் பொருத்தமும் ரஜ்ஜுப் பொருத்தமும் மிகமிக முக்கியமாகும். ரஜ்ஜுப் பொருத்தத்தையே மிகமிக முக்கியமாகக் கவனித்துப் பார்க்கவேண்டியது, அவசியமாகும். ரஜ்ஜு தட்டினால் விவாகஞ் செய்யக் கூடாது என்ற முறையை நீண்ட நெடுங்காலத்திலிருந்தே நம் முன்னோர்கள் கூறிவருகின்றனர் என்பது மட்டுமல்ல. பலரது அனுபவத்திலும் ரஜ்ஜு தட்டியவர்களுக்குத் திருமணம் செய்தபிறகு நேர்ந்த விளைவுகளே இத்தகைய நம்பிக்கைக்கு ஆதாரமாக இருந்து வருகிறது.

எனவே, திருமணம் நிச்சயிப்பதற்கு முன்பு, பொருத்தம் பார்க்கும் ஸ்திரீ புருஷர்களுக்குக் குறைந்தது ஐந்து பொருத்தங்கள் பொருத்தமாக இருக்கவேண்டும். ஐந்துக்குங் குறைந்திருந்தால் சகுனம் பார்த்துத் திருமணம் செய்யலாம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

சிலவித விசேஷ விதிவிலக்குகள்

சில வகையான விசேஷ விதிகளின்படியும் இந்தத் தசவிதப் பொருத்தங்களில் பல பொருத்தங்களைப் பார்க்காமலேயே திருமணஞ் செய்யலாம் என்று ஜோதிடர்களில் அனுபவம் வாய்ந்தவர்கள் கருதுகிறார்கள்.

1. ஸ்திரீ, புருஷர்களின் ஜன்ம ராசியின் அதிபர்கள் ஒரே கிரகமாக இருந்தாலும், அவர்கள் நட்புக் கிரகங்களாக இருந்தாலும் அந்த ராசிகள் சமசப்தம ராசிகளாக இருந்தாலும், அத்தகைய ராசிகளைக் கொண்ட ஜோடிக்கு ரஜ்ஜு, வேதை, கணம், ராசி ஆகிய பொருத்தங்களைப் பார்க்கவேண்டிய அவசியமில்லை.

2. அதுபோல சில ராசியோடு சிலவகை ராசிகளுக்கு ஷஷ்டாமதோஷம் கிடையாது. ஷஷ்டாஷ்ட தோஷமிருந்தாலும் சிலர் திருமணம் செய்வதற்கு அஞ்சுவார்கள். சிலர், ஷஷ்டாஷ்டம தோஷம் இருக்கிறதே என்று பயமுறுத்துவார்கள். மேஷத்துடன் கன்னிக்கும், தனுசுடன் ரிஷபத்துக்கும், கும்பத்துடன் கடகத்திற்கும், சிம்மத்துடன் மகரத்துக்கும், மிதுனத்துடன் விருச்சிகத்துக்கும், ஷஷ்டாஷ்ம தோஷம் கிடையாது.

3. புருஷனுடைய நட்சத்திரத்திற்குப் பதினாலு நட்சத்திரங்களுக்கு மேலாக ஸ்திரீயின் நட்சத்திரம் இருந்தாலும், ஸ்திரீ ராட்சச கணமானாலும் தோஷமில்லை. விவாகம் செய்யலாம்.

4. புருஷனுடைய ஜன்ம நட்சத்திரமும், ஸ்திரீயினுடைய ஜன்ம நட்சத்திரமும் அறிந்து பொருத்தங்களைப் பார்க்கலாம். தவிர ஸ்திரீயின் ஜன்ம நட்சத்திரமும் புருஷனுடைய நாம நட்சத்திரமும் வைத்துப் பொருத்தம் பார்க்கக் கூடாது.

திருமண விஷயங்களில் முதலில், ஸ்திரீ புருஷர்களின் மனப் பொருத்தம் தான் மிகவும் முக்கியம். பாத்திரம் அறிந்து பிட்சையிடு, கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு என்பது ஒரு பழமொழி. ஒரே கோத்திரத்தைச் சேர்ந்த ஆணும், பெண்ணும் திருமணம் செய்து கொள்ளக் கூடாது. கோத்திரம் என்பது ஆண் அல்லது பெண்ணின் மூதாதையரான முனிவரின் வமிச வழியைக் குறிக்கும். ஒரே ரிஷியின் கோத்திரமானால் அந்த ஆணும் பெண்ணும் அண்ணனும் தங்கையும் போன்றவர்களாவார்கள். எனவே இவை இரண்டையும் தெரிந்து கொண்ட பிறகே, மற்ற தசவிதப் பொருத்தங்களையும் சகுன நிமித்தங்களையும் கணித்து விவாகம் செய்ய வேண்டும்.

## 15. நாடிப் பொருத்தம்

இந்தியாவின் சிற்சில பகுதிகளில் மட்டுமே இந்த நாடிப் பொருத்தத்தைப் பார்க்கிறார்கள். குறிப்பாக நாடி சாஸ்திரம் என்ற நூல் வைத்தியத்துறையில் இருப்பதைத் தமிழ்ச் சித்த வைத்தியர்கள் அறிவார்கள். தமிழகத்தில் மட்டுமே, பழைய மரபுப்படி வாழ்க்கை முறையை அனுசரித்துத் திருமணம் செய்பவர்கள் இந்த நாடிப் பொருத்தத்தைப் பார்ப்பதுண்டு. நட்சத்திரப் பொருத்தத்தினை பற்றி எழுதியுள்ளவைகளே இந்த நாடிப் பொருத்தத்துக்கும் பொருந்தும். இந்த நாடிகள் மூவகைப்படும். அவை முறையே வாமபார்ச்வ நாடி, மத்யநாடி, வலது பார்ச்வ நாடி என்பவையாகும்.

ஸ்திரீ புருஷ நட்சத்திரங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு நாடிகளிலிருந்தால் உத்தமம். நாடிப் பொருத்தம் உண்டு. இரண்டுமே மத்ய நாடியிலிருந்தால் புருஷனுக்கு ஆகாது.

| 1 | 2 | 3 |
|---|---|---|
| **வாமபார்ச்வநாடி** | **மத்யநாடி** | **வலது பார்ச்வநாடி** |
| **நட்சத்திரங்கள்** | **நட்சத்திரங்கள்** | **நட்சத்திரங்கள்** |
| *கிருத்திகை* | *பரணி* | *அஸ்வினி* |
| *ரோகிணி* | *மிருகசீரிஷம்* | *திருவாதிரை* |
| *ஆயில்யம்* | *பூசம்* | *புனர்பூசம்* |
| *மகம்* | *பூரம்* | *உத்திரம்* |
| *சுவாதி* | *சித்திரை* | *அஸ்தம்* |
| *விசாகம்* | *அனுஷம்* | *கேட்டை* |
| *உத்திராடம்* | *பூராடம்* | *மூலம்* |
| *திருவோணம்* | *அவிட்டம்* | *சதயம்* |
| *ரேவதி* | *உத்திரட்டாதி* | *பூரட்டாதி* |

ஸ்திரீ புருஷ நட்சத்திரங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு நாடிகளிலிருந்தால் உத்தமம். நாடிப் பொருத்தம் உண்டு. இரண்டுமே மத்ய நாடியிலிருந்தால் புருஷனுக்கு ஆகாது.

# இரண்டாம் பகுதி

## 1. ஜாதகப் பொருத்தங்கள்

திருமணப் பொருத்தங்களைப் பார்ப்பதற்குத் தசவிதப் பொருத்தங்களைப் பார்க்கும் முறைகளை விவரித்தபின் இப்போது ஜாதகப் பொருத்தங்களைப் பற்றி கூறுகின்றோம். வதூவரர்களுக்கு ஜாதகப் பொருத்தங்கள் சரியாக அமைவது தான் மிகவும் முக்கியம். ஒருவரின் ஜாதகத்தில், ஆணாயினும் சரி பெண்ணாயினும் சரி,

அவரது ஜாதகத்திலுள்ள பன்னிரண்டு ராசிகளில் அவரது ஜன்ம லக்கினத்திலிருந்து 7வது ஸ்தானம்தான் களத்திரஸ்தானம், களத்திரபாவம் என்ற பெயர்களில் வழங்கப் பெறுகிறது. களத்திரம் என்பது மனைவியையும் குறிக்கும் கணவனையும் குறிக்கும். ஆண் ஜாதகமாயின் மனைவியையும் பெண் ஜாதகமாயின் கணவனையும் குறிக்கும்.

இந்த களத்திர பாவத்தைத் தான் மிகவும் தீவிரமாக ஆராய்ந்து பார்த்து, வதூவரர்களின் திருமணத்திற்கு நிச்சயிக்க வேண்டும். ஒரு பெண்ணுக்குப் பருவ வயது வந்ததும், திருமணம் செய்வதற்கு ஏற்பாடு செய்யும் பெற்றோர்கள், மாப்பிள்ளைகளைத் தேடி அலையாமல் இருப்பதற்குத் தகுந்த மருமகனைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றால், வரன்களின் ஜாதகங்கள் ஒவ்வொன்றிலும் இந்தக் களத்திர பாவத்தைத்தான் கவனமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். மணமாக வேண்டிய பெண்ணின் ஜாதகத்திலும் இந்தக் களத்திர பாவமே மிகவும் முக்கியமாகப் பார்க்க வேண்டியதாகும். அதுமட்டுமல்ல, பெண்கள் ஜாதகமாயின், லக்கினத்திற்கு எட்டாவது ஸ்தானத்தையும் அந்த ஸ்தானத்துக்குரிய கிரகத்தின் நிலைமைகளையும் கவனிக்க வேண்டும். ஏனென்றால் அதுதான் மங்கையரின் மாங்கல்ய ஸ்தானம். அதேபோல, ஆணின் ஜன்ம லக்கினத்துக்கு எட்டாவது ஸ்தானம், ஆயுள் பாவமாகவும் உயிரைப் பற்றிக் கூறக்கூடியதுமாகும். எனவே, ஆணுக்கு உயிரைப் போன்றவள் மனைவி. அதுபோல ஒரு பெண்ணுக்கு அவள் கணவன் தான் உயிரைப் போன்றவன் என்பதாலேயே இந்த 8வது ஸ்தானம், பெண்களின் ஜாதகத்தில் மாங்கல்ய ஸ்தானம் என்று வழங்கப் பெறுகிறது. மாங்கல்ய பலத்துடன் இருப்பவளுக்குத்தான் சகலவிதமான மங்களங்களும் 16 வகைப் பாக்கியங்களும் வாய்த்திருப்பதால் அவளையே "சுமங்கலி" யாக ஜோதிட நூல்கள் போற்றுகின்றன.

## களத்திர பாவம்

ஒருவருடைய ஜாதகத்தில் ஜன்ம லக்கினம் அல்லது சந்திர லக்கினத்திலிருந்து ஏழாவது ஸ்தானத்தை, களத்திரஸ்தானம் என்று சொல்வது ஜோதிட மரபு. ஆண் அல்லது பெண்ணின் ஜாதகத்திற்கு ஏழாவது ஸ்தானத்தைக் கொண்டுதான், விவாகம், பார்யை அல்லது பர்த்தா, பருப்பு, தயிர், வெல்லம், பால், வரவு, செல்லுதல், காமரபிப் பிராப்தி, மூத்திராசயம், நஷ்டமான தனம் திருட்டுப் போகுதல் ஆகிய விஷயங்கள் கண்டறியப் பட்டாலும் முக்கியமாக ஆண், பெண்களுக்கு அமையும் மனைவி அல்லது கணவனைப் பற்றியும் திருமணத்தைப் பற்றியும் அறிவதற்கு பயன்படுவதால் இதற்கு களத்திர ஸ்தானம் என்று பெயர்.

ஜோதிட சாஸ்திரத்தில் மிகச் சிறப்பான வடமொழி நூல்களான, ஸாராவளி, பராசர சம்ஹிதை, ஜாதக தத்துவம், ஸர்வார்த்த சிந்தாமணி போன்ற நூல்கள் ஆண் பெண்களின் ஜாதகங்களைக் கொண்டே, அவரவர்களுக்கு அமையக் கூடிய மனைவி, கணவன் பற்றிய விவரங்களை மிகத் தெளிவாக எடுத்துக் கூறக் கூடியவைகளாக அமைந்துள்ளன. திருமணமாவதற்கு முன்பே, அந்த ஜாதகனோ அல்லது ஜாதகியோ திருமணம் செய்து கொள்வார்களா? எப்போது தான் திருமணம் நிகழும்? திருமணஞ் செய்து கொண்டால், அவர்களுக்கு அமையும் கணவன் அல்லது மனைவி எந்தத் திசையிலிருந்து வருவார். எத்தகைய குணம் படைத்தவர். என்ன தொழில் செய்பவர், அவரது உடல்நிலை, அவரது பாலுணர்ச்சி ரகசியங்கள், அவரது ஆயுள் வலிமை ஆகியவற்றை எல்லாம் திருமணஞ் செய்வதற்கு முன்னதாகவே அறிவிக்கக் கூடிய ஆச்சரியகரமான விஷயங்களை அறிவிக்கின்றன. அவைகளில் கூறியுள்ளபடியே மக்களின் வாழ்க்கை அனுபவங்கள் நிகழ்ந்து வந்திருப்பதாலேயே, மக்கள் திருமணஞ் செய்வதற்கு முன்னதாகவே ஜோதிடத்தைப் பார்ப்பது வழக்கமாகிவிட்டது. அதிலும் ஏழாவது களத்திர பாவத்தையும் எட்டாவது ஸ்தானத்தையும் பார்த்துத்தான் திருமணம் செய்வது மிகமிக அவசியமாகக் கருதப் பெறுகிறது.

மக்கள் அனைவருமே ஊழ்வினைப் பயனின் காரணமாக உலகத்தில் பிறக்கிறார்கள். பூர்வ புண்ணிய பலத்தினாலேயே ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ பிறக்கிறார்கள். பின்னர், மாந்தர்கள் யாவரும் தமது வித்யாசம் பாதனத்தால் ருழிக் கடனையும் யாகாதிகளால் கேலிக்கடனையும் கழிக்கிறார்கள்.

திருமணம் செய்வதன் முக்கியத்துவமே பிரஜோத்பத்தியும் வமிச விருத்தியுமாகும். குடும்பங்கள் செழிப்பாகவும் வளமையாகவும் தம்பதிகள் உள்ளத்தாலும் உடலாலும் பொருத்தமானவர்களாகவும் இருந்து சந்தான சௌபாக்கியங்களைப் பெற்றால்தான், குலவிருத்தி ஏற்பட முடிகிறது. பிள்ளைகள் பிறந்தால்தான் பிதுருக்களின் கடனை தீர்த்துப் பின்னரே மோட்சத்துக்குரிய விஷயங்களில் மனதைச் செலுத்த வேண்டும் என்று கருதப் பெறுகிறது.

எனவேதான், தேவர், முனிவர்கள், இறந்துபோன பெற்றோர்கள் அவர்களின் மூதாதையர்களுக்குரிய கடன்களைத் தீர்க்க முக்திவழி செல்லும் முறைகளைச் சொல்வதற்காக 1வது பாவம் முதல் 5வது பாவம் வரை ருழிக் கடன் தீர்க்கும் முறையும் பிறவும் போதிக்கப் பெறுகின்றன. பிதுருக் கடனையும் தேவர் கடனையும் தீர்ப்பதற்குத்தான் மனிதனுக்கு மனைவி தேவைப்படுகிறாள். அவளைக் கொண்டுதான் எந்த வைதீக கர்மங்களையும் செய்யவேண்டியுள்ளது. பெண்ணாக இருந்தால் அவள் தூய்மையடைவதில்தான் அவளுக்கு பெருமையும் அவள் குலத்திற்கு கௌரவமும் ஏற்பட முடிகிறது. எனவே அவற்றையெல்லாம் அறிவதற்கு துணை செய்வது இந்த 7வது களத்திர பாவமாகும்.

ஜென்ம லக்கினத்துக்கு ஏழாவது ஸ்தானமாகிய... இந்தக் களத்திர பாவத்திற்கு முன்னதாக அமைந்துள்ள ஆறாவது ஸ்தானம், ரோக ஸ்தானமும், 8வது ஸ்தானம் ஆயுள்,

வலிமை, தீர்க்கம், முடிவு ஆகிய ருணஸ்தானம், கடனையும், மரணத்தையும் விவரிப்பன: அதுவே

பெண்களின் மாங்கல்ய ஸ்தானமாகும். ஆகவே இந்த ஏழாவது களத்திர ஸ்தானத்தின் மூலம் விளக்கப்பெறும் களத்திரனிடத்து ஏதும் தவறு ஏற்பட்டால் ஒன்று ரோகத்தையோ, கடனையோ அல்லது மரணத்தையோ தரக்கூடும். ஆகையால் இது விஷயத்தில் மிகவும் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருப்பது மிகவும் அவசியமானதாகையால், அது விஷயமான பல ரகசியங்களையும் இந்த ஏழாவது பாவமான, களத்திர ஸ்தானத்தை ஆராய்வதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

## 2. உங்களுக்கு எந்த வயதில் திருமணம் நடக்கும்

உங்களுக்கு எந்த வயதில் தான் திருமணம் நடக்கும் என்பதை உங்கள் பெற்றோர்களாலேயே சொல்ல முடியாது. உங்களாலும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஆனால் உங்களுக்கு ஜாதகம் எழுதப் பெற்றிருந்தால், அதைக் கொண்டே உங்களுக்கு எந்த வயதில் திருமணம் நிகழும் என்று கூடச் சொல்லிவிட முடியும். அதுமட்டுமல்ல, விவாகத்துக்குப் பிறகுத் தம்பதிகள் சுகமாக இருப்பார்களா? கஷ்டப்படுவார்களா? என்பதையும், மனைவி நல்ல நடத்தையுடையவளாகவும் தர்மபத்தினியாகவும் இருப்பாளா? புத்திர பாக்கியங்களிருக்குமா? அவ்வாறு இருந்தால் எத்தனை புத்திரர்கள் என்பதையும் எத்தனை யாண்டுகள் வாழ்வாள் என்பதைத் தவிர, அவளது உடற்கூறு விஷயங்களையும் பாலுணர்ச்சி, தாம்பத்திய உடலுறவு முறைகளைப் பற்றியுங்கூட ஜாதகத்தைப் பார்த்து ஆராய்ந்து சொல்லிவிட முடியும்.

முதலாவது உங்களுக்கு எந்த வயதில் திருமணம் நடக்கும் என்பதையும் உங்கள் ஜாதகத்தைக் கொண்டே எவ்வாறு அறிவது என்பதை கவனிப்போம்.

1. உங்கள் ஜாதகத்தின் ஜன்ம ராசிக்கு அதிபதியாகிய சந்திரனுக்கு ஏழாமிடத்தில் சுக்கிரனும், சுக்கிரனுக்கு

ஏழாமிடத்தில் சனியுமிருந்தால் உங்களுக்கு 18 வயதிலேயே திருமணம் நிகழ்ந்துவிடும்.

2. 1க்கும் 7க்குமுடையவர்கள் ஒருவர் ராசியில் மற்றவராக மாறியிருந்தால் 21வது வயதில் திருமணம் நடக்கும்.

3. உங்கள் ஜன்ம ராசிக்கு, 8ஆமிடத்துக்கு ஏழாவது இடத்தில் (அதாவது 2ஆமிடத்தில்) சுக்கிரனிருந்து, 2க்குடையவன் செவ்வாயுடன் சேர்ந்திருந்தால் 22 வயதிலோ, 27 வயதிலோ விவாகத்தையடைகிறான்.

4. லக்கினநாதன் 7வது அம்சத்திலிருந்து 7க்குடையவன் 12லுமிருந்தால் 23 வயதிலோ 26வது வயதிலோ திருமணம் நிகழும்.

5. 7க்குடையவன் 8வது அம்சத்திலும் சுக்கிரன் லக்கினம்சத்திலும் இருந்தால் 23வது வயதிலோ அல்லது 25வது வயதிலோ திருமணம் நிகழும்.

6. சுக்கிரன், 9வது பாக்கியஸ்தானத்திற்கு 9ம் இடத்தில் இருந்து அதற்கு 12ல் ராகுவுமிருந்தால் 24வது வயதிலோ அல்லது 31வது வயதிலோ திருமணம் நடக்கும்.

7. 9ம் இடத்துக்கு 7 ஆமிடத்தில் சுக்கிரன் இருந்து, சுக்கிரனுக்கு ஏழாமிடத்தில் 7க்குடையவனிருந்தால் 27 வயதிலோ அல்லது 30வது வயதிலோ, உங்களுக்குத் திருமணம் நடக்கும்.

8. குடும்பேசன், லக்கினேசன் ஆகியவர்கள் கேந்திரம் ஏறி சுபர் வீக்ஷண்யத்தையும் அடைந்து, அந்தக் கேந்திரம் தசம கேந்திரமாகவுமிருந்தால் 36வது வயதில் உங்களுக்குத் திருமணம் நிகழும்.

# 3. தாமதித்துத் திருமணமாகும் ஜாதக அமைப்புகள்

1. லக்கினத்துக்கோ, சந்திர லக்கினத்துக்கோ 1,3,5,7,10 ஆம் வீடுகளில் ராஜயோகம் அளிக்கும் தன்மையற்ற சனியிருக்க, சந்திரனுக்கு நான்கு அல்லது பத்தாவது வீட்டில் களத்திர காரகனாகிய சுக்கிரன் வீற்றிருந்தாலும்,

2. சந்திரனுக்கும், சுக்கிரனுக்கும், கேந்திரத்திலோ, ஷஷ்டாஷ்மத்திலோ குரு வீற்றிருந்தாலும்,

3. ஏழாம் வீட்டதிபதிக்கு சனி சம்பந்தம் ஏற்பட, குரு இருந்தாலும்,

4. ஏழாம் பாவத்தில் ராகு அல்லது சனி இருந்து அவர்களுக்கு 4,6,8,10ஆம் வீடுகளில் குரு இருந்தாலும்.

5. 5 அல்லது 7 அல்லது 9வது வீட்டில் செவ்வாயும் சுக்கிரனும் கூடி பாபரின் பார்வை பெற்றிருந்தாலும்,

6. 7வது வீட்டில் சந்திரன், சனிக்கு மிகவும் அருகாமையில் இருந்தால், திருமணம் நிச்சயிப்பதற்குள் பல ஆண்டுகள் கடந்து செல்லவும் தடைகளால் தாமதிக்கவும் கடைசியில் திருமணம் நடைபெற்று விடும் என்பது போல் ஓர் இடத்தில் நெருங்கி வந்து நின்று பின்னர் மற்றோர் இடத்தில் காலம் கடந்து கல்யாணம் நடைபெறும்.

லக்கினத்துக்கு ஏழில் சனியிருந்தாலும், ஏழில் சந்திரனிருந்தாலும் "புனர்பூ" என்று ஜோதிட சாஸ்திரம் வழங்கும் யோகம் ஏற்படும். அப்போது விவாகம் காலம் கடந்த பிறகே நடைபெறும்.

(குறிப்பு : கிரகங்களின் ஆட்சி, உச்சம் மற்றும் கிரகங்களின் பார்வை பெறும் இடங்கள் ஆகியவற்றை விளக்கும் படங்கள் 15,16,17,18,19,20ம் பக்கங்களில் தரப்பட்டுள்ளது)

# 4. புருஷ ஜாதகப் பலன்கள்

## சிறந்த கணவனுக்குரிய ஜாதக அமைப்பு

1. ஏழாமதிபதி சுபருடன் கூடி சுபர்களின் பார்வை கிடைக்கப் பெற்றாலும்,

2. ஏழாமதிபதி சுபக்கிரகங்களின் நடுவில் இருந்தாலும்,

3. சுக்கிரன் தன் சொந்த வீட்டிலோ உச்ச வீட்டிலோ நட்பு வீட்டிலோ அமையப்பெற்றிருந்தாலும்,

4. களத்திரகாரனான சுக்கிரன் 7,3,6,10,11 மிடங்களிலிருந்தாலும் இரண்டாமிடமாகிய குடும்ப ஸ்தானத்திற்கு உரியவன் 7,3,6,10,11 அகிய இடங்களிலிருந்தாலும்,

5. லக்கினாதிபதி சுபக்கிரகங்களின் பார்வை பெற்றிருந்தாலும்,

6. ஏழாமிடத்தில் குருவோ, சந்திரனோ அமையப் பெற்றிருந்தாலும்,

இந்த ஆண் ஜாதக அமைப்பு நற்பலனை அளிக்கும்.

## அனுகூலமம் இலாத ஜாதக அமைப்பு

1. ஏழாமதிபதி பாபருடன் சேர்க்கைப் பெற்று பாபரின் பார்வை பெற்றாலும்,

2. ஏழாமதிபதி ராகு கேதுவுடன் கூடி பாபரால் பார்க்கப் பெற்றாலும்,

3. ஏழாமதிபதியும் புத்திரகாரனனான ஐந்தாமிட அதிபதியும் கூடி ரோககாரனனான ஆறாமிடத்திற்கு

உடையவனின் சேர்க்கையோ அல்லது பார்வையோ பெற்றாலும்,

4. ஏழாமதிபதியோ அல்லது களத்திரகாரனனான சுக்கிரனோ அல்லது சந்திரனோ நீச்சமாகியிருந்து சுபரின் பார்வை பெறாவிட்டாலும்,

5. ஏழாமிடத்தில் பாபர்கள் கூடி, ஏழாமதிபதி பாபர்களின் பார்வை பெற்றாலும் இந்த ஆண் ஜாதக அமைப்பு தோஷமுடையதாகும்.

## 5. உங்களுக்கு "மனைவி" என்று ஒருத்தி அமைவாளா?

சிலருக்கு, களத்திரம் கிடைப்பதே கடினமாக இருக்கும். ஜாதகம், இதனையும் பின்வருமாறு அமைந்திருந்தால் தெளிவுபடுத்திவிடும். உங்கள் ஜாதகத்தில்,

1. சனி மிகவும் வலிமைபெற்று, சனிக்கு 1,3,7,10ல் சந்திரனும் சுக்கிரனும் இருந்தாலும்,

2. க்ஷீண சந்திரன் அதாவது தேய்பிறைச் சந்திரன், வலுவுள்ள சனியைப் பார்த்தாலும்,

3. மகர, கும்பம் என்ற சனிபகவானுக்குரிய வீடுகளில் ஒன்றில் சந்திரனும் கூட, இவர்களுக்கு நான்கு, ஏழு, பதினொன்றில் சனி இருந்தாலும்,

4. ஏழாம் பாவாதிபதி மகர கும்பமேறி சனி 4,7,11ல் இருந்தாலும் சனியுடன் சேர்ந்திருந்தாலும், 5. 5,7ஆம் வீட்டினதிபதிகள் பரிவர்த்தனையாகி 2, 11ஆம் வீடுகளில் அசுபர் சம்பந்தம் ஏற்பட்டு, சுபரது சம்பந்தம் இராவிட்டாலும் பிரம்ம பிரயத்தனம் செய்த பிறகோ அல்லது அப்படியே முயன்றாலும் விவாகமே நடைபெறாமலோ நின்று விடவோ நேரும்.

## 6. ஆண் ஜாதகத்தைக் கொண்டு அவரது மனைவியைப் பற்றியறிதல்

உங்கள் ஜாதகத்தில் ஜன்ம லக்கினத்திலிருந்து ஏழாவது ஸ்தானமாக வரக்கூடிய ராசி வீடே, களத்திர ஸ்தானமாகும். இந்தக் களத்திர ஸ்தானம், பன்னிரண்டு ராசிகளில் எந்தெந்த ராசியாக அமைந்துள்ளதோ, அந்தந்த ராசிக்குரிய பலன்கள் பின்வருமாறு அமையும் என்று ஜோதிட நூல்கள் அறுதியிட்டுக் கூறுகின்றன. மேஷம் முதல் மீனம் வரையிலுள்ள பன்னிரண்டு ராசிகளில் உங்கள் லக்கினத்துக்கு ஏழாவதாகிய களத்திர பாவம் உங்களுடைய களத்திர ஸ்தானமாக வருவதால் ஏற்படும் பலன்கள் பின்வருமாறு:லி

**மேஷ ராசி** - ஏழாவது இடமானால் அந்த நபரின் களத்திரம் குரூரமாகவும், சபல சித்தமுடையவராகவும் பாவத்திற் பற்றுள்ளதாகவும் கெட்ட ஜனங்களால் புகழப் பெற்றதாகவும், பணத்தின் மீது மிகவும் ஆசை உள்ளதாகவும், எப்போதுமே யாசிக்கும் சுபாவமும் உடையவளாகவும் இருப்பாள்.

**ரிஷப ராசி-** ஏழாவது இடமானால், களத்திரம் சமமான குணப் போக்கை உடையவளாகவும் ஒற்றுமையாக வாழ்பவளாகவும், மெதுவான வார்த்தைகளைப் பேசுபவளாகவும், வணக்கமும் மரியாதையும் உடையவளாகவும், மிகவும் சாந்தமான குணத்தை உடையவளாகவும் பதிவிரதையாகவும் அழகியாகவும் அதிகப் பயபக்தி உள்ளவளாகவும் பிராமணர்கள், தேவதைகளிடத்தில் பக்தியை உடையவளாகவும் இருப்பாள்.

**மிதுன ராசி-** ஏழாவது இடமானால், களத்திரமாக வருகின்ற மனைவி செல்வச் செழுமை உடையவளாகவும், நல்ல நடத்தையுடையவளாகவும், நல்ல ரூபமுடையவளாகவும் சர்வ குணங்களும்

பொருந்தியவளாகவும், அலங்காரஞ் செய்து கொள்வதில் அடக்கமும் ஒழுக்கமும் உடையவளாகவும், துஷ்ட குணம் அற்றவளாகவும் இருப்பாள்.

**கடக ராசி-** 7வது இடமாக வந்தானால் பெரும்பாலும் உங்களுக்கு அமையும் மனைவி ஒருத்திக்கு மேற்பட்டுவிடுவதுண்டு. அவ்வாறு அமையும் மனைவியர்கள் மனத்துக்குப் சௌபாக்கியத்துடனும் நற்குணத்துடனும் அமைந்து விடுவார்கள். தோஷம் அற்றவர்களாக இருப்பார்கள் சம்மதங்களாகவும் சௌம்மியங்களுடனும் விளங்குவார்கள்.

**சிம்ம ராசி-** 7வது இடமாக ஆகுமானால், உங்களுக்கு அமையும் மனைவி தீவிரமான உணர்ச்சிமிக்க சுபாவம் உடையவளாகவும் சபல சித்தம் உடையவளாகவும் மிகவும் தைரியமும் துணிவும் உடையவளாகவும் தாழ்ந்த முறையில் அலங்காரம் செய்து கொள்பவளாகவும் வக்கிரமான குரலையுடையவளாகவும் குறைவான புத்திரர்களையே பெறக் கூடியவளாகவும் இருப்பாள். சரீரமும் இளைத்தே இருக்கலாம்.

**கன்னி ராசி-** ஏழாவது இடமாக ஆகுமானால், உங்களுக்கு அமையும் மனைவி அழகிய உடற்கட்டுடைய பருவ மங்கையாகவும், புத்திரனற்றவளாகவும், சௌபாக்கியம், போகம், பொருள்கள், பயம் இவற்றுடன் கூடியவளாகவும் பிரியமாகவும் அன்பாகவும் நயமாகவும் பேசக் கூடிய நளினமுடையவளாக விளங்குவாள். சத்தியம் பேசுவதையே சீதனமாகக் கொண்டிருப்பாள். மிகவும் சாமர்த்திய சாலியாகத் திகழ்வாள்.

**துலா ராசி-** ஏழாவது இடமாக ஆகுமானால் உங்களுக்கு வரக்கூடிய மனைவி பெரும்பாலும் ஒருத்தியாக இராது. உங்களுக்கு அமையும் மனைவியர்கள் நற்குணமற்ற, அங்கமற்றவர்களாகவும் பற்பலவிதமான மனப் போக்குகளை உடையவர்களாகவும், புண்ணியஞ்

செய்வதில் ப்ரீதியை உடையவர்களாகவும், தர்மம் செய்வதில் அதிக ஆசையை உடையவர்களாகவும் தானங்கள் வழங்குவதில் தர்மசிந்தை உடையவர்களாகவும் அதிகப் புத்திரர்களைப் பெறுபவர்களாகவும் பெருத்த அங்கங்களை உடையவர்களாகவுமிருப்பார்கள்.

**விருச்சிக ராசி-** இடமாக இருந்தால், உங்களுக்கு அமையும் மனைவியர்கள் எதிலும் ஒரே தடவை மட்டுமே முயற்சி செய்யும் குணபாவமுடையவர்களாகவும் ப்ரீதியற்றவர்களாகவும் பற்பல துர்ப்பாக்கியங்களையும் தோஷங்களையும் உடையவர்களாகவே இருப்பார்கள்.

**தனுர் ராசி-** ஏழாவது இடமாகவானால், உங்களுக்கு அமையும் மனைவி ஆணைப் போன்ற தோற்றமும் உடற்கட்டும் அமைந்தவர்களாக இருப்பாள். மிகவும் நிஷ்டூரமான குணத்தையுடையவளாகவும் பக்தி, நியாயம் போன்றவை அற்றவளாகவும் சாம்யமில்லாதவளாகவும், சுயபுத்தி அற்றவளாகவும், பிடிவாதமாக எதையும் தன்னிஷ்டம் போல நடத்திக் கொள்வதிலேயே ஆர்வமும் வேகமும் கொண்டவளாக இருப்பாள்.

**மகர ராசி-** 7வது இடமாக வருமானால், உங்களுடைய மனைவி, வெளிப் பார்வைக்கு தர்ம சிந்தை உடையவளாக வேஷம் போடுபவளாகவும், நல்ல பெண்ணைப் பெறுபவளாகவும் பதிவிரதையாகவும் அழகிய குணங்களை உடையவளாகவும், சௌபாக்கிய யுக்தமானவளாகவும், நற்குணமுடையவளாகவும் திகழ்வாள்.

**கும்ப ராசி-** 7வது இடமாக வருமானால், உங்களுக்கு அமையும் மனைவி, நிலையான ஸ்திரமான சுபாவமுடையவளாகவும் கணவனுக்குப் பணிவிடைகளைச் செய்வதில் அதிக அக்கறையும் பற்றும் உடையவளாகவும் இருப்பாள். தேவப் பிராமண ப்ரீதி உள்ளவளாகவும் சிறந்த தர்மப் பற்றுள்ளவளைப் போன்ற

வெளிவேஷம் போடுபவளாகவும் விளங்குவாள். அவளது இல்லற வாழ்க்கை சகலவித சுகங்களும் பொருந்தியதாகத் திகழும்.

**மீன ராசி-** 7வது இடமாக வருமானால், உங்களுக்கு வரும் மனைவி, விகாரமான நடத்தை அல்லது சுபாவம் உடையவளாகவும் கெட்ட புத்திரனைப் பெறுபவளாகவும் ஸ்வதர்மம், நல்ல ஒழுக்கம் பிரீதி ஆகியவைகள் அற்றவளாகவும் எப்போதுமே சண்டை சச்சரவு செய்வதில் பிரியம் உடையவளாகவே இருப்பாள்.

## உங்கள் ஏழாமதிபதியைப் பொறுத்து அமையக் கூடிய மனைவி

1. உங்களுடைய ஜாதகத்தின் ஜன்ம லக்கினத்துக்கு ஏழாவது இடத்துக்குரியவன் பலம் பெற்று குருவுடன் கூடி இருந்தாலும், குரு பார்வையைப் பெற்றிருந்தாலும் காரகனாவது அவ்விதம் இருந்தாலும், உங்களுக்கு அமையும் மனைவியானவள் விரதானுஷ்டானங்களை உடையவளாக இருப்பாள்.

2. லக்கினத்துக்கு 7க்குடையவன் சூரியனாகவோ, சுக்கிரனாகவோ இருந்து சுபரால் பார்க்கப்பட்டாலும் 7ல் குரு இருந்தாலும் உங்களுக்கு அமையும் மனைவி, தர்ம சீலையாகவும், பதிவிரதையாகவும் இருப்பாள்.

3. உங்கள் லக்கினத்துக்கு 7க்குடையவன் சுபக்கிரக வீக்ஷண்யம் பெற்று, கேந்திரமேறியிருந்தாலும், சுபாம்சத்திலோ, சுபராசியிலோ இருந்தாலும் உங்களுக்கு அமையும் மனைவி, பதிவிரதையாக இருப்பாள்.

4. உங்கள் ஜாதகத்தில் சூரியன் 7க்குடையவனாகிப் பலம் பெற்றுச் சுபருடன் கூடியோ, சுபமான ராசியையோ நவாம்சத்தையோ அடைந்தாலும், அல்லது சுபக்கிரகத்தால் பார்க்கப்பட்டோ லக்னேச

மித்திரனாகவோ இருந்தாலும் பத்தினி பதியினிடத்தில் பக்தி உடையவளாக இருப்பாள்.

5. உங்கள் ஜாதகத்தில், புதன் 7க்குடையவனாகிப் பலம் பெற்று மித்திரோச்ச வர்க்கத்திலோ கோபுராம்சத்திலோ இருக்குமானால் உங்களுடைய மனைவி, நல்ல புத்திரர்கள் சௌக்கியம் தர்ம சீலங்கள் விரத உபவாசாதிகளை உடையவளாகவும் பரிசுத்தமான தேகத்தை உடையவளாகவும் இருப்பாள்.

6. உங்கள் ஜனன ஜாதகத்தில் சனி 7க்குடையவனாகிப் பலம் பெற்றிருந்தால், நீங்கள் பரோபகாரியாகவும் உங்களுக்கு அமையும் மனைவி பிராம்மணர்கள், தேவர்கள் இவர்களிடத்தில் பக்தி உள்ளவளாகவும் குரு திருஷ்டியும் பெற்றிருந்தால் நீங்கள் பிரம்மவாதியாகவும் வேறு சுபரால் பார்க்கப் பெற்றிருந்தால், உங்களுக்கு அமையும் பத்தினி தான தர்மங்கள் செய்வதில் பற்றுடையவளாகவும் நல்லொழுக்க முடையவளாகவும் இருப்பாள்.

## லக்கினம் பொறுத்து அமையக்கூடிய மனைவி

1. உங்கள் ஜன்ம லக்கினத்தில் புத சந்திரர்கள் இருந்தால் உங்களுக்கு அமையும் மனைவி வித்தைகளில் சமர்த்தையாகவும் சுகம் தருபவளாகவும் நற்குணங்கள், நற்புத்திரர்கள் இவற்றுடன் கூடியவளாகவும் விநீதையாகவும் இருப்பாள். சுக்கிரன், புதன் ஆகியவர்கள் லக்கினத்திலிருந்து, வேறு சுபர்களும் அங்கிருந்தால், உங்களுக்கு அமையும் மனைவியானவள், அழகு பொருந்தியவளாகவும் ஸூபகையாகவும் கலைகளில் நிபுணையாகவும் பணம், வஸ்திரம் சௌக்கியம் இவற்றுடன் கூடியவளாகவும் இருப்பாள். பாபர்களிருந்தால் முற்கூறியதற்கு நேர்மாறானவளாகவே இருப்பாள்.

2. உங்கள் ஜன்ம லக்கினத்தைச் சுக்கிரன், சந்திரன் இவர்கள் கூடியிருந்தால், உங்களுக்கு அமையும் மனைவி, குரோதம் உள்ளவளாகவும் சுகபோகங்களில் நாட்ட முடையவளாகவும் ஸ்வர்ணத்துடன் கூடியவளாகவும் இருப்பாள்.

3. உங்கள் லக்கினத்தில் புதனிருந்தால், உங்களுக்கு அமையும் மனைவி சுகபோகத்தில் சிந்தனையுடைய வளாகவும் சுக்கிரன் குரு இவர்களிருந்தால் நற்குணங்களை உடையவளாகவும் இருப்பாள்.

4. சந்திரனோ சுக்கிரன், புதன் ஆகியவர்களோ அல்லது அந்த மூவருமோ, குரு, சுக்கிர, புதர்களோ உங்கள் ஜென்ம லக்கினத்தில் இருப்பார்களாயின், உங்களுக்கு அமையும் மனைவி, பலவித செளகரியங்கள், குணங்கள் இவற்றுடன் கூடியவளாகவும் நல்ல வேலைக்காரிகளால் சூழப் பெற்றவளாகவும் விளங்குவாள்.

5. உங்கள் லக்கினத்திற்கு, களத்திராதிபதியான சுக்கிரனும், சந்திரனும் செளயாம்சத்திலோ செளம்மிய கிரகத்துடன் கூடியோ மித்திரரது உச்ச வீட்டிலோ மித்ரு ஷஷ்டியம்சமேறியோ இருந்தால், உங்களுக்கு அமையும் மனைவி புண்ணியசாலியாகவும் நல்ல ஒழுக்கமும் நல்ல நடத்தையும் உடையவளாக இருப்பாள்.

6. உங்களுக்கு மனைவியாக நிச்சயப்பட்டவளின் ஜாதகத்தில் சுபகிரகங்கள் ஸ்வக்ஷேத்திரத்திலோ, உச்ச வீட்டிலோ, திரிகோணத்திலோ இருப்பார் களானால் அப்போது அந்தப் பெண், ஸ்ரீமதியாகவும் நற்குணங்களுடன் கூடியவளாகவும் நற்புத்திரர்களை அடையக் கூடியவளாகவும் நீண்ட காலம் ஜீவிப்பவளாகவும் இருப்பாள்.

**நல்ல களத்திரம் உண்டாவதற்கு கிரகங்கள் எப்படி இருக்கவேண்டும்?**

லக்கினத்துக்கு 7க்குடையவன் சுபருடன் கூடியோ சுபரால் பார்க்கப்பட்டோ, சுபக் கிரகங்களின் நடுவிலோ இருந்தால், நல்ல களத்திராதியை அடைவதைக் குறிக்கும்.

7க்கு உடையவனோ, காரகனோ சுபராசியோ, சுபாம்சமோ ஏறியிருந்து 10க்குடையவனும் வலிமை பெற்றிருந்தால் நல்ல களத்திரத்தையடையலாம்.

சுக்கிரன் தனது உச்சத்திலோ, சொந்த ஷட்வர்க்கத்திலோ, மித்திரன் வீட்டிலோ, கோடி ராசி அம்சத்திலோ ஷஷ்டி அம்சத்தில் மிருத் வம்சத்திலோ இருந்தால், நல்ல களத்திரத்தையடைந்தவனாகிறான்.

சுக்கிரன், 3,6,10,11 ஆமிடங்களிலிருந்தால், விவாகத்துக்குப் பிறகு தனவிருத்தி அடையும். சுக்கிரன் நீசனாகவோ சத்துரு வீட்டிலோ இருந்தால் விவாகத்திற்குப் பிறகு கஷ்டமுண்டாகும்.

சந்திரனோ, சுக்கிரனோ 7க்குடையவனாகி சுபநவாம்சத்திலோ, சுபக்கிரகத்தின் சேர்க்கையை அடைந்தோ, மித்திரனது வீட்டிலோ, உச்ச வீட்டிலோ, மிருதுவான ஷஷ்டியம்சம் ஏறியோ இருந்தால் ஜாதகரின் பத்தினியானவள் நல்ல ஒழுக்க சீலமுடையவளாகவும் பரிசுத்தையாகவும் நல்ல நடத்தையையுடையவளாகவும் இருப்பாள்.

# 7. ஸ்திரீ ஜாதகப்பலன்

## ஜாதக பாரிஜாதம் என்ற ஜோதிடநூல் கூறும் ஸ்திரீ ஜாதகப் பலன்

சம்பத்து, பலம், ஆரோக்கியம், சந்தானம், வித்தை, கீர்த்தி ஆகியவற்றை விருத்தி செய்வதும் திதி, நட்சத்திரம்

கிரகம் இவற்றுடன் கூடியதுமான ஜாதகத்தையே நாம் சொல்கிறோம்.

## ஸ்திரீ ஜாதகத்துக்குரிய சிறப்புகள்

ஸ்திரீகளுக்கு உதயமான ராஜயோக பலனை அவர்களின் கணவரிடத்தில் பொருத்திச் சொல்ல வேண்டும். வீரியமுள்ள ஜன்ம லக்கினத்திலிருந்தும் சந்திர லக்கினத்தில் இருந்தும் அவர்களின் தேக சுபாசுபத்தைச் சொல்ல வேண்டும். ஏழாமிடத்தைக் கொண்டு அவளுக்கு அமையும் கணவரின் குணாகுணத்தையும், 8 ஆமிடத்தைக் கொண்டு கணவரின் ஆயுட் பலத்தையும் அந்த மங்கையின் மாங்கல்ய பலத்தையும் சொல்லவேண்டும்.

ஸ்திரீகளுடைய ஜன்ம லக்கினம், சந்திர லக்கினம் ஆகியவற்றில் அதிகபலமுள்ளது எதுவோ அதைக் கொண்டே அவர்களின் சம்பத்து, ரூபம், தனம் ஆகியவைகளையும் ஸ்திரீ ஜாதகத்தின் 9 ஆமிடத்தைக் கொண்டு புத்திர விருத்தியையும் லாபத்தையும் சொல்லலாம். 8ஆமிடத்தைக் கொண்டு சௌமாங்கல்யத்தையும் அநிஷ்டத்தையும் 7வது இடத்தைக் கொண்டு கணவனது ஸ்திரீயையும் சொல்ல வேண்டும்.

சந்திர லக்கினம், ஜன்ம லக்கினம் இவை ஒற்றைபட்டதாகவும் இரட்டைப் பட்டதாகவுமுள்ள பலன்கள்:லி

இரட்டைப்பட்ட ராசி சந்திரா லக்கினமாகவும் ஜன்ம லக்கினமாகவும் இருந்தால், அதில் பிறந்தவள் சிறந்த ஸ்திரீக்குரிய ரூபம், ஒழுக்கம் ஆகியவற்றுடன் கூடியவளாகவும் சுபரின் பார்வை சேர்க்கை இவற்றை அடைந்தால், அவள் குணவதியாகவும் சுபரின் பார்வை சேர்க்கை இவற்றையுடையவளாக இருந்தால் குணவதியாகவும் ஸாத்வீக குணமுடையவளாகவும் சம்பத்துடன் கூடியவளாகவும் இருப்பாள். ஒற்றைப்பட்ட

ராசி ஜன்ம லக்கினமானால் புருஷ ஆகிருதி உடையவளாகவும் பாபப் பற்றுள்ளவளாகவும் இருப்பாள்.

ஒற்றைப்பட்ட ராசி லக்கினமாகி அதில் பலம்பெற்ற புருஷக்கிரகங்களிலிருந்து, சுக்கிரன், சந்திரன், புதன் இவர்கள் 11 ஆமிடத்திலிருந்து, சனி சாமான்யமான பலம்பெற்றுமிருந்தால் அது பொழுது பிறந்தவளுக்கு அநேகம் பர்த்தாக்களுண்டு.

## உலகப் புகழ்ப் பெறும் பெண்கள்!

இரட்டைப்பட்ட ராசி லக்கினமாகி, பலம் பெற்ற செவ்வாய் புதன், சுக்கிரன் இவர்களும் லக்கினத்தில் இருந்தால் அச்சமயம் பிறந்த கன்னிகை, உலகப் பிரசித்தி பெற்ற பெயரும் புகழும் உடையவளாகவும் எல்லாவிதமான அர்த்த தத்துவ விஷயத்திலும் செல்லும் புத்தியினால் பிரசித்தையாகவும் சாத்வீகியாகவும் ஆகிறாள்.

## நல்ல மனைவியின் ஜாதக லட்சணம்

குரு பகவான், 9,5,1,4,7,10 ஆகிய இடங்களிலில் இருந்தாலும் உச்சாதிகளிலல் இருந்தாலும் குணங்களில் சீலமுடையவளாகவும் இருப்பாள். அத்துடன் சாத்வீகியாகவும் நல்ல புத்திரனது தாயாகவும் ஆவதோடு, சுகமுள்ளவளாகவும் நற்குண நற்செய்கைகளையுடையவளாகவும் பிறந்த குலம், புகுந்த குலம் ஆகிய இரண்டுக்கும் உயர்வைச் செய்பவளாகவும் ஆவாள். சுபக்கிரகத்தால் லக்கினம் பார்க்கப் பெற்றால் கைத் தொழிலில் தேர்ச்சியுடையவளாகவும் சுத்தமான சித்தமுடையவளாகவும் எப்போதும் சங்கோஜப்படுபவளாகவும் அழகிய சரீரமுடையவளாகவும் நல்ல புத்திரனுடையவளாகவும் வெகுவான தனமும் சுபமும் கூடியவளாகவும் கணவனிடம் பிரியமாக நடந்து கொள்பவளாகவும் நூற்றுக்கணக்கான நலன்களுக்கும் சுபங்களுக்கும்

பாத்திரமாகும் நல்ல மனைவியின் சுப லட்சணங்குரியவளாகவும் விளங்குவாள்.

## நற்சகோதரனுடைய மனைவி

பலம்பெற்ற 3க்குடையவன் புருஷக்கிரகமாகவோ, புருஷ கிரகத்தின் ராசியில் ஏறியோ அல்லது புருஷக்கிரகத்துடன் கூடியோ அல்லது புருஷக் கிரகத்தால் பார்க்கப்பட்டோ, அல்லது 3மிடத்துக்குக் கேந்திரம், திரிகோணம் இவற்றையடைந்தோ, இருக்கப் பிறந்தவள், வெகுவான தனம், சுகம், சுபங்களையுடைய சகோதரனையடைகிறாள். 3க்குடையவன் 11க்குடையவன் இருவரும் லக்கினத்துக்கு 5 ஆமிடத்திலிருந்தாரானால் அந்த யோகத்திற் பிறந்த பெண், அரசனது தேஜஸ், குணம், ரூபம் இவற்றுடன் கூடிய சகோதரனையுடையவளாக இருப்பாள்.

## ஸ்திரீ ஜாதகத்தில் கிரகங்கள் நின்ற பலன்கள்.

சூரியன், செவ்வாய், சனி முதலிய பாபக் கிரகங்கள் 7வது வீட்டிலிருக்க பிறந்தவள் லி விதவையாவாள்.

7வது வீட்டில் சுபர் பாபர் ஆக இருவரும் சேர்ந்திருக்கப் பிறந்தவள் புனர்ப்பூவாக, மறுமணஞ் செய்து கொள்பவளாவாள்.

7வது வீட்டில் பாபக்கிரகம் பலமுடையதாகவும் இருந்து சுபக்கிரகங்களால் பார்க்கப்பட்டபொழுது பிறந்தவள், தனது பதியினால் விலக்கப்பட்டவளாவாள். சுக்கிரன், செவ்வாய் ஆகிய இருவருள் சுக்கிரன் நவாம்சத்தில் செவ்வாயும் செவ்வாய் நவாம்சத்தில் சுக்கிரனும் மாறியிருந்தால் அப்பொழுது பிறந்தவள் வேறு புருஷனுடன் தொடர்பு கொள்பவளாவாள்.

சந்திரன் சேர்ந்த சுக்கிரன், அங்காரகன் இவர்கள் 7ஆமிடத்திலிருக்கப் பிறந்தவள், கணவனுடைய அனுமதியின் பேரில் வேறு புருஷன் சம்பந்தத்தைப் பெறுபவளாவாள்.

சூரியன் 7லிருந்து சத்துருக் கிரகத்தால் பார்க்கப் பெற்றால் அந்த ஸ்திரீ கணவனால் விலக்கப்பெறுவாள்.

செவ்வாய் 7லிருந்தால் விதவையாகவோ ஸ்திரீ புருஷர்கள் ஒருவருக்கொருவர் பகை, வைரம் உடையவர்களாகவே இருப்பார்கள்.

7ஆமிடமானது சுபர் பாபர் இருவருடன் சேர்ந்திருந்தால் அதில் பிறந்தவள் புனர்ப்பூவாவாள்.

சனி 7லிருந்து சத்துருவால் பார்க்கப்பட்டால் விதவையாக ஆகாததுடன் மூப்பை அடைகிறாள்.

பாபர் வீடு 7ஆமிடமாகி, சனியுடன் கூடினால் அந்த ஸ்திரீ, வைதவ்யம் அடைகிறாள். சுக்கிரன் செவ்வாய் இருவரும் ஒருவர் ராசியிலிருந்து மற்றவராக மாறியிருந்தாரானால் அவள் ஜார புருஷனுடன் கலந்து உற்சாகமாக இருப்பாள்.

சந்திரன் 7ஆமிடத்திலிருந்தால், கணவனுடன் இருந்தவாறே, துராச் சாரமுள்ளவளாகிறாள்.

சந்திரன், புதன் இவர்கள் செவ்வாயின் வீடு, லக்கினமாகி அதிலிருந்தார்களானால் அதில் பிறந்த ஸ்திரீயானவள் கணவனிடம் துவேஷமுடையவளாக இருப்பாள். சந்திரனும் புதனும் இருந்தால் பிறருடைய ரகசியங்களைப் பற்றிப் பேசுவதில் சாமர்த்தியமுடையவளாகவும் செவ்வாயும் புதனும் இருந்தால் போகானுபவம் உள்ளவளாக இருப்பாள். சந்திரன், புதன், சுக்கிரன் இவர்கள் முற்கூறிய லக்கினத்திலிருந்தால் சுகத்திரவியத்துடன் கூடியவளாக

இருப்பாள். குரு, லக்கினத்தில் இருந்தால் நல்ல புத்திரருடையவளாகவும் பிரக்ஞை ஆபரணம் உடையவளாகவும் இருப்பாள்.

கிரகங்கள் உச்சத்தில் இருந்தால் சுபத்தையே செய்வர். 8ல் பாபரிருந்தால் ஸ்திரீ வைதவ்யத்தை அடைகிறாள். தனுசோ, கடகமோ ஜன்ம லக்கினமாகி 4ம் இடத்தில் பாவக்கிரகங்கள் இருக்கப் பிறந்தவள், வெகு புத்திரர்களை அடைந்தவளாகிறாள். அத்துடன் தரித்திரனுடன் கூடியவளாகவும் ஆகிறாள். ரிஷபமோ, சிம்மமோ, விருச்சிகமோ, கன்னியோ ஜன்ம லக்கினமாகி 5ல் சந்திரனிருக்க பிறந்தவள் அற்ப புத்திரனுள்ளவளாவாள். 7,9,1,8 இடங்களில் பாவக்கிரகங்கள் இருந்தால் தாரித்ரியம், சோகம் இவற்றால் கலக்கமடைவாள். அவ்விடங்களில் சுபர், பாபர் இருவரும் கலந்திருந்தால் மிஸ்ரமான பயனன் உள்ளவளாக ஆகிறாள். சுபர்கள் மட்டும் இருந்தால் சுபசம்பத்துடன் கூடியவளாகிறாள். 5க்குடையவன் 6லும் 6க்கு உடையவன் லக்கினத்திலும் இருந்தால், அந்த ஸ்திரீக்கு ஆயுதத்தால் மரணமுண்டாகும். எல்லாக் குரூரக் கிரகங்களுமே லக்கினத்திற்கு 7ஆமிடத்தில் இருந்தால் அந்த ஸ்திரீ விதவையாகிறாள்.

ஸ்திரீயின் ஜன்ம லக்கினத்திற்கு 7ல் சுக்கிரன் செவ்வாய் இவர்களுடன் கூடிய சந்திரனிருந்தால், அந்தக் கன்னிகை பர்த்தாவின் அனுமதியின் பேரில் பரபுருஷனிடம் செல்பவளாவாள். சனி, செவ்வாய் இவர்கள் ராசி அல்லது நவாம்சம் இவற்றில் சந்திரன், சுக்கிரன், செவ்வாய் மூவரும் சேர்ந்திருந்தாலும் இதே பயனையே சொல்ல வேண்டும்.

ஜன்ம லக்கின நவாம்சத்துக்கு 7ல் செவ்வாயின் நவாம்சமிருந்து, சூரியன் புதன் இவர்களால் பார்க்கப்பட்டால் அதில் பிறந்தவள் வியாதியுள்ள பெண் குறியுடையவள். சுபக்கிரகத்தின் நவாம்சமானது 7ல்

இருந்தால் நல்ல பகமுள்ளவளாகவும் புத்திரனுள்ளவளாகவும் ஆகிறாள்.

சந்திர லக்கினத்திற்கு 7ஆமிடத்திலிருக்கும் சுபக்கிரகம் ராஜ்யஸ்தானத்தைத் தருகிறது. அதில் குரூரக்கிரகம் இருந்தால் வைதவ்யமுண்டாகும். இரண்டு பாபக்கிரகங்கள் 7லிருந்தால் காமப்பற்று உடையவளாகிறாள். மூன்று பாபக் கிரகங்கள் 7ல் இருந்தால், தனக்குப் பிறகு கணவன் மரணத்தைச் செய்விப்பதுடன் துர்நடத்தை உடையவளாகவும் ஆகிறாள். ஒரு சுபக்கிரகம் 7ல் இருந்தால் அந்தக் கன்னிகை, ராஜ மந்திரியின் பத்தினியாக ஆகிறாள். மூன்று சுபக் கிரகங்களிலிருந்தால் அவள் குணவதியாகவும் பூபதியின் பட்டமகிஷியாகவும் இருப்பாள்.

ஒரு பெண்ணின் ஜன்ம லக்கினம் சந்திரன், சுக்கிரன் இவர்களுடன் கூடியிருக்குமானால், அவள் கோபமுள்ளவளாகவும் சுகத்தையடைபவளாகவும் இருக்கச் செய்யும். எந்த ராசியிலும் சந்திரன் இருக்கும் லக்கினத்தில் பிறந்தவள் சுகத்துடன் கூடியவளாகவும் ரதிகேளிக்கையில் பிரியமற்றவளாகவும் ஆகிறாள். சுக்கிரன், சந்திரன் இவர்களுடைய வீட்டில் பிறந்தவள், ரூபம், குணம் இவற்றில் சிறந்தவளாகவும், குரு, புதன் இவர்கள் வீட்டில் பிறந்தவள் வித்தையுடையவளாகவும் குரு, புதன், சுக்கிரன் இவர்கள் லக்கினத்தில் இருக்கப் பிறந்தவள் சகல குணங்களிலும் பிரசித்தையாக விளங்குவாள்.

### விஷகண்யா யோகம்

இதைப் பஞ்ச கன்யாதோஷம் எனவும் கூறுவர். (அ) சனிக்கிழமை ஆயில்யம் நட்சத்திரம் துதியை திதி மூன்றும் கூடிய நாளில் பிறந்தவள், (ஆ) ஞாயிற்றுக்கிழமை சதயம் நட்சத்திரம் துவாதசியில் பிறந்தவள், (இ) செவ்வாய்க் கிழமை விசாகம் நட்சத்திரம் ஸப்தமிதிதியில் பிறந்தவள் (ஈ) லக்னத்தில் சுபருடன்

கூடிய பாபரிருந்து பாவக் கிரகங்கள் 6லும் இருக்கப் பிறந்தவள். (உ) 5இல் சூரியனும் லக்னத்தில் சனியும் 9இல் செவ்வாயும் இருக்கப் பிறந்தவள் (மூன்று திரிகோணங்களிலும் கொடிய பாவிகள் இருப்பதால்) ஆகியோரது ஜாதகங்கள் தோஷம் உடையதாகும்.

இந்த தோஷத்தில் பிறந்தவள் பாக்கியம் அற்றவளாகவும், குழந்தையை இழப்பவளாகவும், தனமற்றவளாகவும், துன்பமடைபவளாகவும் ஆவாள். 7க்கு உடையவனோ சுபனோ 7இல் இருந்தால் இந்த விஷ கன்னியாதோஷம் பங்கம் அடையும் இதனை அறிந்து திருமணப் பொருத்தம் கண்டு ஆண் பெண்ணை இணைக்க வேண்டும்.

## 8. ஒரு ஸ்திரீயின் ஜாதகத்தைக் கொண்டு அவளது கணவனைப் பற்றி அறிதல்

எந்த ஸ்திரீயின் ஜாதகத்தில் 7 ஆமிடமானது பலமற்றும் ஒரு கிரகமுமில்லாமலும் அல்லது பாவ கிரகத்தால் பார்க்கப்பட்டும், சுபக்கிரகங்களின் பார்வையைப் பெறாமலும் இருக்குமோ, அவளுடைய கணவன் மிகவும் மூர்க்கனாக இருப்பான். சனியுடன் கூடிய புதன் 7ஆமிடத்திலிருந்தால் அவளது கணவன் நபும்சகனாவான். அத்துடன் அந்த ஸ்திரீயும் துர்ப்பகையாகவோ மலடியாகவோ இருப்பாள்.

மேலும் 7ஆமிடம் சரராசியானால் (மேஷம், கடகம், துலாம், மகரம் ஆகிய இவை நான்கும் சரராசிகள்) அவளது கணவன் எப்போதும் வெளிநாடுகளுக்குச் சென்று அலைபவனாக இருப்பான்.

சூரியன் 7 ஆமிடத்தில் தனது சொந்த நவாம்சத்தில் இருந்தால், அவளுடைய கணவன், மென்மையான சுபாவமுள்ளவனாகவும் அதிக கிரீடாவிநோதியாகவும்

இருப்பான். 7ல் சந்திரன் தனது நவாம்சத்தில் இருந்தால் இவளுடைய கணவன் சௌக்கியத்தையடைகிறான். 7ல் செவ்வாய் தனது நவாம்சத்திலிருந்தால், அவளுடைய கணவன் ஜாரானாகவும் பெண்ணாசை மிக்கவனாகவும் இருப்பான். 7ல் குரு, தனது நவாம்சத்திலிருந்தால் இவளுடைய கணவன் ஜிதேந்திரியனாக இருப்பான். 7ல் சுக்கிரன் தனது நவாம்சத்திலிருந்தால் அழகிய சரீரமுள்ளவனாகவும் சுகவாசியாகவும் இருப்பான்.

7ல் சனி, தனது நவாம்சத்தில் இருந்தால் அவளுடைய கணவன், கிழவனாகவும் அதிக மூர்க்கனாகவும் இருப்பான். ஒரு பெண்ணின் 7வது ராசி, 7வது அம்சத்தில் பிறந்தவனானால் அவன் மென்மையான அங்கமுள்ளவனாகவும் நல்ல குணங்களையுடையவனாகவும் எதிலும் சமர்த்தனாகவும் இருப்பான். 9க்குடையவனும் குருவும் 6,8,12ல் இருந்தாரானால் இவளுடைய கணவன் ஆயுளற்றவனாகிறான்.

9க்குடையவனும் குருவும் கேந்திரத்திலோ, திரிகோணத்திலோ இருந்தாரானால் அவளுடைய கணவன் நீண்ட ஆயுள் உள்ளவனாகவும் தனவானாகவும் இருப்பான். 9க்குடையவனுடன் குருவும், புதனுடனும் 4க்குடையவனுடனும் கூடினார்களானால் இவளுடைய கணவன், புத்திமானாகவும் வித்துவானாகவும் விளங்குவான். செவ்வாய், சனி இவர்களுடன் கூடுவார்களானால் விவசாயம் செய்பவனாவான். ராகு கேதுக்களுடன் சேர்ந்திருப்பார்களானால் துஷ்டனாக இருப்பான். 6க்குடையவனுடன் கூடுவார்களானால் இவளுடைய கணவன், திருடர்களின் தலைவனாக இருப்பான்.

ஒரு பெண்ணின் ஜன்ம லக்கினத்திற்கோ சந்திர லக்கினத்திற்கோ சூரியன் 7லிருக்கப் பிறந்தவளின் கணவன் வெளுத்த அங்கமுள்ளவனாகவும் காமியாகவும் ரோசத்துடன் கூடிய பார்வையையுடையவனாகவும் இருப்பான். சந்திரன் 7லிருக்கப் பிறந்தவளின் கணவன்

ரூபம், குணம் இவற்றுடன் கூடியவனாகவும், இளைத்த சரீரமுடையவனாகவும் போகியாகவும் வியாதி பீடித்தவனாகவும் இருப்பான். செவ்வாய் 7லிருக்கப் பிறந்தவளின் கணவன், வணக்கம் மரியாதை உள்ளவனாகவும் குரூர ரசப் பற்றுள்ளவனாகவும் சோம்பல் மிகுதி உடையவனாகவும் நல்ல வார்த்தை உள்ளவனாகவும் சிவந்த காந்தி உள்ளவனாகவும் இருப்பான்.

புதன் 7லிருக்க பிறந்தவளின் கணவன் வித்தை, பணம், குணம், இவை மிகுதியுள்ளவனாகவும் ரசிகனாகவும் இருப்பான். குரு 7ல் இருக்கப் பிறந்தவளின் கணவன் நீண்ட ஆயுளுடையவனாகவும் பால்யத்தில் காமியாகவும் இருப்பான். சுக்கிரன் 7லிருக்கப் பிறந்தவளின் கணவன், அழகு மிக்கவனாகவும், எப்போதும் வேடிக்கை விளையாட்டுகளில் பிரியம் உடையவனாகவும் பெண்ணாசை உடையவனாகவும் கவிஞனாகவும் விளங்குவான். சனி 7லிருக்கப் பிறந்தவளின் கணவன், கிழட்டு தன்மையுடைய சரீரத்தை உடையவனாகவும் நிலைத்த சரீரமற்றவனாகவும் பாவியாகவும் இருப்பான். ராகுவோ, கேதுவோ ஏழில் இருக்கப் பிறந்தவளின் கணவன் மழுங்கிய புத்தி உள்ளவனாகவும் நீசனாகவும் இருப்பான்.

மேற்கூறிய ஜோதிடக் குறிப்புகள் அனைத்துமே, ஜாதகப் பாரிஜாதம் என்ற கிடைத்தற்கரிய, மிகப் பழைய வடமொழி நூலின் ஏடுகளிலிருந்து, எடுத்து ஆராய்ந்து எழுதப் பெற்றவையாகும்.

இனி, ஜாதக தத்துவம் என்ற நூலில் கூறியுள்ள ஸ்திரீ ஜாதக பலன்களில் இந்நூலின் தலைப்புக்குரிய நல்ல விஷயங்களை மட்டும் கவனிப்போமாக.

## ஜாதக தத்துவம் கூறும் சிறப்புக் குறிப்புகள்

எது புருஷ ஜாதகத்துக்குச் சொல்லப் பெறுகிறதோ அவை யாவும் ஸ்திரீகளுக்கும் பொருந்தும்.

ஸ்திரீகளுக்குப் பொருந்தாதவற்றை அவர்களுடைய கணவன்மார்களுக்குச் சொல்ல வேண்டும்.

## ஸ்திரீ ஜாதகத்துக்குரிய சிறப்புகள்

லக்கினம், சந்திரன் இரண்டையும் கொண்டு சரீரத்தையும் அவற்றுக்கு 7,8 இடங்களைக் கொண்டு முறையே சௌபாக்கியம், வைதவ்யம் இவற்றைச் சொல்ல வேண்டும்.

ஜன்ம லக்கின சந்திர லக்கினங்கள் ஒற்றைப் பட்டதாகவோ, இரட்டைப் பட்டதாகவோ இருந்தால், அதில் பிறந்த ஸ்திரீ, பெண்மைச் சுபாவம் உடையவளாக இருப்பாள். சுபரால் பார்க்கப்பட்டால் நல்லொழுக்கம், குணம் இவற்றை உடையவளாக இருப்பாள். ஜன்ம லக்கின சந்திர லக்கினங்கள் ஒற்றைப் டை ராசியிலிருந்தால், புருஷனுடைய அன்பையும் அரவணைப்பையும் பெற்றவளாகவும் பாபரின் சேர்க்கை அல்லது பார்வையைப் பெற்றிருந்தால் துர்க்குணம் உடையவளாகவும், அழகற்றவளாகவும் இருப்பாள்.

## கணவனின் அமைப்பு

7ஆமிடம் பலமற்று, ஒரு கிரகமும் இல்லாதிருந்து சுபராலும் பார்க்கப்படாவிட்டால் அவளுடைய கணவன், கெட்டவனாக இருப்பான். 7ல் புதன், சனி இருக்கப் பிறந்தவளின் கணவன் நபும்சகனாக இருப்பான். 7ல் சூரியனிருந்தால் கணவனால் கைவிடப் பெறுவாள். இது கடக சிம்ம லக்கின ஜாதகங்களுக்கு மட்டுமே பொருந்தும். 7ல் சனி இருந்து பாபர்களால் பார்க்கப்பட்டால் விவாகம் நடைபெறுவது கடினம். சுபர், பாபர், சேர்ந்து 7லிருந்தால் புனர்பூவாவாள். பலமற்ற பாபர் 7லிருந்து அசுபரால் பார்க்கப் பெற்றால் கணவனால் விலக்கப் பெறுவாள். செவ்வாய் சுக்கிரன் இவர்களில் ஒருவர் அம்சத்தில் மற்றவர் மாறியிருந்தால் வேறு புருஷனிடம் பற்றுடையவளாவாள்.

செவ்வாய் வீடோ, அம்சமோ ஏழாமிடமாகி சனியினால் பார்க்கப்பட்டால் ரோகமுள்ள பகமுள்ளவளாகிறாள். சுபக்கிரகத்தின் வீடோ நவாம்சமோ ஏழாமிடமானால் நல்ல பகம் உள்ளவளாகவும் கணவனிடத்தில் பிரியம் உள்ளவளாகவும் ஆவாள். சுக்கிரனுடைய ராசியோ அம்சமோ 7ஆமிடமாக வந்தால் கணவன் பாக்கியவனாக இருப்பான். குருவின் ராசியாகவோ நவாம்சமோ 7ஆமிடமானால் கணவன் நற்குணமுடையவனாகவும் ஜிதேந்திரியனாகவும் இருப்பான். சந்திரனின் ராசியோ, நவாம்சமோ ஏழாமிடமானால் கணவன் காமியாக இருப்பான். புதனின் ராசியோ நவாம்சமோ 7ம் இடமானால் கணவன் வித்வானாக இருப்பான்.

சனியினுடைய ராசியோ அம்சமோ ஏழாவது இடமாகவானால் கணவன் கிழவனாகவும் முரடனாகவும் இருப்பான். லக்கினத்தில் சுக்கிரன், சந்திரன் இருவரும் இருந்தால் பொறுமைக்குணம் உடையவளாகவும் சுகம் உள்ளவளாகவும் இருப்பாள். லக்கினத்தில் புதன், சந்திரன் இருவரும் இருந்தால் கலை ஞானம் உடையவளாகவும் குணம் சுகம் இவை நிறைந்தவளாக ,இருப்பாள். புதனும் சுக்கிரனும் லக்கினத்திலிருந்தால் தர்சனீயையாகவும் கணவனுக்குப் பிரியமானவளாகவும் இருப்பாள். சுபக்கிரகங்கள் லக்கினத்திலிருந்தால் அநேக சுகபோக, நற்குணங்கள் நிறைந்தவளாக இருப்பாள். சனி, நடுத்தர பலம் பெற்றுப் புருஷ கிரகங்கள் பூரண பலம் பெற்றும் மீதமுள்ள கிரகங்கள் பலமற்றவைகளாகவுமிருந்து புருஷ ராசியில் பிறந்தவள், புருஷனைப் போன்ற தைரியமுடையவளாக இருப்பாள். புதன் செவ்வாய், குரு, சுக்கிரன் இவர்கள் பலம் பெற்று ஸ்திரீ ராசியில் பிறந்தவள் பிரசித்தி பெற்றவளாகவும் பிரம்மவித்தாகவும் இருப்பாள். குரூரக்கிரகம் 7லிருந்தால் தர்ம மார்க்கத்தில் செல்லும் சன்னியாசினியாவாள். 7ஆமிடத்தில் ஒரு சுபக்கிரகமிருந்தால் கணவனுக்குப் பிடித்தவளாகவும் இரண்டு சுபக்கிரகங்கள் இருந்தால் சிறந்த

பாக்கியமுடையவளாகவும் 3 சுபக்கிரகங்கள் இருந்தால் ராக்ஞீயாகவும் இருப்பாள்.

## ஜாதகலங்காரம் என்ற நூலில் கூறப்படும் பெண் ஜாதகத்திலிருந்து கணவனைப் பற்றியறிதல்.

பெண்ணின் 7வது ராசியைக் கொண்டு அவள் கணவனது குணத்தைக் கூற வேண்டும். மேலும் மாங்கல்ய ஸ்தானமாகிய 8ஆம் இடத்தைப் பர்த்தாவின் ஸ்தானம் என்றும் அதன் உரையில் கூறப்பட்டுள்ளது. 8ஆம் இடம் எவ்விதக் குற்றமும் குரூரமும் இன்றி இருக்குமானால் அவள் அநேக நாள் சுமங்கலியாக இருப்பாள். அதனால் அவள் கணவன் நீண்ட ஆயுளைப் பெறுவான் என்பது அறியப்படும். 8இல் பாவக்கிரகங்கள் இருந்தால் விதவையாவாள். 8ஆம் ராசிநாதன் இருந்த அங்கிசாதிபதி அட்டவர்க்கப்படி அவர்கள் நின்ற ராசியில் எத்தனை பிந்துகள் இருந்தனவோ அத்தனை வருடத்தில் விதவை ஆவாள். 8இல் புதன் இருக்கில் அவள் கணவன் துர்மரணமாவான். சுபரும், பாபரும் பார்க்கில் கணவன் இறந்த 9ஆம் மாதம் தானும் மறைவாள் எனக் கிரக பலம் அறிந்து கூறவேண்டும். 8ம் ராசியில் பெருமை மிக்க சுபக்கிரகங்கள் இருந்தால் அவள் சந்நியாசித் தன்மை உடையவள் ஆவாள்.

செவ்வாய் 8இல் இருக்க விரைவில் விதவை ஆவாள். சந்திரனும், சுக்கிரனும் இருக்க குறைந்த ஆயுள் உடையவள் ஆவாள். சூரியன் இருக்கில் கணவனுக்கு சம வயதுடையவள் ஆவாள். சனி 8இல் இருக்கில் பிள்ளைகளைப் பெற்று இழப்பவள் ஆவாள்.

ஜென்ம லக்னம் முதல் 8ஆம் ராசி வரையில் சந்திரன் புதன் சுக்ரன் குரு முதலிய சுபக்கிரகங்கள் வரிசையாக அமர்ந்திருக்கப் பிறந்த பெண் அளவிறந்த செல்வமும், லாபமும் அடைவதோடு அழகு வாய்ந்தவளாகவும், எந்நாளும் சௌக்யம் உடையவளாகவும் இருப்பாள். சனி,

குஜன், ராகு, கேது இவர்கள் 8இல் இருந்தால் விதவையாவாள்.

8ஆம் ராசி அதிபதி தன் சுய அங்கீசம் பெறாமல் வேறு கிரகங்களின் அங்கீசம் பெற்று 8ஆம் வீட்டோன் நின்ற அங்கிசாதிபதி 8ஆம் ராசியில் இருக்கப் பிறந்தவள் தன் மரண காலம் வரையில் மாங்கல்யத்தோடு இருந்து இறப்பாள். தான் முன்னும் புருஷன் பின்னுமாக இறப்பாள்.

ஜாதகத்தில் ஆண்களுக்குச் சொல்லப்பட்டவை யாவும் பெண்களுக்குப் பொருந்தும். ஸ்திரீ களுக்குப் பொருந்தாதவை. அவள் கணவனுக்குப் பொருந்திவரும் என்பது ஜாதகத் தத்துவம் கூறும் கருத்தாகும். 8ஆம் இடம் ஆண் பெண் இருவருக்கும் ஆயுள் ஸ்தானம், பெண்களுக்கு மாங்கல்ய ஸ்தானம். 5ஆம் இடம் இருவருக்கும் புத்திர ஸ்தானம் சிறப்பாகப் பெண்களுக்கு 9ஆம் இடம் புத்திரஸ்தானம் ஆகும். 2ஆம் இடம் இருவருக்கும் பொதுவான குடும்பஸ்தானம் ஆகும். 11ஆம் இடம் பின்தாரம் எனப்படுவதால் ஆண்களுக்கு மட்டும் அதிகம் பொருந்தும். பெண்கள் சிலருக்கு முதல் கணவனுக்குப் பிறகும் வேறு கணவன் வாய்க்கப் பெறுவதால் பின் கணவனை அறிய அந்த விதியும் பின்பற்றப்படும். 12ஆம் இடம் சயன சுகஸ்தானம். இது இருவருக்கும் பொருந்தும். 4ஆம் இடம் சுகஸ்தானம் இதுவும் இருவருக்கும் பொருந்தும். இவ்வாறே பொருந்துவனவற்றை ஏற்றவாறு ஊகித்தறிய வேண்டும். புதன் 8இல் இருந்தால் (பெண்களுக்கு) காகவந்தியை எனப்படுவாள். இத்தகையவளுக்கு ஆணோ பெண்ணோ ஒரே குழந்தை மட்டுமே இருக்கும். 8இல் சனி சூரியன் இருவரும் இருந்தால் மலடி ஆவாள். இவ்விதம் விவாகம் காலத்திலோ பிரச்சனை எழும்போதோ யூகித்து உரைக்கவும்.

## மூன்றாம் பகுதி

# 1. செவ்வாய் தோஷம் மற்றும் பரிகாரம்

ஆண் பெண்களுக்குத் திருமணப் பொருத்தங்களைப் பார்க்கும்போதே, ஆணுக்கோ, அல்லது பெண்ணுக்கோ செவ்வாய் தோஷம் இருக்கிறதா என்று பார்ப்பது உண்டு. இது மிகவும் முக்கியமாக, தசவிதப் பொருத்தங்கள் அனைத்தையும்விட முதன்மையான தாகப் பார்க்கப்படுவது மரபு முறையாகும்.

## செவ்வாய் தோஷம் என்றால் என்ன?

ஆண் அல்லது பெண்ணின் ஜாதகத்தில், ஜன்ம லக்கினத்துக்கோ அல்லது சந்திர லக்கினத்திற்கோ ஒன்று, இரண்டு, நாலு, ஏழு, எட்டு, பன்னிரண்டு ஆகிய ஆறு இடங்களில் செவ்வாய் (அங்காரகன்) என்ற கிரகம் அமைந்திருந்தால் அதனையே செவ்வாய் தோஷம் என்பது ஜோதிட முடிவு.

*தனே வ்யயேச பாதாளே*
*ஜாமித்ரே சாஷ்டமே குஜே!*
*ஸ்திரீணாம் பர்த்ரு விநாசஸ்யாத்*
*பர்த்ருணும் தார நாசனம்!*

என்பது இதற்குரிய ஸ்லோகம். இதன் பொருள்- லக்கினம், இரண்டாவது இடமாகிய தன ஸ்தானம், வ்யயம் (பன்னிரண்டாமிடம்) நான்காமிடம், ஏழாமிடம், எட்டாமிடம் ஆகிய இடங்கள் ஏதேனும் ஓரிடத்தில் அங்காரகன் ஸ்திரீயின் ஜாதகத்தில் இருந்தால் புருஷனுக்கும், புருஷ ஜாதகத்தில் இருந்தால் ஸ்திரீக்கும் மாரக பயம். கண்டம், மரணம் போன்ற தோஷங்கள் ஏற்படும் என்பது அனுபவக் கருத்து! ஜோதிட சாஸ்திர முடிவு.

ஸ்திரீ புருஷர்கள் ஆகிய இருவருக்கும் ஜனனக் காலத்தில் விரையஸ்தானமாகிய பன்னிரண்டாவது ஸ்தானத்திலும் தனஸ்தானமாகிய இரண்டாவது

இடத்திலும், நான்காமிடத்திலும், ஏழாமிடத்திலும், லக்னத்திலும், எட்டாமிடத்திலும் ஆகிய இந்த ஆறு இடங்களிலும், ஜன்ம லக்கினத்திலிருந்தாவது சந்திர லக்கினத்திலிருந்தாவது. சுக்கிரனாகிய களத்திர காரகனுடைய லக்கினத்தில் இருந்தாவது, அங்காரகன் (செவ்வாய்) இருந்தால் அந்தத் தம்பதிகள் புத்திரமித்திர தனயோக பாக்யங்களுடனும் நிலபுலன்களுடன் வாழ்வார்கள். சகல சம்பத்துகளும் உடையவர்களாக அனேக காலம் இன்ப சுகத்துடன் வாழ்வார்கள் என்றும், ஸ்திரீ புருஷர்களில் யாரேனும் ஒருவருக்கு மேலே சொன்ன ஸ்தானங்களில் அங்காரகன் இருந்து மற்றொருவருக்கு அவருடைய ஜாதகத்தில் அங்காரகன் அந்த இடங்களில் இல்லாமல் இருந்தால், எதில் அங்காரகத் தோஷம் இருக்கிறதோ, மற்றொருவருக்கு எதில் அங்காரகதோஷம் இல்லையோ அது அந்த ஜாதகரைப் பாதிக்கும். அதாவது அவருக்கு அந்த அங்காரக தோஷத்தால் கண்டம், மாரகம் முதலியன ஏற்படும் என்று அத்ரீ முதலிய மகரிஷிகள் இந்த அங்காரக தோஷத்தைப் பற்றி பின்வருமாறு ஸ்லோகமாக இயற்றியுள்ளனர்.

*தம்பத்யோர் ஜன்மதாலே வ்யயதனஹிபுகே*
*ஸப்தமே லக்ன ரந்த்ரே*
*லக்னாத் சந்த்ராச்ச சுக்ராதபி பவதியதா*
*பூமி புத்ரோத்வ யோர்வை*
*தத்ஸாம்யாத் புத்ரமித்ர ப்ரசுர தனபதி தம்பதீ*
*தீர்ககாலம்*
*ஜீவேதாம் ஏகஹாநாத் பவதி ம்ருதிநிதிப் ராஹு*
*ரத்ராத்ரி முக்யா:!!*
*லக்னேந்து சுக்ராத்து ஸ்தானே யத்யஸ்தி*
*க்ஷிதிஸம் பவ:!*
*தத்தசாபாகஸமயே தோஷமா ஹீர்மனீ ஷிண:!!*

ஜன்ம லக்கினத்துக்கும் சந்திர லக்கினத்துக்கும், சுக்கிர லக்கினத்துக்கும் 2, 4, 7, 8, 12 ஆகிய இடங்களில் அங்காரகன் இருந்தால், அந்த அங்காரகனுடைய தசாபுத்திகள் நடக்கும் காலங்களில் செவ்வாய்

தோஷத்தால் மாரகம் ஏற்படும் என்று கூறப்படுகிறது. அதாவது புருஷனுக்குள்ள செவ்வாய் தோஷம் மனைவியையும், மனைவிக்குள்ள செவ்வாய் தோஷம் புருஷனையும் மரணத்திற்காளாக்கிவிடும் என்பதே மேலேயுள்ள சுலோகத்தின் பொருளாகும்.

செவ்வாய் தோஷத்தைப் பற்றி, மேற்கூறிய சுலோகங்களிலிருந்து, பொதுவாக 2, 4, 7, 8, 12 ஆகிய இடங்களில் செவ்வாய் கிரகம் அமைந்திருப்பதால் மட்டுமே தோஷம் உண்டு என்பதும் அதுவும் அந்தத் தோஷம் உள்ள ஜாதகர் பெண்ணாக இருந்தால் புருஷனுக்குக் கண்டம் என்றும், புருஷ ஜாதகத்தில் அங்காரக தோஷம் இருந்தால் ஸ்திரீக்குக் கண்டம் என்றும், ஸ்திரீ புருஷ ஜாதகங்கள் இரண்டிலுமே அங்காரகதோஷம் இருந்துவிட்டால் "நல்லது" என்றும் "சுபம்" என்றும் சொல்கிறார்கள்.

அத்தகையவர்கள், தங்கள் ஆயுட்காலம் முழுமையும் தனதானிய, போக பாக்கியங்களுடனும் புத்திரர்கள், பந்து மித்திரர்களுடனும் இன்பமாக வாழ்வார்கள் என்றும் சொல்கிறார்கள். என்றாலும் செவ்வாய் அமைந்துள்ள ஸ்தான பலத்தைப் பொருத்தே வாழ்க்கை அமையும் என்பது நம் கருத்து.

மேற்படி தோஷத்தால் மாரகம், கண்டம் போன்றவை செவ்வாய் திசையிலும் செவ்வாய் புத்தி அல்லது அந்தரத்தால் ஏற்படக் கூடும். இன்றுதான் செவ்வாய் தோஷத்தைப் பற்றிப் பொதுவாகச் சொல்லப்படும் ஜோதிட சம்பந்தமான விஷயங்கள். இனி செவ்வாய் தோஷம் எவ்வெப்போது ஜாதகரீதியாகப் பாதிக்காமல் இருக்கும் என்பதைக் கவனிப்போம்.

## செவ்வாய் தோஷம் பாதிக்காத ஜாதகங்கள்

1. ஒரு ஜாதகத்தின் லக்கினத்துக்கோ அல்லது சந்திர லக்கினத்துக்கோ இரண்டாமிடமாகிய தனவாக்கு, குடும்ப ஸ்தானம் மேஷமாகவோ அல்லது விருச்சிகமாகவோ

இருந்து, அதில் செவ்வாய் இருந்தால் செவ்வாய் தோஷம் கிடையாது. ஏனென்றால் செவ்வாய்தான், மேஷ ராசிக்கும் விருச்சிக ராசிக்கும் அதிபதியாவார். மற்ற ராசிகளில் செவ்வாய் இருந்தால் தோஷமுண்டு. செவ்வாய் மேஷத்திலிருந்தால் இரத்த அழுத்தம், முன்கோபம் முதலியவை இருப்பதால் வாயாடியாக இருப்பார். செவ்வாய் விருச்சிகத்திலல் இருந்தால் சில்மிஷங்கள் செய்பவராக இருப்பார். இந்தக் குணங்கள் மட்டும் இருக்கும் என்பது எனது கருத்து.

**"த்விதீயே குஜதோஷஸ்யாத் மேஷ
விருச்சிகயோர்வின!"**

என்பது இதற்குரிய ஸ்லோகமாகும்.

2. ஒருவரது ஜாதகத்தின் லக்கினத்துக்கோ, சந்திர லக்கினத்துக்கோ, நான்காவது இடமாகிய மாத்ரு ஸ்தானம் ரிஷபம் அல்லது துலாமாக இருந்து, அதில் செவ்வாய் இருந்தால் நான்காமிடத்திய செவ்வாய் தோஷம் கிடையாது. மற்ற ராசிகளிலிருந்தால் தோஷம் உண்டு.

"சதுர்த்தே குஜதோஷஸ்யாத் துலா விருஷபயோர் வின"

என்பது ஜோதிட ஆதாரம்.

3. ஒரு ஜாதகத்தின் லக்கினத்துக்கோ, சந்திர லக்கினத்துக்கோ எட்டாவது வீடு, கன்னியாகவோ மகரமாகவோ இருந்து, அதில் செவ்வாய் இருந்தால், அப்போது எட்டாம் இடத்திற்குரிய செவ்வாய் தோஷம் கிடையாது. மற்ற ராசிகளிலிருந்தால் செவ்வாய் தோஷம் உண்டு.

**"அஷ்டமே குஜ தோஷஸ்யாத் கன்யாமகரயோர் வின!"**

என்பது இதற்குரிய ஸ்லோகம்.

4. ஒருவருடைய ஜாதகத்தில் ஜன்ம லக்கினத்துக்கோ, சந்திர லக்கினத்துக்கோ, பன்னிரண்டாமிடம் மிதுனமாகவோ அல்லது கன்னியாகவோ இருந்து, அந்த ராசியில் செவ்வாய் இருந்தால் செவ்வாய் தோஷம் கிடையாது. மற்ற ராசிகளுக்கு தோஷமுண்டு.

5. ஸ்திரீ புருஷர்களின் ஜாதகத்தில் சிம்மராசியிலாவது, கும்ப ராசியிலாவது, செவ்வாய் இருந்தால், செவ்வாய் தோஷமே கிடையாது என்று ஜோதிட நூலான "தேவகேரளம்!" என்ற நூல் கூறுகிறது.

**"ஸம்ஹ கும்ப நதோஷ ஸ்யாத் ப்ரத்யக்ஷம்**
**தேவகோணம்"**

6. ஸ்திரீ புருஷர்களின் ஜாதகத்தில் நாலாம் இடமாகவோ அல்லது ஏழாமம் இடமாகவோ மேஷம், கடகம், விருச்சிகம், மகரம் ஆகிய ராசிகளில் ஏதாவது ஒன்று அமைந்திருந்து அதில் செவ்வாய் அமர்ந்திருந்தாலும் செவ்வாய் தோஷம் கிடையாது. இத்தகைய அமைப்பில் செவ்வாய் அமர்ந்திருந்தால் இதே செவ்வாய் சுபயோக சுப பலனை அளிப்பாராகையால் இது போன்ற செவ்வாய் சுபனாகவே கருதப்பெறுகிறான். இவ்வாறு அமைந்திருந்தால் 4,7 ஆமிடத்திற்குரிய செவ்வாய் தோஷம் கிடையாது.

**இந்தக் கருத்துக்கு,**
**சதுஸ் ஸப்தமகோ பௌமோ**
**மோக்ஷகர் காளி நக்ரக:!**
**யதா ராசௌ சுப: ப்ரோக்த:**
**குஜாத்தோஷோ நவித்யதே!!**

7. லக்னம், இரண்டாமிடம், நாலாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் ஆகிய இந்த தோஷ ஸ்தானங்களில் செவ்வாய் இருந்து, அந்த ராசி * சரராசியானால் செவ்வாய் தோஷம் கிடையாது. மேற்கூறிய ஸ்தானங்கள் மற்ற

ஸ்திர உபய ராசிகளானால் செவ்வாய்தோஷம் அதிகமுண்டு.

8. மேலே சொன்ன ஸ்தானங்களிலுள்ள செவ்வாயுடன் குருவாவது புதனாவது கூடியிருந்தாலும் அல்லது அந்தச் செவ்வாயை குருவோ அல்லது புதனோ பார்ப்பாராகில் செவ்வாய் தோஷம் கிடையாது.

மேற்சொன்னவைக்கு ஆதாரமாக பின்வரும் ஜோதிட சுலோகம் அமைந்துள்ளது.

**சர ராசி கதோ பௌம:**
**சதுரஷ்டவ்யயே த்வயே!**
**லக்னே பாப விநாசஸ்யாத்**
**ப்சுசஷேப் பாபோ விசேஷத:!!**

9. சூரியனுடைய ஆட்சி வீடாகிய சிம்மத்திலும், சந்திரனுடைய ஆட்சி வீடாகிய கடகத்திலும் செவ்வாய் இருந்தால், செவ்வாய் தோஷம் கிடையாது. செவ்வாய், தன்னுடைய உச்சஸ்தானமாகிய மகரத்திலாவது, ஸ்வக்ஷேத்திரமாகிய மேஷம், விருச்சிக வீடுகளிலாவது, மித்ர க்ஷேத்திரங்களிலாவது செவ்வாய் இருந்தால் செவ்வாய் தோஷம் கிடையாது. இத்தகைய வதூவரர்களுக்கு விவாகம் செய்விக்கலாம். இந்தக் கருத்துக்குரிய ஜோதிட சுலோக ஆதாரம் பின்வருமாறு.

**அர்க்கேந்து க்ஷேத்ர ஜா தானாம்**
**குஜதோஷோ நவித்யதே!**
**ஸ்வோச்ச மித்ரப ஜாதானம்**
**தத்தோஷம் நபவேத்கில!**

10. ஹோராசாஸ்திரத்தில் சில விஷயங்கள் கூறப்படுகின்றன. அதாவது ஸ்திரீ ஜாதகங்களில் சந்திர லக்கின ஜன்ம லக்கினங்களில் எது வலிமையாக இருக்கிறதோ அந்த லக்கின ரீதியாகப் பலன் சொல்ல வேண்டும் என்றும், அதுபோலவே ஸ்திரீ ஜாதகங்களில்

லக்கினம், சந்திர லக்கினம், சுக்கிரன் இருக்கும் இடம் முதலான இடங்களில் செவ்வாய் தோஷம் இருந்தால், அந்தத் தசாபுத்தி காலங்களில் புருஷனுக்கு தோஷம், கண்டம், மாரகம் முதலியன தோன்றக் கூடும். ஆயினும் ஜன்ம லக்னாதிபதியாக இருக்கும் தோஷம் தான் மிகவும் முக்கியமானதாகும். இதனை அனுசரித்துத்தான் செவ்வாய் தோஷத்தை நிச்சயிக்க வேண்டும்.

## செவ்வாய் தோஷ ஆராய்ச்சி

பொதுவாக திருமணஞ் செய்து கொள்ளும் பருவ வயதையடைந்த ஆண், பெண் ஆகியோரின் ஜாதகங்களை, திருமணப் பொருத்தம் பார்ப்பதற்கு எடுத்துக் கொள்ளும்போது இந்தச் செவ்வாய் தோஷத்தையே, மற்ற தசவிதப் பொருத்தங்களைப் பார்ப்பதற்கு முன்பே கவனித்துப் பார்ப்பதுண்டு. செவ்வாய் தோஷம் இருந்தால், அத்தகைய ஜாதகரையோ, ஜாதகியைப் பெற்றவர்களோ, உறவினர்களோ, திருமண சம்பந்தம் செய்பவர்களோ பெரிதும் பீதியடைகிறார்கள்.

ஜோதிடர்களில் பலரும் செவ்வாய் தோஷம் இருக்கும் ஜாதகத்துக்காக, செவ்வாய் தோஷ நிவர்த்திக்காக மந்திர ஜபங்கள் செய்வதாகவும், பரிகாரஞ் செய்வதாகவும், கூறுவதற்கு இந்தச் செவ்வாய், ஜாதகம் பார்க்கும் ஜோதிடருக்கு உதவி செய்வதால், எல்லோருமே, ஜன்ம லக்னத்துக்கு 2,4,7,8,12 ஆகிய ஸ்தானங்களில் செவ்வாய் இருந்தால் செவ்வாய் தோஷம் என்பதை மனப்பாடம் செய்து கொண்டு, ஜாதகம் பார்க்க வருபவர்களை மிரட்டி விடுவதுண்டு.

யந்திரம் செய்வதாகவோ, மந்திரம் ஜபிப்பதாகவோ பணம் பறிப்பவர்களும் உண்டு. எனவேதான், மேலே கூறியுள்ள ஜோதிட சாஸ்திரத்தில் செவ்வாய் தோஷ சம்பந்தமான குறிப்பிட்டு உள்ளவைகளை, ஆதார பூர்வமாகக் குறிப்பிட்டு இருக்கிறேன்.

வெறும் எண்ணிக்கையை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு, 2,4,7,8,12 ஆகிய இடங்களில் செவ்வாய் இருந்தால் தோஷம் என்று எடுத்த எடுப்பிலேயே சொல்லும் மரத்தடி ஜோதிடர்களும் இருக்கிறார்கள்.

இதனால் பலருடைய விவாகங்கள் தடைப்பட்டு விடுவதுமுண்டு. ஆனால் அவர்கள் தோஷம் என்று கூறிய அதே தோஷமுடைய ஜாதகத்திற்கே அதே ஜோதிடர் பரிகாரஞ் செய்துவிட்டால், அந்தத் தோஷம் போய்விடும் என்று கூறி, அதே ஜோதிடரே மந்திரவாதியாகி விடுவதுமுண்டு. ஆகவே ஜோதிடர்கள் தங்கள் மந்திரஜப பலத்தாலேயே செவ்வாய் கிரகத்தின் தோஷத்தை மாற்றிவிடச் செய்வது எல்லாம் பொய்! என்று சொல்லும் படியாக நேரிடுகிறது. செவ்வாய் தோஷத்துக்கு மேற்கூறிய 2,4,7,8,12 ஸ்தானங்கள் மட்டுமே முக்கியமானதல்ல. அதே இடங்களில் செவ்வாயே இருந்தாலும் அத்தகைய ஜாதகருக்கு, அந்த அங்காரக தோஷத்துக்குரிய அந்தக் கிரகதிசை வரும்போதுதான், அத்தகைய தோஷ பலன்கள் ஏற்படுமே தவிர, திருமணம் செய்யும் சமயத்தில் மட்டும் அந்தத் தோஷம் நிச்சயமாகத் தீவிரமாக இருக்க முடியாது. இதுபோன்ற செவ்வாய் தோஷமுள்ள ஜாதகமாக இருந்துவிட்டால், செவ்வாய் தோஷமில்லாத ஜாதகத்துடன் மற்ற யோகங்கள் அந்த ஜாதகருக்கு வலிமையாக இருக்கும்போது விவாகம் செய்விக்கலாம். இதனால் எந்தவிதத் தீங்கும் ஏற்பட முடியாது. இத்தகைய தம்பதிகள் புத்திர போக பாக்கியங்களுடன் சுகமாக வாழ்வார்கள்.

சிலர், ஜோதிட சாஸ்திர ரீதியாக செவ்வாய் தோஷத்தைப் பற்றிய விவரங்களையே அறியாமல், செவ்வாய் திசை வராவிட்டாலும் செவ்வாய் புத்திகளில் தோஷம் ஏற்படக்கூடும் என்ற சந்தேகத்தை எழுப்பி விடுவார்கள். தசாபுத்தி நடந்தாலும் நடக்காவிட்டாலும், தசநாதனை மீறி புத்திநாதன் எந்தவித பயனையும் அளிப்பதில்லை. தசநாதனை அனுசரித்தே புத்திநாதன்

பலனை அளிக்க வேண்டும். அவ்வாறுதான் பலன்கள் நிகழ்ந்து வருகின்றன.

உதாரணமாக ஒரு திசையில், எல்லாக் கிரகங்களின் புத்திகளும் நடக்க வேண்டியுள்ளன. அவரவர்களுக்குரிய பலன்கள் யாவற்றையுமே புத்திநாதர்கள் அளிப்பதும் இல்லை. அளிக்கவும் முடியாது. அதாவது மாரகம் செய்யக்கூடிய கிரகம் என்று எப்படியாவது ஒரு கிரகம் ஒருவரது ஜாதகத்தில் இருந்தே தீரும். இந்தக் கிரகத்தின் புத்தி, எல்லாத் திசைகளிலும் வரத்தானே செய்யும். வந்துதானே தீரவேண்டும். அப்போது புத்தி நடக்கின்றதே, ஏன் அந்தப்புத்தி மாரகத்தை செய்யவில்லை. ஏன் செய்வதில்லை என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். இவை போன்றவைகள் மிகவும் முக்கியமாக கவனிக்க வேண்டுவது அவசியமாகும்.

இதற்குக் காரணம் என்னவென்றால் தசாநாதனை மீறி புத்திநாதன் பலன் அளிக்கலாகாது என்பது சாஸ்திர பிரமாணம். எனவே, வதூவரர்கள் இருவருடைய ஜாதகத்திலுமே செவ்வாய் தோஷம் இருக்குமானால் மிகவும் உத்தமம். அவர்களுக்கு தைரியமாக விவாகம் செய்விக்கலாம் என்று ஜோதிடர்கள் பலர் கூறிவிடுவார்கள். ஜாதக பலன் நன்றாக இல்லை என்றால் தோஷம் மாத்திரம் சரியாக இருக்கிறதே; அதுவே போதும் விவாகத்தைச் செய்து விடலாமே என்று நடத்துவதாயின் அது ஒரு பெரிய தவறாகிவிடும். செவ்வாய் தோஷம் ஒருவரின் ஜாதகத்திலுள்ள மற்ற யோகங்களையே மாற்றிவிடக் கூடிய சக்தியும் வலிமையும் உடையதல்ல. ஜாதக யோகப்படித்தான் ஜாதகரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் நிகழ்ந்துவரும்.

முக்கியமாக மங்கையரின் ஜாதகங்களில், செவ்வாய் தோஷம் என்பதை, லக்கின ரீதியாகவும் சந்திர லக்கின ரீதியாகவும் சுக்கிர லக்கின ரீதியாகவும் பார்க்க வேண்டும் என்பதுதான் ஜோதிட சாஸ்திர முறை. இதில் எது முக்கியமானது என்ற கேள்விக்கே இடமில்லை.

மூன்றுமே முக்கியமானவைதான். இதில் ஏதாவது ஒரு கிரமப்படி அநேக வதூஜாதகங்கள் தோஷமம் உடையவைகளாக இருக்கக் கூடும். பெரும்பாலும் நூற்றில் தொண்ணூற்றுக்கு மேற்பட்ட பெண்களின் ஜாதகங்கள், மேற்கூறிய மூன்று முறைகளில் ஏதாவது முறையில் செவ்வாய்த் தோஷம் உடையதாகவே இருக்கின்றன. இத்தகைய தோஷ நிவர்த்திக்கான பிரமாணங்கள், ஜோதிட சாஸ்திரங்களில் எழுதப் பெற்றுள்ளன. அவற்றில் சிலவற்றையே மேலே குறிப்பிட்டிருக்கிறேன். இவை பரிகார முறைகள் அல்ல.

எனவே, சாஸ்திர ரீதியாகவே, மேற்சொன்ன ஆதாரங்களைக் கொண்டு பார்க்கும்போது, அநேகமாக எல்லா ஜாதகங்களுக்குமே இந்த செவ்வாய் தோஷம் உண்டு என்றோ இல்லையென்றோ சாஸ்திர ரீதியாகவே நிரூபித்துவிட முடியும். அங்காரதிசையே வராத ஜாதகங்களும் பல இருக்கின்றன.

எனவே செவ்வாய் தோஷம் என்பதற்கு இவ்வளவு அதிகமான முக்கியத்துவம் கொடுத்து அதனால் ஏதோ பிரமாதமாக ஆபத்து வந்துவிடும் என்று சொல்வதற்கு சாஸ்திரங்களில் எவ்விதக் காரணமும் இல்லை.

என்றாலும் வதூவின் ஜாதகத்தில் எட்டாவது ஸ்தானத்தில் செவ்வாய் இருந்தால் விவாகத் தடை ஏற்படும் என்றுதான் சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறதே தவிர அது தோஷமாகாது என்றும் சொல்லியிருக்கிறது. இதனால் ஒரு பெண்ணின் மாங்கல்ய ஸ்தானமான எட்டாவது ஸ்தானத்தில் செவ்வாய் இருந்துவிட்டால், அவளுக்குத் திருமணம் செய்தால், அவள் கணவன் மரணம் அடைந்து விடுவான் என்று சொல்வது அனுபவத்தாலும் நடைமுறை நிகழ்ச்சிகளாலும் சொல்லப் பட்ட கருத்தே தவிர, ஜோதிட சாஸ்திரப்படி, அந்தப் பெண்ணின் ஜாதகத்தில் இதர யோகங்களையும் ஆராய்ந்து பார்த்தே முடிவு செய்யவேண்டும். அந்தப் பெண்ணுக்கே, எட்டாவது வீட்டில் செவ்வாய்

இருப்பதாலேயே, அவள் கணவன் இறந்துவிடுவான் என்பது ஜோதிடரின் முடிவாகவே இருந்தாலும், அவளது கணவனின் ஜாதகத்தில் ஆயுட்பலம் வலிமையாக இருந்தால் இந்தத் தோஷத்தைப் பற்றிய பயமே ஆதாரமற்றது தானே! இதனை வீண் பீதி என்று சிலர் கூறலாம். இதனால் சிலருக்கு கிலியும் பயமும் ஏற்படுவதாலேயே விவாகத்தடைகள் ஏற்படுவதையும் நாம் உணரவேண்டும்.

கணவனுக்குக் கண்டம், களத்திர தோஷங்கள் போன்றவைகளை ஜாதக ரீதியாகக் கவனித்துப் பார்த்து முடிவு செய்ய வேண்டுமே தவிர, அஷ்டமத்தில் செவ்வாய் என்பதாலேயே அந்தப் பெண் அமங்கலியாவாள் என்று சொல்வதே மகாபாவகரமான செயலாகும்!

எனவே, செவ்வாய் தோஷம் இருப்பதாக தெரிந்தாலே பயப்படத் தேவையில்லை. இம்மாதிரியான விஷயங்களில், ஜாதக கிரக நிலைகள், ஜனன கால கிரக நிலைகளின்படி, ஸ்தான பலம், முதலிய ஷட்பலங்கள் கிரகாதிபத்யம், லக்கினம் முதலிய பலவித அம்சங்களைக் கவனித்தும், களத்திர தோஷத்தை பற்றியும் மணக்கவிருக்கும் கணவனின் ஆயுளைப் பற்றியுமே அபிப்பிராயம் சொல்லவேண்டும்.

செவ்வாய் தோஷமே இல்லாத ஜாதகங்களில், ஸ்திரீ புருஷர்களுக்கு, ஜாதக ரீதியான வேறு காரணங்களால் மாரகம் அகாலத்திலும் விபத்தாலும் ஏற்படலாம். எனவே ஜாதக ரீதியாகவே இதுபோன்ற விஷயங்களைக் கவனித்து முடிவு செய்யவேண்டும். சில கிரந்தங்களில் செவ்வாய் தோஷத்துக்குரிய பரிகாரங்களும் கூறப்பட்டுள்ளன. ஆகவே செவ்வாய் தோஷம் ஒரு மகத்தான தோஷமில்லை. எனவே, செவ்வாய் தோஷத்தைப் பற்றி யாருமே காரணமின்றிப் பீதியும் கிலியும் பயமும் அடைய வேண்டியதில்லை. இதனால் செவ்வாய்த் தோஷத்தால் மிகப் பெரிய கெடுதி எதுவும்

ஏற்பட்டு விட முடியாது என்பதை தீவிரமான யோகபலம் பெற்றவர்களும், தெய்வீக உபாசனை தவம், ஜபம் இவற்றில் வலிமை பெற்றவர்கள் மட்டுமே கூறமுடியும்.

"ஆலையில்லாத ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை" என்பதைப் போலத்தான், ஜாதகமே இல்லாதவர்களுக்குத் தான் பெயர் ராசிப் பொருத்தங்கள், மரம், கணம், தினம், ரஜ்ஜு, யோனி ஆகிய பொருத்தங்கள் பார்க்கப் பெறுகின்றன. அப்படிப் பார்த்துச் செய்யப்படும் திருமணங்களைச் செய்து கொண்டவர்களும் சுகமாக வாழத்தான் வாழ்கிறார்கள்.

பகுத்தறிவு வளர்ந்து வரும் இந்தக் காலத்தில் கலப்புத் திருமணங்களும் பதிவுத் திருமணங்களும் எந்த மாதத்திலும் எந்தக் காலத்திலும் எந்தவித ஜோதிடப் பொருத்தங்களையே பார்க்காமல் நடத்தப் பெறுகின்றனவே என்று சில புத்திசாலிகள் சாதுரியமாகப் பேசக் கூடும். பெரும்பாலான இத்தகைய திருமணங்களைச் செய்து கொண்டவர்களின் எதிர்கால வாழ்க்கை ஏதேனும் ஒரு வகையில் குறை உடையதாகவே இருக்கிறது என்பதை பகுத்தறிவாளரும் நாத்திகர்களும் கூட உணர்ந்து வருவதால், அவர்களுடைய சொந்தக் குடும்பங்களில் திருமண ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஜோதிடத்தை நம்புகிறார்கள். கலப்பு மணம், பதிவுத் திருமணம் செய்பவர்களுடைய ஜாதகத்தில் அவர்கள் அவ்வாறுதான் திருமணம் செய்து கொள்வார்கள் என்பதை அவர்களுடைய ஜாதகமே கூறிவிடும்.

ஆகவே யாருமே ஜோதிட விஷயத்தில் முரண்படாமல் வதூவரர்களின் ஜாதகங்களின் யோக பலாபலன்களை முன்னும் பின்னும் நன்றாக ஆராய்ந்து செய்தால், வதூவரர்கள் இன்பமாகவும் பாக்கியசாலியாகவும் இனிது வாழ்வார்கள்.

## செவ்வாய் தோஷ பரிகாரம்

வைத்தீஸ்வரன் கோவில் சென்று கீழ்க்கண்ட ஐவருடைய சன்னதிக்கு சென்று வழிபட்டு அர்ச்சனை செய்ய வேண்டும்.

1. கற்பக வினாயகர்
2. மருந்தீஸ்வரர்
3. தையல் நாயகி அம்மன்
4. செல்வ முத்துக் குமார சுவாமி
5. அங்காரகன்.

ஜென்ம நட்சத்திரத்திலோ அல்லது செவ்வாய் கிழமையன்றோ இறைவன் தரிசனம் பெற்று வழிபடுவது மிகவும் சிறப்புடையது.

திருமணஞ்சேரி சென்று வழிபட்டு மாலை அணிந்து பெற்றுக் கொண்டதை வீட்டில் சுவாமி படத்திற்கு எதிரில் வைத்து தினமும் வழிபட்டு வரவேண்டும். திருமணம் நடைபெற்றதும் வாழ்க்கைத் துணைவருடன் திருமணஞ்சேரி சென்று அதுவரை பூஜித்து வந்த மாலையை இறைவன் சந்நிதியில் சேர்ப்பிக்க வேண்டும்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள நித்ய கல்யாண பெருமாள் தரிசனம் பெற்று வேண்டுதல் தடை நீங்கி திருமணம் கைகூடும்.

செவ்வாய் 7,8ல் உள்ளவர்கள் முருகன் சன்னதியில் திருமணம் செய்து கொள்வது செவ்வாய் தோஷத்தை போக்கும். முருகன் சன்னதியில் திருமணம் செய்து கொள்ள இயலாதவர்கள், திருமணத்திற்கு பின் தம்பதிகள் இருவரும் முருகன் கோவில் சென்று வழிபடுவது நல்லது.

திருச்செங்கோடு மலை மீதிருக்கும் முருகன் தரிசனம் விசேஷ பலனைக் கொடுக்கும்.

## 2. விவாக சுப முகூர்த்தங்கள்!

விவாக சுப முகூர்த்தத்திலிருந்து தான், ஒவ்வொரு பருவப் பெண்ணுக்கும் ஆணுக்கும் சம்சார வாழ்க்கையின் சகலவிதமான நன்மைகளும் க்ஷேமங்களும் ஆரம்பமாகின்றன. எனவே, குலப் பெருமையையும் குடும்ப கௌரவத்தையும், மரபின் மகிமையையும் இனத்தின் தூய்மையையும் காக்க விரும்பிய சமூக சிற்பிகள்தான். இத்தகைய விவாக முறைகளை வகுத்துள்ளனர். அதனால்தான் சமுதாய மரபுப்படி வைதீக முறையில் நடைபெறும் மாங்கல்யதானம் செய்யும் திருமணங்களுக்கு மட்டுமே இத்தகைய விவாக சுப முகூர்த்தங்கள் நிச்சயிக்கப் பெறுகின்றன.

நாள் செய்வதை நல்லவர்களும் கூடச் செய்யமாட்டார்கள், அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அதுவும் பிறப்பதில்லாயின் நன்று என்று வள்ளுவர் வகுத்த வழிமுறைப்படி திருமணம் நடத்தி மண ழ்க்கையைச் சிறப்புறச் செய்யும் குறிக்கோளுடன் தான், திருமணத்திற்கான முகூர்த்தங்கள் நிச்சயிக்கப் பெறுகின்றன. விவாகங்களை நல்ல வேளையில்தான் செய்ய வேண்டும்.

இந்த நவநாகரீக காலத்தில் நமது நாட்டின் பண்பாட்டுக் கலாச்சார மரபுகளை மறந்து, மேலை நாட்டினரைப் பின்பற்றிச் செய்யும் கலப்புத் திருமணங்களுக்கும் பதிவுத் திருமணங்களுக்கும் முகூர்த்த நேரங்கள் அவசியமுமில்லை. அவை அனைத்துமே அவசரத் திருமணங்கள்! அவைகளுக்கு சட்ட ரீதியான அந்தஸ்துகளும் வலியுறுத்தும் உரிமைகளும் இருக்குமே தவிர சமுதாய ரீதியான உயர்ந்த மதிப்புகள் நடைமுறை வாழ்க்கையில் இருப்பதில்லை.

எனவே, விவாக சுபமுகூர்த்தங்களை சாஸ்திர முறைப்படி ஆராய்ந்தறிந்த முகூர்த்த கால லக்கினங்களை சுபவேளையில் நிச்சயித்தே விவாகங்களை நடப்பிக்க வேண்டும்.

விவாகாதி விஷயங்களில் நமது பெரியோர்கள் நடைமுறையில் சாஸ்திர முறைப்படி கடைப்பிடித்து வந்த நியதிகளை இந்த நவநாகரீக காலத்தில் அனுசரித்து நடந்து கொள்வது நமக்குச் சற்று சிரமமாக இருந்தாலுங்கூட, அதை தம்பதிகளின் நல்வாழ்வையும் நல்லதொரு எதிர்காலத்தையும் அமைப்பதற்கு, நாம் நல்ல சுபவேளைகளில் விவாகங்களை நடப்பிக்க வேண்டும். இதன் மூலம் தான் அவர்கள் தாங்கள் கோரிய நற்பயன்களை நாம் செய்துவைக்கும் திருமணங்களின் மூலம் அடைய முடியும். வயது வந்த ஆணையும் வயது வந்த பெண்ணையும் அவர்கள் விருப்பப்படியே திருமணம் செய்து கொள்ள விட்டுவிட வேண்டும், ஏனென்றால் அவர்கள் தானே திருமணஞ்செய்து கொண்டு வாழப்போகிறவர்கள் என்று அவர்களை அவர்கள் இஷ்டப்படியே நடந்து கொள்ள விட்டுவிடக் கூடாது!

ஏனென்றால் அவர்களுக்கு உணர்ச்சிகள் மட்டுமே இருக்குமே தவிர எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கும் திறமை அவர்களை ஆட்கொள்ளாத அளவிற்கு அவர்களுடைய வயதே அவர்களுக்குத் தீங்குகளை இழைத்துவிடக் கூடும். ஆகவே, திருமணம் என்பதை வெறும் வாழ்க்கை ஒப்பந்தமாகக் கருதுவதே மிகத் தவறான கருத்தாகும்.

தங்கள் சௌகரியத்திற்கேற்பவும் விவாகத்தை எந்த வேளையில் வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்றால், அதற்கு ஏன் முகூர்த்த வேளை என்று பெயர் வைக்கவேண்டும்? நாழிகை லக்கினம் இவையெல்லாம் எதற்காக? சுக்கிலபட்சம் கிருஷ்ணபட்சம் எதுவானால் என்ன? ஆடி அமாவாசையாகத் தானிருந்தாலென்ன? எந்தயோகமானால்தான் என்ன? எந்த மாதமானால்தான் என்ன? சந்திர சூரிய கிரகணமாக இருந்தால்தான் என்ன?

ராகுகாலமாகவோ, எமகண்டமாகவோ இருந்தால்தான் என்ன? நினைத்தபடி இஷ்டம் போல விவாகத்தைச் செய்து கொள்ளலாமே? ஏன் இந்த வீண் சிரமங்கள்! சுப முகூர்த்தகாலம், நல்ல சுபவேளை என்று எதற்காகத் தேடிக் கொண்டிருக்கவேண்டும்?" என்று யோசித்தால், இத்தனை நூற்றாண்டுகளாக நமது சமுதாயத்தில் பின்பற்றப்படும் விவாகம் செய்வதற்கான அத்தனை விஷயங்களுமே அத்தியாவசியமானவை என்ற முடிவுக்கு நாமே வந்து விடுவோம்.

இனி, விவாக சுப முகூர்த்தங்களுக்குரிய நல்லவேளை, நல்லகாலம், நல்ல லக்கினம் இவைகளைப் பற்றிய நமது நாட்டு மகரிஷிகளும், பெரியோர்களும் ஜோதிட சாஸ்திரங்களில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதை நாம் சற்று ஆராய்ந்து பார்ப்போமாக.

நமது தேசத்தின் பெருமைக்குரிய மகரிஷிகளும் தவ முனிவர்களும், நமது மக்களுக்குரிய சுபாசுப கர்மாக்களில், சுபகாரியங்கள் என்றும் புண்ணிய காரியங்கள் என்றும் இருவகையாகப் பிரித்து வைத்து இருக்கிறார்கள். அவைகளை முறைப்படி நடத்துவதற்குரிய விதிமுறைகளையும் வேண்டிய காலத்தையும் வேளைகளையும் அவர்களே நிச்சயித்து நிர்ணயித்து இருக்கிறார்கள். இந்த விஷயங்களைப் பற்றியே, தனியாக மகரிஷிகளின் முகூர்த்த கிரந்தங்கள் என்று நூல்களில் வெகு விரிவாக எழுதப் பெற்றுள்ளன.

சிராத்தாதிகள், ஜபம், தபம், யாகம், யக்ஞம் சாதுர்மாஸ சங்கல்பம், தர்ப்பணம், தேவதா பிரதிஷ்ட ஆலய நிர்மாணம், விரதம், மந்திர தந்திரங்களை அனுஷ்டித்தல் போன்ற மோட்ச சாதனமான காரியங்களே புண்ணிய காரியங்களாகும். இவற்றில் சிலவற்றுக்கு தகுந்த காலம் தட்சணாயமும் கிருஷ்ண பட்சமும் பகல் பன்னிரண்டு மணிக்கு மேற்பட்ட சமய லக்கினங்களும் மிகவும் சிலாக்கியமாகவும் சிறப்பானதாகவும் சிரேஷ்ட மானதாகவும் சொல்லப்பட்டுள்ளன.

மேலே குறிப்பிட்ட காலங்களில் விவாகாதி சுப காரியங்களைச் செய்யக் கூடாதென்று சொல்லப் படுகிறது. தெய்வீகமாக ஏற்படக்கூடிய சீமந்தத்தைத் தவிர அநேகமாக வேறு எந்த சுப முகூர்த்தங்களையும் தட்சணாயனத்தில் விசயமறிந்தவர்கள் யாருமே செய்ய மாட்டார்கள். இது தான் மரபு முறை!

சூரியகதி சிறப்பாகவும் தீட்சண்யமாகவும் விருத்தியடைந்துவிடும் காலமாகிய உத்திராயணத்திலும் சந்திரன் வளர்ந்து வரும் வளர்பிறை சுக்கில பட்சத்திலும் தான் சுபகாரியங்களைச் செய்ய வேண்டும் என்பது மகரிஷிகளின் ஆக்ஞையாகும்.

இதுவே, விவாக சுபமுகூர்த்த லக்கினங்களும் சூரியன் விருத்தியாகவும் சிறப்பாகவும் கதிர்வீசும் பகல் 12 மணிக்குள்ளாகவே, பூர்வாஹ்நத்தில் இருக்க வேண்டும். இதுதான் சாஸ்திர சம்மதமானது. பெரியோர்கள் அனுஷ்டித்து வருவது. அண்மைக்காலம் வரையில் நம்முடைய முன்னோர்களும் இதனையே அனுஷ்டித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். இவ்வாறு நடத்தப்பெறும் விவாக முகூர்த்தங்களுக்கு விகிதம் என்று பெயர். இவைதான் தர்மமானவை, சுப பலன்களை அளிக்கக் கூடியவை. இந்த முற்பகல் 12 மணி காலத்திற்குள் பலமில்லாத லக்கினமானாலுங் கூட சுபமுகூர்த்தங்களைச் செய்யலாம். இதனால் சகலவிதமான சுபமான பலன்களும் மங்களமும் உண்டாகும். எனவே, விகிதம் என்றால் தர்ம நியாயமானது, சாஸ்திர யுத்தமானது என்றே நாம் கருதவேண்டும்.

நமது பாரத நாட்டில், விந்திய மலைக்கு வடக்கில் உள்ளவர்கள் பஞ்ச கௌடர்கள், விந்திய மலைக்குத் தெற்கில் உள்ளவர்கள் பஞ்சத்திராவிடர்கள். இவர்களில் தெற்கில் வசிப்பவர்கள் வசிக்குமிடத்துக்கும் நடைமுறைக்கும் அஸ்மான்வர்த்தமானம் என்றும் அவர்கள் சாலி வாகன சகாப்தத்தைப் பின்பற்றுபவர் களுமாவர். இவர்களுக்கு உண்டான, வேதாகம சாஸ்திர

முறைப்படி விவாக முகூர்த்தம் பகற்காலமும் பூர்வான்னமான நடுப்பகல் 12 மணிக்குள்ள கால லக்கினமாகும். விந்தியத்துக்கு வடக்கிலுள்ளவர்கள் வசிக்குமிடத்திற்கு ஆர்யாவர்த்தம். அவர்கள் அனுசரிப்பது விக்கிரமார்க்க சகாப்தம்.

விக்கிரமாதித்யன் என்று அரசனுக்கு மகாகாளி இஷ்ட தெய்வமாகையால், அவர்கள் விவாகங்களை அர்த்த ராத்திரியிலும் அதற்கு முற்பட்ட முன்னிரவு நேரங்களில் விவாக முகூர்த்தங்களை வைத்துக் கொள்வார்கள். (நம்நாட்டில் வசிக்கும் மார்வாரிகள் இரவு நேரங்களில்தான் விவாக முகூர்த்தங்களை நடத்துவதை நாம் காணலாம். இந்தப் பாரத தேசத்திலேயே வடக்கிலும் தெற்கிலும் மக்கள் நடைமுறையில் விவாக முகூர்த்தங்களை, இத்தகைய நேர்மாறான வகையில் வைத்துக் கொள்கிறார்கள். இதுதான் தேசாச்சாரம். இதுபோல, விவாகங்களை அர்த்தராத்திரியில் செய்யலாம் என்று வட நாட்டுக்காரர்கள் கருதுகிறார்கள். அவர்களின் விவாகமுறைகளும் மந்திரங்களும் தேசாச்சாரமும் முற்றிலும் வேறானவை. இது விக்கிரம சகாப்தத்தைப் பின்பற்றுவோரின் முறைகளாகும்.

சாஸ்திர சம்பிரதாயங்களை அனுசரிப்பவர்களும் வைதீக முறைப்படி ஒழுங்கான முறையில் திருமணம் நடத்த விரும்புகிறவர்கள் யாவருமே, விவாக சுபமுகூர்த்தங்களை உத்திராயணத்தில் தான் வைத்துச் செய்ய வேண்டும். சுக்கில பட்சத்தில் அதாவது வளர் பிறைக்காலத்தில்தான் விவாக முகூர்த்தங்களை நிச்சயிக்க வேண்டும். பகல் 12 மணிக்குள் நல்ல லக்கினம் கிடைக்காவிட்டால் உதய லக்கினத்திலேயும் (அதாவது அதிகாலை 5.30 மணி முதல் 6.30 மணி வரை அபிஜித் முகூர்த்தம் என்று சொல்லப் பெறும் உஷத்புண்ய காலத்தில்) பகல் 11.30 மணிக்குமேல் நடுப்பகல் 12 மணிக்குள்ள காலம். இதில் எந்த லக்கினமானாலும் விவாகத்தைச் செய்விக்கலாம். இப்படிச் செய்தால், அந்த தம்பதிகள் புத்திர பௌத்திராபிவிருத்தியுடன் சுகமாக,

சௌக்கியமாகவும், சௌபாக்கியமாகவும் வாழ்ந்து வருவார்கள். இப்படிச் செய்வதுதான் சாஸ்திர நியாயமானது. பகலில் 12 மணிக்கு மேற்பட்ட அபராஹ்னத்தில் செய்யும் விவாகமும் அதைப் போன்ற சுபகரமான விஷயங்களும் திருப்திகரமான சேம பலன்களை, எந்தவிதத்திலும் அளிக்கவில்லை என்பதால் தானே, இத்தனை நூற்றாண்டுகளாக வாழ்ந்துவரும் இந்திய மக்கள் சமுதாயம் இந்த சாஸ்திரோக்தமான விஷயங்களை அனுசரித்து வருகிறது.

ஆகவே, சாஸ்திர முறைப்படி விவாக முகூர்த்தங்களை நல்ல சுபவேளையில் நடத்து விக்க இஷ்டப் படுவோர்கள், நடுப்பகல் 12 மணிக்கு உள்ளாகத்தான் விவாகங்களைச் செய்ய வேண்டும். இதுவே உத்தமம். இப்படித்தான் பலலட்சக் கணக்கான விவாகங்கள் நமது தேசத்தில் நடந்து, வமிசாவழிகள் பெருகி வளர்ந்து வந்துள்ளன.

விவாக சுப முகூர்த்தங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கான பூர்வீக நூல்களில் கூறப்படும் சில விஷயங்கள் வாசகர்களுக்கு பெரிதும் பயன்படக் கூடும்.

உத்திராயணத்தில் விவாகம் செய்வதுதான் மிகவும் சிறப்புடையது, க்ஷேமகரமானது. அதுவும் கோட்சாரத்தில் குரு, ஸ்திரீயின் ஜன்ம ராசிக்கு 2,4, 5, 7, 9, 11 ஆகிய இடங்களில் இருப்பது விசேஷமாக மிகவும் நல்லது, மகத்தான சுபபலன்களை அளிக்கும்.

அதுபோலவே நட்சத்திரங்களில் ரோகிணி, மிருகசீரிஷம், மகம், உத்திரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம் உத்திரட்டாதி, ரேவதி ஆகிய இந்த நட்சத்திரங்கள் மிகவும் உத்தமமான ஊர்த்துவமுக நட்சத்திரங்களாகும்.

திதிகளில், சுக்கில பட்சத் திதியை, திரிதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, திரயோதசி, ஆகியவை நல்ல திதிகள். கிருஷ்ணபட்ச பிரதமை, சஷ்டி, பௌர்ணமி ஆகிய இந்தத் திதிகள் மத்திமம். கிருஷ்ணபட்ச

அஷ்டமிக்குப் பிறகு விவாகம் முதலிய எந்த சுபங்களும் நடத்துவதற்கு உசிதமல்ல.

இதுபோலவே, வாரங்களில் திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகியவைகள் மிகவும் உத்தமம்.

லக்கினங்களில் மிதுனம், கன்னி, துலாம் ஆகிய இந்த லக்கினங்கள் உத்தமமானவை. ரிஷபம், கடகம், சிம்மம், தனுசு, கும்பம் மத்திமமானவை. மேஷம், விருச்சிகம், மகரம், மீனம் அதமமானவை. மேஷத்தில் விவாகம் செய்யவே கூடாது. "மிருத்யுர்மேஷ எமென சிம்ம லக்கினமும் அப்படியே தான் என்றும் கூறப்பட்டுள்ளன.

திருமண முகூர்த்த லக்கினத்திற்கு 7ஆமிடமான சப்தஸ்தான சுத்தி மிகவும் அவசியமாக இருக்க வேண்டும். சப்தம ஸ்தானத்தில் எந்தக் கிரகங்களும் இல்லாமல் இருந்தால் மிகவும் நல்லது. அந்த ஸ்தானத்திற்கு சுப வீக்ஷண்யம் இருப்பது நல்லது. சப்தமஸ்தானத்தில் பாவக்கிரகங்கள் இருக்கவே கூடாது. திருமண முகூர்த்தத்திற்கு லக்கின சுத்தியும் முக்கியமாக இருக்கவேண்டும். ஆனால் இந்த லக்கின சுத்தி நிஷேகத்திற்குத்தான் மிகவும் முக்கியமாகும்.

உதய காலத்திலேயே லக்கினத்தை நிச்சயித்தால், அதற்கு திதிதோஷம் கிடையாது. அபிஹித் முகூர்த்த காலத்தில் நட்சத்திரம் கிடையாது. ராத்திரியில் வாரதோஷம் கிடையாது. இதனை அனுசரித்தே சுபகாரியங்களை நடத்தலாம். நட்சத்திரங்களில் மிருகசீரிஷம், அனுஷம், மகம் ஆக இந்த மூன்று நட்சத்திரங்களில் மற்ற எந்தவிதமான பலமில்லாவிட்டாலும் விவாகாதி சுபங்களைச் செய்யலாம்.

சுவாதி, மிருகசீரிஷம், அனுஷம், மகம் ஆகிய நான்கும் வதூவரர்களுக்கு ஜன்ம நட்சத்திரமானாலும் 27வதானாலும், மற்றபடி, விபத், பிரத்யாம், முதலிய தாரைகளாயினும் தோஷமில்லை, திருமணம் செய்யலாம் என்று ஒரு விதியுள்ளது. அந்த லக்கினத்தில்

குருவாவது சுக்கிரனாவது சுபயோகத்தில் வலிமையாக இருந்தால் சகல தோஷங்களும் நிவர்த்தியாகின்றன. இந்த சாஸ்திர குறிப்பை ஆதாரமாகக் கொண்டு, சில சமயங்களில் விவாகம் முதலிய சுபங்களை நடத்தலாம்.

திருமணப் பொருத்தங்களில், யௌவனம், தனசம்பத்து அதிகாரம் ஆகிய இம்மூன்றையும் நன்றாக ஆராய்ந்து திருமணம் செய்வது நல்லவையாகும்.

## 3. திருமணம் விரைவில் நிகழ

திருமணம் விரைவில் நிகழ விரும்புபவர்களும் அவர்களுடைய பெற்றோர்களும் பின்வரும் தேவாரம் திருப்புகழ்கள், வட மொழிச் சுலோகங்களை நாள்தோறும் பாராயணம் செய்து இறைவனை வழிப்பட்டால் மிக விரைவில் திருமணம் கூடத் துணைபுரியும்.

### திருமணஞ்சேரி

அப்பர் தேவாரம்

1. பட்ட நெற்றியர் பாய்புலித் தோலினர்
நட்ட நின்று நவில்பவர் நாடொறும்
கிட்டர் வாழ்திரு வார்மணஞ் சேரிஎம்
வட்ட வார்சடை யார் வண்ணம் வாழ்த்துமே

2. துன்னு வார்குழ லாள்உமை யாளொடும்
பின்னு வார்சடை மேற்பிறை வைத்தவர்
மன்னு வார்மணஞ் சேரி மருந்தினை
உன்னு வார்வினை யாயின ஓயுமே.

3. புற்றில் ஆடாவு ஆட்டும் புனிதனார்
தெற்றி னார்புரந் தீயெழச் செற்றவர்
சுற்றி னார்மதில் சூழ்மணஞ் சேரியார்
பற்றி னார்அவர் பற்றவர் காண்மினே

4. மத்த மும்மதி யும்வளர் செஞ்சடை
முத்தர் முக்கணர் மூசுஅர வம்அணி
சித்தர் தீவணர் சீர்மணஞ் சேரிஎம்
வித்தர் தாம்விருப் பாரை விருப்பரே

5. துள்ளு மான்மறி தூமழு வாளினர்
வெள்ள நீர்கரஞ் தார்சடை மேலவர்
அள்ளல் ஆர்வயல் சூழ்மணஞ் சேரிஎம்
வள்ள லார்கழல் வாழ்த்தல் வாழ்வாவதே

6. நீர்பரந்த நிமிர்புன் சடையின்மேல்
ஊர் பரந்த உரகம், அணிபவர்
சீர் பரந்த திருமணஞ் சேரியார்
ஏர் பரந்தங் கிலங்குசூ லத்தரே

7. சுண்ணத் தர்சுடு நீறுகந்து ஆடலார்
விண்ணத் தம்மதி சூடிய வேதியர்
மண்ணத் தம்முழவு ஆர்மணஞ் சேரியார்
வண்ணத் தம்முலை யாள்உமை வண்ணரே.

8. துன்ன ஆடையர் தூமழு வாளினர்
பின்னு செஞ்சடை மேற்பிறை வைத்தவர்
மன்னு வார்பொழில் சூர்மணஞ் சேரிஎம்
மன்ன னார்கழலே தொழ வாய்க்குமே

9. சித்தர் தேவர்கள் மாலொரு நான்முகன்
பத்தர் சேர்அமண் கையர் புகழவே
மத்தர் தாம்அறி யார்மணஞ் சேரிஎம்
அத்த னார்சுடி யார்க்கல்லல் இல்லையே

10. கடுத்த மேனி அரக்கன் கயிலையை
எடுத்த வன்னெடு நீள்முடி பத்திறப்
படுத்த லும் மணஞ் சேரி யருள் எனக்
கொடுத்த னன் கொற்ற வாளொடு நாமமே.

## திருமணஞ்சேரி லி திருஞானசம்பந்தர் தேவாரம்

1. அயிலாரும் அம்பத னால்புர முன்றெய்து
   குயிலாரும் மென்மொழி யாள்வுரு கூருகி
   மயிலாரு மல்கிய சோலை மணஞ்சேரிப்
   பயில்வானைப் பற்றிநின் றார்க்கில்லை பாவமே.

2. விதியானை விண்ணவர் தாந்தொழுது ஏத்திய
   நெதியானை நீள்சடை மேல்நிகழ் வித்தவான்
   மதியானை வண்பொழில் சூழ்ந்த மணஞ்சேரிப்
   பதியானைப் பாடவல் லார்வினை பாறுமே.

3. எய்ப்பனார்க்கு இன்புறு தேன்அளித் துறிய
   இப்பாலாய் என்னையும் ஆள உரியானை
   வைப்பான மாடங்கள் சூழ்ந்த மணஞ்சேரி
   மெய்ப்பானை மேவிநின் றார்வினை விடுமே.

4. விடையானை மேலுலகு ஏழும்கப் பாரெலாம்
   உடையானை ஊழிதோ றூழி உளதாய
   படையானைப் பண்ணிசை பாடு மணஞ்சேரி
   அடைவானை அடையவல் லார்க்கில்லை
   அல்லலே.

5. எறியார்பூங் கொன்றையி னோடும் இளமத்தம்
   வெறியாரும் செஞ்சடை யாரம் மிலைத்தானை
   மறியாரும் கையுடை யானை மணஞ்சேரிச்
   செறிவானைச் செப்பவல் லார்க்கிடர் சேராவே.

6. மொழியானை முன்னொரு நான்மறை ஆறங்கம்
   பழியாமைப் பண்ணிசை யான பகர்வானை
   வழியானை வானவர் ஏத்து மணஞ்சேரி
   இழியாமை யேத்தவல் லார்க்கெய்தும் இன்பமே.

7. எண்ணானை எண்ணமர்சீர் இமையோர் கட்குக்
   கண்ணானைக் கண்ணொரு மூன்றும்
   உடையானை
   மண்ணானை மாவயல் சூழ்ந்த மணஞ்சேரிப்

பெண்ணானைப் பேசநின் றார்பெரி யோர்களே.

8. எடுத்தானை எழில்முடி எட்டும் இரண்டும்தோள்
கெடுத்தானைக் கேடிலாச் செம்மை யுடையானை
மடுத்தார வண்டிசை பாடும் மணஞ்சேரி
பிடித்தாரப் பேணவல் லார்பெரி யோர்களே.

9. சொல்லானைத் தோற்றம்கண் டானும் நெடுமாலும்
கல்லானைக் கற்றன சொல்லித் தொழு தோங்க
வல்லார்நன் மாதவர் ஏத்தும் மணஞ்சேரி
எல்லாமாம் எம்பெரு மான்கழல் ஏத்துமே.

10. சற்றேயுந் தாமறி வில்சமண் சாத்தியர்
சொற்றேயும் வண்ணமோர் செம்மை உடையானை
வற்றாத வாவிகள் சூழ்ந்த மணஞ்சேரி
பற்றாக வாழ்பவர் மேல்வினை பற்றாவே.

11. கண்ணாருங் காழியர் கோன்கருத் தார்வித்த
தண்ணார் ஞானசம் பந்தன் தமிழ்மாலை
மண்ணாரும் மாவயல் சூழ்ந்த மணஞ்சேரி
பண்ணாரப் பாடவல் லார்க்கில்லை பாவமே.

## வாரணம் ஆயிரம் லி ஆண்டாள் நாச்சியார்

1. வாரணம் ஆயிரம் சூழ வலம் செய்து
நாரணன் நம்பி நடக்கின்றான் என்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறம் எங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான்.

2. நாளை வதுவை மணமென்று நாளிட்டுப்
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்
கோளரி மாதவன் கோவிந்தன் என்பானோர்
காளை புகுதக் கனாக் கண்டேன் தோழீ! நான்.

3. இந்திரன் உள்ளிட்ட தேவர் குழாம் எல்லாம்
வந்திருந்து என்னை மகள் பேசி மந்திரித்து
மந்திரக் கோடி உடுத்தி மணமாலை

சுந்தரி சூட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான்.

4. நால் திசை தீர்த்தம் கொணர்ந்து நனி நல்கி
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லார் எடுத்தேத்தி
பூப்புனை கண்ணிப் புனிதனோடு என்று அன்னைக்
காப்புநாண் சூட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான்.

5. கதிரொளி தீபம் கலசமுடன் ஏந்திச்
சதிரிள மங்கையர் தாம் வள் தெதிர்கொள்ள
மதுரையார் மன்னன் அடிநிலைதொட்டெங்கும்
அதிரப் புகுதக் கனாக் கண்டேன் தோழீ! நான்.

6. மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழீ! நான்.

7. வாய்நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணப் படுத்துப் பரிதிவைத்துக்
காய்சினமாகளிறு அன்னான் என் கைபற்றித்
தீவலம் செய்யக் கனாக் கண்டேன் தோழீ! நான்.

8. இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மை உடையவன் நாராயணன் நம்பி
செம்மை உடைய திருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக் கண்டேன் தோழீ! நான்.

9. வரிசிலை வாள் முகத்து என்னைமார் தாம் வந்திட்டு
எரிமுகம் பாரித்து என்னை முன்னே நிறுத்தி
அரிமுகன் அச்சுதன் கைமேல் என் கைவைத்துப்
பொரிமுகம் தட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான்.

10. குங்குமம் அப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து
மங்கல வீதி வலம் செய்து மணநீர்
அங்கவனோடும் உடன் சென்றங் கானை மேல்

மஞ்சனம் ஆட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான்.

11.ஆயனுக் காகத்தான் கண்ட கனா வினை
வேயர் புகழ் வில்லிபுத்தூர்க் கோன கோதை சொல்
தூயதமிழ் மாலை ஈரைந்தும் வல்லவர்
வாயு நன் மக்களைப் பெற்று மகிழ்வரே.

## சுந்தரர் தேவாரம் - திருக்கலய நல்லூர்

குரும்பை முலை மலர்க் குழலி கொண்டதவம் கண்டு
குறிப்பினொடும் சென்றவன்தன் குணத்தினை
நன் க
றிந்து
விரும்புவரம் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவியஊர்
வினவி
ல்

அரும்பருகே கரும் பருவ அறுபதம்பண் பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில்சூழ்
அயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கள் முகமலரும் கலயநல்லூர் காணே.

## நல்ல கணவரையும் புத்திரரையும் பெற்றுத் தரும் சுலோகங்கள்:

1. ஜநகஸ்யவச:ச்ருத்வா பாணீன் பாணிபி:அஸ்புருசன்
சத்வாரஸ்தே சதஸ்ரூணாம் வஸிஷ்டஸ்ய
மதேஸ்தி
தா:

2. சுரத்யாயநி மஹாமாயே மஹாயோகினி
அதீச்வரி
ஆயுஷ்மந்தம் ச ஸூகுணம் பதிம் மே குருதே நம:

3. பதிம் மனோரமம் தேஹி
மகோவ்ருத்தானுஸாரிணம்
தாரணம் துக்க சம்சார ஸாகரஸ்ய குலோத்பவம்

4. பத்நீம் மனோரமாம் தேஹிமனோ வ்ருத்தா
நுசாரிணீ
ம்
தாரிணீம் துக்க சம்சார ஸாகரஸ்ய குலோத்ப் பவாம்

5. கௌஸல்யா அஜநயத் ராமம் ஸர்வ லக்ஷண
சம்யுதம்
விஷ்ணோ:
அர்த்தம் மஹாபகம் புத்ரம் ஐஷ்வாக வர்த்தநம்.

## அருணகிரிநாதர் திருப்புகழ்

1. விறல்மார னைந்து மலர்வாளி சிந்த வெயில்காய
மிகவானில் இந்து
மிதவாடை வந்து தழல்போல் ஒன்ற வனசகூற
வினைமாதர் தம்தம்
குறவாணர் குன்றில் உறைபேதை கொண்ட
மயல் தீர கொடிதான துன்ப
குளிர்மாலை யின்கண் அணிமாலை தந்து
குறுகாயோ குறைதீர வந்து குறுகாயோ
மறிமான் உகந்த இறையோன் மகிழ்ந்து மதியாளா
வழிபாடு தந்த
மலைமாவு இந்த அலைவேலை அஞ்ச அதிதீரா
வடிவே லெறிந்த
அறிவா லறிந்துன் இருதாள் இறைஞ்சம்
களைவோனே! அடியார் இடைஞ்சல்
அழகான செம்பொன் மயில்மேல் அமர்ந்து
பெருமாளே அலைவாய் உகந்த

2. துள்ளுமத வேள்கைக் கணையாலே
தொல்லைநெடு நீலக் கடலாலே

மெள்ளவரு சோலைக் குறிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே
தெள்ளுதமிழ் பாடத் தெளிவோனே
செய்யகும ரேசத் திறலோனே
வள்ளல்தொழும் ஞானக் கழலோனே
வள்ளிமண வாளப் பெருமாளே!

3. நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கொண்ட பேதைக்குன் மணநாறும்
மார்தங்கு தானரத்தந் தருள்வாயே
வேல்கொண்டு வேலைப்பண் டெறிவோனே
வீரம்கொள் சூரர்க்கும் குலகாலா
நாலந்த வேதத்தின் பொருளோனே
நானென்று மார்தட்டும் பெருமாளே!

4. வாரிமீ தோயமு திங்களாலே
மாரவே ளேவிய அம்பினாலே
பாரெலாம் ஏசிய பண்பினாலே
பாவியே னாவிம யங்கலாமோ
சூரனீள் மார்புதொ ளைத்தவேலா
சோதியே தோகைய மர்ந்தகோவே
மூர்மால் யானை ணர்ந்தமார்பா
மூவர்தே வாதிகள் தம்பிரானே!

5. கொடிய மதவேள்கைக் கணையாலே
குறைகொ ணெடுநீலக் கடலாலே
நெடிய புகழ் சோலைக் குயிலாலே
நிலைமைகெடு மானைத் தழுவாயே
கடியாவு பூணர்க் கினியோனே
கலைகள் தெரி மாமெய்ப் புலவோனே
அடியவர்கள் நேசத் துறைவேலா
அறுமுகவி நோதப் பெருமாளே!

6. பட்டுப் படாத மதனாலும்
பக்கத்து மாதர் வசையாலும்

சுட்டுச் சுடாத நில்வாலும்
துக்கத்தி லாழ்வ தியல்போதான்
தட்டுப் படாத திறல்வீரா
தர்க்கித்த சூரர் குலகாலா
மட்டுப் படாத மயிலோனே
மற்றொப் பிலாத பெருமாளே!

சுபம்

## பிரேமா பிரசுர வெளியீடுகள்

ஸ்ரீ விநாயகர் புராணம், ஸ்ரீ கந்த புராணம், ஸ்ரீ தேவி பாகவதம், ஸ்ரீ சிவமஹா புராணம், ஸ்ரீ அறுபத்து மூவர் கதைகள், ஸ்ரீ விஷ்ணு புராணம், ஸ்ரீ கருட புராணம், ஸ்ரீ குருவாயூரப்பன், ஸ்ரீ வன்னிய புராணம், ஸ்ரீ வசவ புராணம், ஸ்ரீ பன்னிரு ஆழ்வார்கள் கதைகள், ஸ்ரீ ஆதிசங்கரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ நாரதர் புராணம், ஸ்ரீ காஞ்சி காமகோடி புராணம், ஸ்ரீமத்பாண்டுரங்க பக்த விஜயம், திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் தேவாரம் (1 முதல் 6 திருமுறைகள் 6 தனிதனி புத்தகங்களில்), திருமந்திரம், திருவாசகம்(பெரிய எழுத்தில்) திருப்புகழ், கம்ப ராமாயணம், மகாபாரதம், ஸ்ரீ ரமண மகரிஷி, ஸ்ரீ நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திருஅருட்பிரகாசவள்ளலார் சரிதம், வள்ளலாரின் திருஅருட்பா 1 முதல் 6 திருமுறைகள், மற்றும் இதர புராண நூல்கள், கதைகள், பொன்மொழிகள், சிந்தனையாளர் நூல்கள், ஜோதிட நூல்கள், சமுக, சரித்திர, மர்ம நாவல்ளின் விவரங்கள் கொண்ட இலவச விலைப் பட்டியலுக்குத் தொடர்பு கொள்க.

**பிரேமா பிரசுரம்**

59, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம்,

சென்னை – 600 024.

✆: 044 24800325, 24833180, cell: 9486000325

e-mail : aruram@premapirasuram.com.